Registered as a news paper.

பக்கங்கள்: பன்னிரண்டு

விலை: ரூபா 7.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 சித்திரை 5 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஸபர் 26 (17.04.2004) சனிக்கிழமை இதழ் :199

ஹெனி

பல், மூக்குக் கண்ணாடியகம்

※ கண் பரிசோதித்து கண்ணாடி பெற்றுக் கொள்ள

※ உறுதியான பற்களைக் கட்டிக்கொள்ள

※ மிதப்பு பற்களுக்கு கிளிப் செய்துகொள்ள

நீங்கள் நாட வேண்டிய ஒரே இடம்

கண்டி வீதி, சாவகச்சேரி. | பிரதான வீதி, பருத்தித்துறை

540, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்.

# ஜனாதிபதி சந்திரிகாவின் செயற்பாடுகளால் தமிழ்மக்களின் மத்தியில் அவநம்பிக்கை!

## கூட்டமைப்பு நாடாளுமன்றக் குழு கூட்டத்தில் விசனம்

(கொழும்பு)

**தமிழ் மக்கள் மத்தியில் நல்லெண்ணத்தை வெளிக்காட்டாது அவ நம்பிக்கையை ஏற்படுத்தும் வகையில் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க நடந்து கொண்டுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களின் குழுக் கூட்டத்தில் விசனம் தெரிவிக்கப்பட்டது.**

**இலங்கை தமிழரசுக் கட்சியின் கீழ் போட்டியிட்டு நாடாளுமன்றத்துக்குத் தெரிவான உறுப்பினர்களில் 18 பேர் கலந்துகொண்ட கூட்டமைப்பின் குழுக் கூட்டம் நாடாளுமன்றக் கட்டடத் தொகுதியில் நேற்றுப் பிற்பகல் நடைபெற்றது.**

இந்தக் கூட்டத்தின் பின்னர் கூட்டமைப்பின் இணைப்பாளர் சுரேஷ் பிரேமச்சந்திரன் கருத்து வெளியிட்டபோதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தகவல் வெளியிடுகையில் -

தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட டக்ளஸ் தேவானந்தா போன்றவர்களுக்கு அமைச்சுப் பதவிகளைக் கொடுத்ததன் மூலம் இது நிரூபணமாகியுள்ளது.

தமிழ் மக்களுக்கான தன்னாட்சி நிர்வாக சபை ஒன்றை உருவாக்குவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு தமிழ் மக்கள் ஆணை வழங்கியுள்ளமை குறித்து இந்தக் கூட்டத்தில் பிரஸ்தாபிக்கப்பட்டது.

ஜனாதிபதி அந்த ஆணையை புறக்கணித்து, தமிழ் மக்களால் நிராகரிக்கப்பட்ட ஒருவருக்கு அமைச்சுப் பதவிகளை வழங்கியதன் மூலம் சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கு ஆக்கபூர்வமான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

எதிர்வரும் 22 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் இடம்பெறவுள்ள சபாநாய

(12 ஆம் பக்கம் பார்க்க)

## கூட்டமைப்பு எம்.பிக்கள் தமிழ்ச்செல்வன் சந்திப்பு

### செவ்வாய்க்கிழமை நடைபெறும்

தமிழ்த்தேசிய கூட்டமைப்பின் 22 நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கும், விடுதலைப் புலிகளுக்குமிடையிலான சந்திப்பு எதிர்வரும் செவ்வாய்க்கிழமை கிளிநொச்சியில் இடம் பெறவுள்ளது.

இந்தச் சந்திப்பில் வடக்கு-கிழக்கில் இருந்து தெரிவான 20 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தேசிய பட்டியல் மூலம் தெரிவான மா.க.ஈழவேந்தன், ஜோசப் பரராஜசிங்கம் ஆகியோரும் பங்குபற்றுவர்.

கூட்டமைப்பின் எதிர்காலச் செயற்பாடுகள், விடுதலைப் புலிகளும் கூட்டமைப்பும் இணைந்து முன்னெடுக்கவிருக்கும் திட்டங்கள் ஆகியன தொடர்பாக இந்தச் சந்திப்பில் விரிவாக ஆராயப்படவிருக்கின்றன.

கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் குழுக்கூட்டம் நேற்று கொழும்பில் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

## மட்டு-அம்பாறை மாவட்டங்களில் அரசியல் நடவடிக்கைகள் ஆரம்பம்!

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மற்றும் அம்பாறை மாவட்டங்களில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியற்துறை நடவடிக்கைகள் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அத்துடன், மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்களில் உள்ள பிரதேசங்களுக்கான அரசியற்துறைப் பொறுப்பாளர்களும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மட்டக்களப்பு நகர அரசியல் பொறுப்பாளராக சேனாதிராசா, அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக குயிலின்பன், குடும்பிமலை கோட்ட அரசியற் துறைப் பொறுப்பாளராக தவன், ஆண்டான்குள அரசியற்துறைப் பொறுப்பாளராக சலீம்; பட்டிருப்பு கோட்ட அரசியற்துறைப் பொறுப்பாளராக செல்வா, மாவடிமுன்மாரி கோட்ட அரசியற் துறைப் பொறுப்பாளராக உதயராஜ் ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

இது குறித்து கருத்துத் தெரிவித்த மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் நேற்று முதல் மட்டக்களப்பு அம்பாறை மாவட்டங்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## வின்சர் தியேட்டருக்குப் பின்புறமாக

# கிணற்றிலிருந்து 2 சடலங்கள் நேற்றுக்காலை கண்டுபிடிப்பு!

### யாழ்.நகரில் பரபரப்பு

யாழ்-நகரில் வின்சர் படமாளிகைக்குப் பின் புறமாக உள்ள கிணற்றிலிருந்து பழுதடைந்த நிலையில் இரண்டு ஆண்களின் சடலங்கள் நேற்று பொலிசாரால் மீட்கப்பட்டன.

யாழ்.நகரில் நேற்றுப் பெரும் பரபரப்பை ஏற்படுத்திய இச்சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது-

யாழ்-நகரிலுள்ள வின்சர் படமாளிகையில் கூட்டுறவு மொத்த விற்பனவு ஸ்தாபனத்தின் கிளை ஒன்று இயங்கி வருகிறது.

இந்தப் படமாளிகையின் பின்புறம் பாவனையின்றி இருந்து வந்தது. இந்தநிலையில் நேற்றுக் காலை இப்பகுதியில் இருந்து துர்நாற்றம் வீசியதை அடுத்து பொதுமக்கள் அங்கு சென்று பார்த்தனர்.

இதன் போது வின்சர் படமாளிகைக்குப் பின்புறமாக



இருந்த கிணற்றிலிருந்தே துர்நாற்றம் வீசுவது கண்டு பிடிக்கப்பட்டது.

கிணற்றினுள் ஒரு சடலம் இருப்பதும் அவதானிக்கப்பட்டதை அடுத்து இது (12 ஆம் பக்கம் பார்க்க)

கப்பட்டதை அடுத்து இது (12 ஆம் பக்கம் பார்க்க)

# விடுதலைப் புலிகளின் தலைவருக்கு அல்-ஜெஸிரா பாராட்டு தெரிவிப்பு!

(அம்மான்)

தமிழீழ தேசியத்தலைவர் பிரபாகரனுக்கு, அரபு செய்தி நிறுவனமான 'அல்-ஜெஸிரா' பாராட்டுக்களைத் தெரிவித்துள்ளது.

அல்-ஜெஸிரா வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் -

மட்டக்களப்பில் கருணாவால் தோற்றுவிக்கப்பட்ட பிரச்சினையை மிகச்சாதுரியமாகக் கையாண்டு இலகுவாக முறியடித்த தமிழீழத் தேசியத் தலைவரும்; தமிழீழ விடுதலைப்புலிகளும் பாராட்டுக்குரியவர்கள்.

மட்டக்களப்பில் தோற்றம் பெற்ற பிரச்சினை, பாரிய இரத்தக்களரியை ஏற்படுத்தும் என்றும், போர்நிறுத்த உடன்பாடு மீறப்பட்டு படைத்தரப்பும் இழுக்கப்படலாம் என்றும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், மிக எளிதாக இந்த விவகாரம் கையாளப்பட்டு- சமாதான நடவடிக்கைகளை எதுவித இடையூறுமின்றி தொடர்வதற்கு வழி செய்த தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எமது மகிழ்ச்சியை தெரிவிக்கின்றோம் என அல்-ஜெஸிரா தெரிவித்துள்ளது.

# மாவடிவேம்பு முகாமூடாக கருணா தப்பிச்சென்றார்!

## தமிழ் அலை கூறுகிறது

(மட்டக்களப்பு)

கருணாவும் அவரது சகாக்களும மாவடிவேம்பு இராணுவ படைமுகாமுக்குச் சென்று அங்கிருந்து பாதுகாப்புடன் பொலனறுவைப் பக்கம் செனறதாக சம்பவத்தை நேரில் கண்ட பொதுமக்கள் தெரிவித்ததாக, மட்டக்களப்பிலிருந்து வெளிவரும் 'தமிழ் அலை' செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த திங்கட்கிழமை பிற்பகல் 7 வாகனங்களில் சென்ற கருணா குழுவினர், வயல் பிரதேசமான கல்லடிச்சேனை என்ற இடத்தில் ஒரு பஜ"ரோ மற்றும் இரு பிக்கப் வாகனங்களை வைக்கோலைப் போட்டு தீ வைத்து எரித்து விட்டு ஏனைய வாகனங்களில் சென்றுள்ளனர்.

மாவடிவேம்பு இராணுவ முகாமிற்கும் வயல் பிரதேசத்திற்கும் இடையிலுள்ள சூனியப் பிரதேசத்தில் வைத்து படையினரின் பாதுகாப்புடன் முகாமுக்கு அழைத்துச் செல்லப்பட்டு அங்கிருந்து இவர்கள்,

(12 ஆம் பக்கம் பார்க்க)

# கொழும்பிலிருந்து திரும்பி வந்த ஜிம்கெலி புலிகளுடன் இணைவு!

## துரையும் சேர்ந்துகொள்ள விருப்பம்

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் கருணா குழுவிலிருந்து செயற்பட்ட ஜிம்கெலி தாத்தா மற்றும் திருமால் ஆகியோர் மீண்டும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டனர்.

கொழும்பில் தங்கியிருந்ததாகத் தெரிவிக்கப்படும் இவ் இருவரும், மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலைக்குச் சென்று விடுதலைப் புலிகளுடன் இணைந்து கொண்டுள்ளதாக அங்கிருந்து கிடைக்கும் செய்திகள் தெரிவித்தன.

அத்துடன் கருணாவின் முக்கிய பொறுப்பாளராக இருந்த துரையும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்துள்ளதாக மேலும் தெரிவிக்கப்படுகிறது.

கருணா அணியில் அரசியல் பொறுப்பாளராக இருந்த விசுவும் தமிழீழ விடுதலைப் புலிகளுடன் மீளவும் இணைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# அரசாங்கத்துடனான உறவுகளை வலுப்படுத்த அமெரிக்கா முயற்சி!

## கதிர்காமருக்கும் அழைப்பு

(கொழும்பு)

கொழும்புடனான இராஜதந்திர நடவடிக்கைகளை அமெரிக்கா தொலைபேசி உரையாடல்கள் மூலம் மேற்கொள்வதாக கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதன்படி, நேற்று முன்தினம் மாலை அமெரிக்கப்பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ் தொலைபேசி வாயிலாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுடன் தொடர்பு கொண்டு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன், தடைப்பட்டுப் போயுள்ள சமாதான முயற்சியும் மீள ஆரம்பிக்கப்பட வேண்டும் எனவும் அவர் கேட்டுக்கொண்டார்.

கடந்த 9 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவலுடனான தொலைபேசி உரையாடலில் ஜனாதிபதி சந்திரிகா சமாதானப் பேச்சுவார்த்தையை மிக விரைவில் தான் ஆரம்பிக்கவுள்ளதாக வலியுறுத்திக்கூறினார் என பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ றிச்சட் ஆர்மிரேஜிடம் இந்த உரையாடலின் போது தெரிவித்தார்.

இந்த உரையாடலின்போது றிச்

(12 ஆம் பக்கம் பார்க்க)

# நீர் தட்டுப்பாடான பிரதேசங்களுக்கு பவுசர்கள் மூலம் வழங்கத் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

நீர்த்தட்டுப்பாடு நிலவக்கூடிய பகுதிகளுக்கு பவுசர்கள் மூலம் நீர் விநியோகிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

யாழ்.செயலகத்தில் நேற்று இடம்பெற்ற நீர் விநியோகம் தொடர்பான கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எட்டப்பட்டுள்ளது.

யாழ்.மாவட்டத்தின் பல பகுதிகளுக்கும், வறட்சிக் காலத்தில் நீர் விநியோகம் செய்யவேண்டியுள்ளது. எனவே, பவுசர்கள் மூலம் நீரினைக் கொண்டு சென்று உடனுக்குடன் விநியோகம் செய்வதுடன், நீர்த்தாங்கிகளை நிறுவி, அதன்மூலம் மக்களுக்கு நீர்விநியோகம் மேற்கொள்வதே சிறந்த பணியாக அமையும்.

அதற்கான நடவடிக்கையே மேற்கொள்ளப்படவுள்ளது.

இதற்கு வேண்டிய நீர்த்தாங்கிகளை அகதிகளுக்கான ஐ.நா. உயர்ஸ்தானிகராலயத்திடமிருந்து பெறுவதென முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இதேவேளை - நெடுந்தீவு, ஊர்காவற்றுறைப் பகுதிகளுக்கு ஏற்கனவே, இவ்வாறு நீர்விநியோகம் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

புங்குடுதீவு, வேலணை போன்ற பகுதிகளுக்கு கடந்த 15 ஆம் திகதி முதல் நீர்விநியோகம் ஒழுங்காக இடம்பெறத்தொடங்கியுள்ளது.

ல்கைதடி, நாவற்குழி, சாவகச்சேரி, கோப்பாய், அச்சுவேலி ஆகிய பகுதிகளுக்கு விரைவில் நீர்த்தாங்கிகள் நிறுவப்பட்டு குடிநீர் விநியோகம் இடம் பெற ஒழுங்குகள்மேற் கொள்ளப்படும் எனவும், அந்தக் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிகிறது.

# சிறுவர் பாலியல் துஷ்பிரயோகம் காவலாளிக்கு விளக்கமறியல்!

## யாழ். மேலதிக நீதிவான் உத்தரவு

(யாழபபாணம்)

யாழ்.நகரில் உள்ள மெதடிஸ்த தேவாலய சிறுவர் பராமரிப்பு இல்லத்தில் தங்கியிருந்த இரு சிறுவர்களை பாதுகாவலர் ஒருவர் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்த முயன்றார் என்ற குற்றச்சாட்டில், சம்பந்தப்பட்ட சந்தேக நபரை பொலிஸார் கைது செய்தனர்.

கைதான சந்தேகநபரை பொலிஸார் நேற்று யாழ்.மேலதிக நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர். இவரை எதிர்வரும் 28 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு மேலதிக நீதிவான் ஸ்ரீநிதி நந்தசேகரன் உத்தரவிட்டார்.

பாதிக்கப்பட்ட சிறுவர்கள் இருவரும் யாழ்.வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர். பாதிக்கப்பட்ட இந்தச் சிறுவர்களை சட்டவைத்திய அதிகாரியின் பரிசோதனைக்குட்படுத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு மேலதிக நீதிவான் உத்தரவிட்டதாகவும் தெரியவருகிறது.

# தமிழீழ சுகாதாரப் பிரிவினரால் வர்த்தக நிலையங்கள் சோதனை!

## காலாவதியான பொருட்கள் மீட்பு

தமிழீழ சுகாதார சேவைப் பிரிவினரால் யாழ்.குடாநாட்டில் சுகாதாரம் பேணும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தமிழீழ சுகாதார சேவைப்பிரிவினரால் யாழ்.நகரப்பகுதி, வடமராட்சி, தென்மராட்சி போன்ற பகுதிகளில் உள்ள உணவுச்சாலைகள், அரிசி ஆலைகள், பலசரக்குக்கடைகள் ஆகியவற்றுக்குச் சென்று அங்கு பழுதடைந்த நிலையிலுள்ள உணவுப்பொருட்கள் போன்றவற்றை அழித்து வருகின்றனர்.

இதனைவிட - யாழ்.நகரை அண்டிய மக்கள் நடமாட்டம் கூடிய பகுதிகளில் உள்ள உணவுச்சாலைகள் சுகாதார முறைக்கேற்ப திருத்தியமைத்து சுகாதாரம் பேணும் நடவடிக்கையில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் செயற்பாட்டிற்கு மக்களும் ஒத்துழைப்பு வழங்கி வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# ஒருங்கிணைப்புக் குழுக்கூட்டம்

(சுதுமலை)

வேலணை பிரதேச ஒருங்கிணைப்புக்குழுக்கூட்டம் எதிர்வரும் 22 ஆம் திகதி வியாழக்கிழமை வேலணை பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 10 மணிக்கு பிரதேச செயலர் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதேச அபிவிருத்தி தொடர்பான பல முக்கிய தீர்மானங்கள் எடுக்க வேண்டியுள்ளதால், அனைத்து திணைக்களத் தலைவர்களையும் தவறாது இந்தக் கூட்டத்தில் கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் மு.நந்தகோபாலன் தெரிவித்துள்ளார். (91)

# அவசர கலந்துரையாடல்

(யாழ்ப்பாணம்)

மீன்பிடியியல் டிப்ளோமா நெறியைப் பூர்த்தி செய்த மூன்றாம் அணி மாணவர்களை நீர் உயர்வள பாடத்திற்கு ஆசிரியர்களை உள்வாங்குவது தொடர்பான அவசர கலந்துரையாடல் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு யாழ்.வலயத்தில் உள்ள கல்வி மேம்பாட்டுப் பேரவை அலுவலகத்தில் நடைபெறவுள்ளதாக மீன்பிடியியல் டிப்ளோமா மாணவர்கள் மன்றத்தின் உபதலைவர் தெரிவித்தார்.


கொம்பியூட்டர் பொலிமர் இறப்பர் ஸ்ராம்
**இலவசம்**
ஆச்சரியமா?
ஏப்ரல் 5 முதல் மே 5 வரை
விபரங்கள் அறிய
**யசோ**
கன்னாதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.
(சி-2395)

**The Royal College of Jaffna**
அரசில் அங்கீகாரம் பெற்று 10 வருடங்களாகச் சிறந்த மாணவர்களை உருவாக்கிவரும் தனியார் பாடசாலை.
426, (302) K.K.S வீதி, யாழ்ப்பாணம்,
பிளாக் வீதி, சங்கானை. (சி-2399)

**சிறுவிளம்பரம்**
**தட்டச்சு விளம்பரம்**
தமிழ்ஆங்கில தட்டச்சு வகுப்புக்கள் புதிய பிரிவு 21.04.2004 புதன்கிழமை காலை 10.00 மணிக்கு ஆரம்பம். தொடர்பு : N.S.T.C.A, ஏழாலை மேற்கு, (உத்தமன் சிலையடி) ஏழாலை. (713)

**ராஜா** யாழ்ப்பாணம்.
இளைய தளபதி
விஜய், திரிஷா நடித்த

கில்லி
காட்சி நேரம் : 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)
(சி-2387)

**நாகம்ஸ்** சுன்னாகம்

விஜய், சிம்ரன், விவேக் தலைவாசல் விஜய் மற்றும் பலர் நடித்த
A.R ரஹ்மானின் இசையில்
தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)
(சி-2397)

**நிறைஞ்சனாஸ்** சங்கானை
கமல் (இருவேடம்) மனிஷா நடித்த
இந்தியன்
காட்சி நேரம் : 11:00. 2.45. 6.00.9.00(பு.நே.)
வெள்ளி. சனி. ஞாயிறு. இரவு : 8.45(பு.நே.)
Maid in ManHatton
(சி-2386)

சித்திர வேலவர் துணை!
**வடகோவை ஸ்ரீ சித்திர வேலாயுத சுவாமி கோயில்**
கோப்பாய் மத்தி
**மாகாசபைக் கூட்டம் - 2004**
மேற்படி கூட்டம் வருகின்ற மே மாதம் 2 ஆம் திகதி (02.05.2004) ஞாயிற்றுக்கிழமை காலை 10.00 மணிக்கு ஆலய முன்மண்டபத்தில் சபைத் தலைவர் தலைமையில் நடைபெறவுள்ளது. அங்கத்தவர்கள் யாவரும் தவறாது சமுகமளிக்குமாறு அன்புடன் வேண்டுகின்றோம்.
*குறிப்பு:-*
தமது அங்கத்துவத்தைப் புதுப்பிக்கவேண்டியவர்களும், புதிய அங்கத்தவர்களும் யாப்பு விதிகளுக்கு அமைவாக உரிய பணத்தினைச் செலுத்தி, தமது அங்கத்துவத்தினை உறுதிசெய்துகொள்ள வேண்டும். பணத்தினை ஆலய உதவியாளரிடம் பூசை நேரங்களில் செலுத்தலாம்.
(715) - பரிபாலன சபை.

**புதிய பிரிவுகள் ஆரம்பம்**
**வங்கியியல் கற்கைநெறிகள்**
**B.sc (Hons) Degree & ACIB**
**DBF, ACBF, CBF (CIB/IBSL)**
Medium - Tamil & English Exam - March & September
Minimum Requirement: GCE O/L 6 Passes (5C) & GCE A/L 2 Passes
விண்ணப்ப முடிவு திகதி: 17.04.2004

**External Degree**
(Jaffna University & Peradeniya University)
GAQ · 1st in Com · BA · B.Com
Minimum Requirement: GCE A/L 3 Passes
வகுப்புக்கள் ஆரம்பம்: 17.04.2004

Further Details:
**Director**
Jaffna College Undergraduate dept
464, Hospital Road,
(Near Commercial Bank)
Jaffna.
(சி/2467)

**PATRICIAN INSTITUTES**
**பற்றீஷன் தொழிற்பயிற்சி நிறுவனங்கள்**
தொழில்நுட்பப் பயிற்சிநெறிகளின் புதிய பிரிவுகள் ஆரம்பமாகின்றன
ஆரம்பம்: 21-04-2004

I.
A. ADVANCED DIPLOMA IN COMPUTER PROGRAMMING — DURATION 1 YEAR
B. DIPLOMA IN MICRO SOFT OFFICE — DURATION 6 MONTHS
C. DIPLOMA IN TYPE SETTING — DURATION 3 MONTHS
D. DIPLOMA IN COMPUTERISED ACCOUNTING — DURATION 4 MONTHS
E. DIPLOMA IN DESK-TOP PUBLISHING — DURATION 6 MONTHS
F. DIPLOMA IN ACCESS INCLUDING S.Q.L. — DURATION 3 MONTHS
G. DIPLOMA IN HARDWARE ENGINEERING — DURATION 1 YEAR
H. INTERNET & E MAIL — DURATION 1 MONTHS
I. DIPLOMA IN INTERNET TECHNOLOGY — DURATION 5 MONTHS

II CERTIFICATE COURSES:
i) MS WORD-2000 · vi) PASCAL · xi) d BASE FOR WINDOWS
ii) MS EXCEL-2000 · vii) d BASE III + · xii) PRINT SHOP DELUXE
iii) MS ACCESS-2000 · viii) PAGE MAKER · xiii) ADOBE PHOTO SHOP
iv) MS POWER POINT · ix) WINDOWS 95 · xiv) QUICK BOOK
v) VISUAL BASIC VER 6.5 · x) COREL DRAW

III சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (ஆங்கிலம்) — காலம் 6 மாதங்கள்
IV சுருக்கெழுத்தும், தட்டெழுத்தும் (தமிழ்) — காலம் 6 மாதங்கள்
V மோட்டார் வாகனம் திருத்துதல் (Petrol or Diesel வாகனங்கள்) — காலம் 6 மாதங்கள்
VI ஜெனரல் எலக்ரீஷன் (மின்சார இணைப்பு, மோட்டார் றிவைண்டிங்) — காலம் 6 மாதங்கள்
VII வானொலி, தொலைக்காட்சிப்பெட்டி திருத்துதல் — காலம் 8 மாதங்கள்
VIII கடைச்சல் இயந்திரத் தொழிற்பயிற்சி — காலம் 3 மாதங்கள்
IX மின் ஒட்டுநர் பயிற்சி — காலம் 3 மாதங்கள்
X மரவேலை (With use Machinery) — காலம் 6 மாதங்கள்
XI குளிர்சாதனப்பெட்டி திருத்துதல் — காலம் 6 மாதங்கள்

எமது நிறுவனத்தில் கணனிகள் சம்பந்தமான சகல திருத்த வேலைகளும், வானொலி, தொலைக்காட்சிப் பெட்டிகளில் ஏற்படும் எல்லாவித பழுதுகளும் திருத்தம்செய்து கொடுக்கப்படும்.

Note: 1. பயிற்சிக் கட்டணங்களை தவணைமுறையில் செலுத்தலாம்.
2. வன்செயலால் பாதிக்கப்பட்ட அல்லது வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மாணவர்கள் போதிய ஆதாரம் காட்டி, பங்குக் குருவானவரின் (Parish Priest) சிபார்சின் பெயரில் பயிற்சிக்கட்டணத்தில் சலுகையைப் பெற்றுக்கொள்ளலாம்.
3. எமது நிறுவனத்தில் கல்வி பயிலும் மாணவர்களுக்கு அடையாள அட்டை வளங்கப்படும்.
4. பயிற்சி நெறிகள் சம்பந்தமான சகல விவரங்களையும் அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

PRODUCTION AND REPAIRING ON ORDER...! கட்டமைத்தலும், திருத்துதலும்.
சகல விதமான இரும்புசார் உற்பத்திப்பொருட்களும், ஒட்டு வேலைகளும், மரத்தளபாடங்களும் உறுதியான தொழில்சார் அறிவுமூலமும் ஓடருக்கு மிக விரைவாகவும், திறமையாகவும் செய்து கொடுக்கப்படும்.

வாகனத் தகுதிச்சான்றிதழ் - 2004 FITNESS CERTIFICATE FOR MOTOR VECHICLE
2004 ஆம் ஆண்டுக்கான வாகனத் தகுதிச்சான்றிதழ் எமது நிறுவனத்தினால் வழங்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன என்பதனை சகல வாகன உரிமையாளருக்கும் தெரிவித்துக்கொள்கின்றோம். அத்துடன், மோட்டார் சைக்கிளுக்கான Engine No. பொறித்துக்கொடுக்கப்படும். வாகன மதிப்பீட்டு பெறுமதி செய்து கொடுக்கப்படும்.

மேலதிக விபரங்களுக்கு:
T.P. 222 6148
REGISTRAR,
PATRICIAN INSTITUTE,
59, ST.PATRICK'S ROAD, JAFFNA.
(சி/2471)

## புலிகள் தொடர்பான கொள்கையில்

# சந்திரிகா - ரணில் அரசுகளிடையே எந்தவிதமான மாற்றமும் கிடையாது!

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

தமிழீழ விடுதலைப் புலிகளை கையாள்வது தொடர்பான விடயத்தில் ஜனாதிபதி சந்திரிகாவுக்கும் முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் எந்தவொரு கொள்கை மாற்றத்தையும் தம்மால் காண முடியவில்லையென்று ஜாதிக ஹெல உறுமய தெரிவித்துள்ளது.

ஜாதிக ஹெல உறுமயவின் பேச்சாளரான வண. அத்துரலியே ரத்ன தேரர் இது தொடர்பாக கருத்து வெளியிடுகையில்,

தற்போதைய அரசாங்கம் புலிகளின் தலைமைப்பீடத்துடன் நெருங்கிச் செயற்படுவதாக எமக்கு சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

கருணாவுக்கு எதிரான நடவடிக்கைக்கு அரசாங்கம் உதவி வழங்குகின்றது.

கருணாவுக்கு எதிரான தாக்குதலை நடத்த புலிகள் கடல் வழியாக சென்று தரையிறங்கியது எவ்வாறு?

தற்போதைய அரசாங்கம் புலிகளுடன் ஒப்பந்தம் செய்துகொள்ளவும், புரிந்துணர்வு நிலைக்கும் வந்திருக்கிறது என்பதை எம்மால் காணமுடிகிறது.

இது எம்மால் எந்தவகையிலும் ஏற்றுக் கொள்ளக்கூடியதல்ல.

ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்த போது இருந்த நிலைக்கும், இப்போது ஜனாதிபதி சந்திரிகா புலிகள் விவகாரத்தைக் கையாளும் போக்குக்கும் இடையில் எந்த வேறுபாட்டையும் எம்மால் காணமுடியவில்லை என அத்துரலியே ரத்ன தேரர் மேலும் தெரிவித்தார்.

ஹெல உறுமய முக்கியஸ்த்தர் உதய கமன்பில கருத்துத் தெரிவிக்கையில்,

மிலேனியம் சிற்றி விவகாரத்தில் கூச்சலிட்ட பொதுஜன ஐக்கிய முன்னணியினர் பிரபாகரனுக்கு எதிராக எழுந்த கருணா பிரச்சினையில் ஏன் முக்கிய பங்கெடுக்கவில்லை.

இரட்டை நிலைப்பாட்டை எடுக்கும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியுடன் ஜாதிக ஹெல உறுமய ஒருபோதும் புரிந்துணர்வுடன் நடந்துகொள்ளாது என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

## ஐ.ம.சு. முன்னணியின் முதல் நாடாளுமன்ற குழு கூட்டம்

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் முதலாவது நாடாளுமன்றக் குழுக்கூட்டம் இன்று இடம்பெறவுள்ளது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்தக் கூட்டத்திற்கு தலைமைதாங்கவுள்ளதாக ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த நிகழ்வுக்கு நாடாளுமன்ற உறுப்பினர்களாக தெரிவானோரின் குடும்பத்தினரும் அழைக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு ஒன்றுகூடல் ஒன்று நடத்தப்படுவதற்கான ஒழுங்குகளும் செய்யப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று முன்னாள் பிரதமரும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் முன்னாள் தலைவியுமான சிறிமாவோ பண்டாரநாயக்கவின் பிறந்ததினம் என்பதால் இது தொடர்பான நிகழ்வுகளுக்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (01)

## யாழ்ப்பாணத்துக்கு ரயில் சேவையை நடத்துவதற்கு போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா யோசனை

நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்தவேண்டியதும், அதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்வதும் புதிய அரசாங்கத்தின் பொறுப்பு. எனவே இன்றைய அமைதி சூழலை பயன்படுத்தி யாழ்ப்பாணத்திற்கு ரயில் சேவைகளை நடத்த நடவடிக்கை எடுப்பேன் என புதிய போக்குவரத்து அமைச்சர் பீலிக்ஸ் பெரேரா தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற கூட்டம் ஒன்றிலேயே அமைச்சர் இவ்வாறு தெரிவித்தார்.

வடபகுதியில் ரயில் சேவை நடத்துவது குறித்து சகல தரப்பினருடனும் கலந்துரையாடியுள்ளேன். உள்நாட்டில் ரயில், பஸ் சேவையினை மேம்படுத்த முழுமையான நடவடிக்கை எடுக்கவுள்ளேன். குறிப்பாக எனது பணிக்கு தொழிற்சங்கங்கள் குறுக்கே நிற்குமானால் எனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்துவிட்டு வெறும் நாடாளுமன்ற உறுப்பினராக மட்டுமேதான் இருப்பேன்.

போக்குவரத்தை மீறும் வாகன சாரதிகளுக்கு எதிராக மிகவும் இறுக்கமான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும். சாரதி அனுமதி பத்திரத்தைப் புதிய முறையில் மாற்றிப் புள்ளிகள் வழங்கப்படவுள்ளன. போக்குவரத்து ஒழுங்குகளை மீறும் பட்சத்தில் சாரதி அனுமதிப் பத்திரத்தில் உள்ள புள்ளிகள் குறைக்கப்படும். இதைவிட, தலைமன்னாருக்கும் - இராமேஸ்வரத்துக்கும் இடையே படகு சேவையினை ஆரம்பிக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

இந்த விடயம் குறித்து இந்திய தூதுவருடன பேச்சுவார்த்தை நடத்த உத் தேசித்துள்ளேன்.

நாடு முழுவதிலும் உள்ள பஸ் டிப்போக்களில் பெருமளவான பஸ்கள் பழுதடைந்த நிலையிலுள்ளன. இவற்றைக் கேள்வி பத்திரம்கோரி விற்பனை செய்துவிட்டு இந்தியாவில் இருந்து உந்து இயந்திரங்கள் கொண்ட புதிய பஸ்களை இறக்குமதிசெய்ய நடவடிக்கை எடுத்துள்ளேன். குறிப்பாக வடக்கு-கிழக்கு போக்குவரத்தை அபிவிருத்தி செய்வதற்கு திட்டமிட்டுள்ளேன் எனவும் அவர் மேலும் கருத்து தெரிவித்தார்.



தம்பலகாமம் மருத்துவமனைக்கு முன்பாக நேற்று முன்தினம் இடம்பெற்ற மறியல் போராட்டத்தை திருமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் துரைரட்ணசிங்கம் சென்று பார்வையிட்டு போராட்டத்தில் ஈடுபட்டோருடன் கலந்துரையாடுவதைப் படத்தில் காணலாம்.

## தொலைபேசி வசதிகளற்ற நிலையில் முல்லை மாவட்ட அரச அலுவலகங்கள்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச செயலகம் உட்பட பல அலுவலகங்கள் தமது பழைய இடத்தில் இயங்குகின்றபோதும், தொலைபேசி வசதிகள் இல்லாத காரணத்தால் அவற்றின் செயற்பாடுகளை விரைவுபடுத்த முடியாதுள்ளதாக அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார் தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

தற்போது முல்லைத்தீவு மாவட்டத்தில் அரச செயற்பாடுகள் நடைபெறுகின்ற போதிலும், சில செயற்பாடுகளை துரிதமாக மேற்கொள்ளவேண்டியுள்ளது. இவற்றுக்குத் தொலைபேசி வசதி என்பது அவசியமானதாகும்.

உதாரணமாக எமது மாவட்டத்திலிருந்து அவரசமாக ஒரு செய்தியை வெளியிடத்திற்கு அனுப்புவதென்றால் கிளிநொச்சிக்குத்தான் செல்லவேண்டும். இது மிகவும் நேரவிரயத்தையும், ஒரு நபரின் வேலையையும் பாதிப்பதாக உள்ளது.

எனவே, எமது மாவட்டத்தின் செயற்பாடுகளை இலகுவாக்கி துரிதமாக மேற்கொள்ள தொலைபேசி வசதி அவசியம் எனத் தெரிவித்தார் அந்த மாவட்டத்தின் அரசாங்க அதிபர் இமெல்டா சுகுமார். (03)

## புலிகளை பலவீனப்படுத்தலாமென அரசு நினைப்பது பகற்கனவே!

### முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலக தெரிவிப்பு

புலிகளின் உள்வீட்டு நெருக்கடியைச் சாதகமாகப் பயன்படுத்துவதில் தென்னிலங்கை அரசியற் கட்சிகள் முனைப்புடன் ஈடுபட்டுவருகின்றன. இந்த நெருக்கடியைப் பயன்படுத்தி புலிகளின் தலைவர் பிரபாகரனை பேச்சுவார்த்தை மேசையில் பலவீனப்படுத்தலாம் என்று பெரும்பாலான சிங்கள அரசியற் கட்சிகள் பகற்கனவு காண்கின்றன என்று ஓய்வுபெற்ற முன்னாள் விமானப்படைத் தளபதி ஹரிகுணதிலக கூறினார்.

கருணாவை சுலபமாக வெற்றிகொண்டதன் மூலம் பிரபாகரன் தற்போது பெரும்பலம் பெற்றுள்ளார். பேச்சுவார்த்தை மேசையிலே அவர் ஒருபோதும் பலவீனப்படப்போவதில்லை.

பிரபாகரனின் தலைமைத்துவத்துக்கு எவ்வித அச்சுறுத்தல்களும் இனி ஏற்படப் போவதில்லை. அரசாங்கத்தின் நடவடிக்கைகள் சமாதான முயற்சிகளுக்கு முட்டுக்கட்டைகளாகவே இருக்கின்றன. சுதந்திர முன்னணி அரசாங்கமும் அதன் பங்காளிகளும் புலிகளைப் பலவீனப்படுத்தும் முயற்சிகளையே முன்னெடுப்பதால் சமாதான முயற்சிகளை விரைவில் முன்னெடுப்பதற்கான சாத்தியக்கூறுகள் குறைவாகவே உள்ளன என்றும் அவர் எதிர்வு கூறியுள்ளார்.

## திகாடுமல்ல தேர்தல் தொகுதிவாக்குகளை மீள எண்ணுமாறு கோரி ஆர்ப்பாட்டம்!

### நாளை நடைபெறவுள்ளது

திகாடுமல்ல தேர்தல் மாவட்டத்தின் அம்பாறைத் தொகுதிக்கான வாக்குச் சீட்டுக்களை மீள எண்ணுமாறுகோரி மாபெரும் ஆர்ப்பாட்ட ஊர்வலமொன்றை நடத்துவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டுவருகின்றது.

நாளை அம்பாறை நகரில் மிகப் பிரமாண்டமான முறையில் மேற்கொள்ளப்படவிருக்கும் இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்டத்தின் பல பாகங்களிலிருந்தும் மக்கள் கலந்துகொள்ள இருப்பதாக உகண பிரதேச சபையின் சிறிலங்கா சுதந்திரக் கட்சி உறுப்பினர் ஆனந்தகமகே தெரிவித்தார்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் முக்கிய பிரமுகர்களும் இதில் கலந்துகொள்ள விருப்பதாகவும் அவர் மேலும் கூறினார்.

நடைபெற்று முடிந்த தேர்தலில் திகாடுமல்ல மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி கூட்டமைப்பில் போட்டியிட்டு 4 ஆவது இடத்தைப் பெற்றுக்கொண்ட முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் விமல வீரதிஸாநாயக்கவுக்கு ஆதரவாகவே இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலம் நடைபெறவிருப்பது குறிப்பிடத்தக்கது.

திகாடுமல்ல மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்ட பேரியல் அஷ்ரப், வஸந்த பியதிஸ்ஸ, ஏ.எல்.எம். அதாவுல்லா ஆகியோரே தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

எனினும், விருப்புவாக்கு அடிப்படையில் தானே மூன்றாவதாக வெற்றிபெற வாய்ப்பிருந்தும் தான் தெரிவுசெய்யப்படவில்லை என்றும் திஸாநாயக்க குற்றம்சாட்டியுள்ளார்.

குறித்த வாக்குகளை மீள எண்ணுமாறு அம்பாறை தெரிவித்தாட்சி அதிகாரியைத் தான் கோரியபோதும் சட்டப்படி அதனைச் செய்யமுடியாது. எனினும், நீதிமன்ற உத்தரவின்படியே மீள வாக்குச் சீட்டுக்கள் எண்ண முடியுமென அவர் கூறியதாகவும் திஸநாயக்க தெரிவித்தார்.

மேலும், திகாடுமல்ல மாவட்டத்தில் ஐக்கிய மக்கள் முன்னணி சார்பில் ஜே.வி.பி. உறுப்பினரைத் தவிர வேறு எவரும் சிங்கள மக்கள் சார்பில் தெரிவுசெய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

## அமைச்சுக்கான செயலாளர்கள் அடுத்த வாரம் நியமனம்

(கொழும்பு)

புதிய அமைச்சுக்களுக்கான செயலாளர்கள் அடுத்த வாரம் நியமிக்கப்படவுள்ளதாக ஜனாதிபதியின் ஊடகப் பணிப்பாளர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

ஒவ்வொரு அமைச்சுக்குமான செயலாளர்கள் குறித்து ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க ஆழமாக ஆராய்ந்து வருவதாகக் கூறிய அவர் தற்போதுள்ள அமைச்சின் செயலாளர்கள் வேறு அமைச்சுக்களுக்கு மாற்றப்படலாம் என்றும் தெரிவித்தார்.

ஜனாதிபதி கடந்த வருடம் பொறுப்பேற்ற மூன்று அமைச்சுக்களின் செயலாளர்களும் மாற்றப்பட வாய்ப்புகள் உள்ளதாகவும், அவர் குறிப்பிட்டார்.

தற்பொழுது செயலாளர்களாக உள்ளவர்கள் மாத்திரமன்றி புதியவர்களும் அமைச்சுக்களின் செயலாளர்களாக நியமிக்கப்படுவர்.

இதேவேளை, அரசாங்க நிறுவனங்கள் கூட்டுத்தாபனங்கள் என்பவற்றுக்கான தலைவர்களும் அடுத்த வாரம் அளவில் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# பாகிஸ்தான் மண்ணில் முதன்முறையாக இந்திய அணி டெஸ்ட் தொடரை கைப்பற்றியது



(ராவல்பிண்டி)

இந்திய - பாகிஸ்தான் அணிகளுக்கிடையில் ராவல் பிண்டியில் நேற்று நடந்து முடிந்த மூன்றாவதும் இறுதியுமான டெஸ்ட்போட்டியை இந்திய அணி ஒரு இனிங்ஸ் மற்றும் 131 ஓட்டங்களால் வெற்றி கொண்டது.

இதன் மூலம் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரை இந்திய அணி 2:1 என்ற ரீதியில் வென்று சாதனை படைத்துள்ளது. 1993 ஆம் ஆண்டு இலங்கையை 1:0 என்ற நிலையில் வென்ற இந்திய அணி அதன்பின் வெளிநாட்டில் தற்போது தான் பாகிஸ்தானை வென்றுள்ள அதேவேளை பாகிஸ்தான் அணியை அதன் சொந்த நாட்டில் முதன் முறையாக வென்றுள்ளது.

நேற்றுமுன்தினம் இரண்டு விக்கெட்டுக்களை இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றிருந்த பாகிஸ்தான் அணி - நேற்றைய ஆட்டத்தில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 245 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பாகிஸ்தான் அணி சார்பில் ஆசிம் கமல் மற்றும் யுகானா இருவரையும் தவிர மற்றைய வீரர்கள் எவரும் சிறப்பாக ஆடவில்லை. இதற்கு இந்தியப் பந்துவீச்சாளர்களின் பந்துவீச்சு நேர்த்தியும் காரணமாகும். இதில் பாலாஜி மற்றும் கும்ளே இருவரது பந்துவீச்சும் சிறப்பானதாக இருந்தது.

பாகிஸ்தான் அணியில் ஆசிம் கமல் 60, யுகானா 48, சொஹைப் அக்தர் 28, யாசீர் ஹமீட் 20, கம்ரன் அக்மல் 23 ஆகியோர் கூடுதலான ஓட்டங்களையும் அணித்தலைவர் இன்ஸமாம் உல்ஹக் 9, இம்ரான் பர்கத் 3, தபீக் உமர் 13, ஆகியோர் குறைந்த ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் கும்ளே 4, பாலாஜி 3, நெஹ்ரா, பதான், டெண்டுல்கர் மூவரும் தலா ஒவ்வொரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

பாகிஸ்தான் முதல் இன்னிங்சில் 224 ஓட்டங்களையும் இரண்டாவது இனிங்ஸில் 245 ஓட்டங்களையும் பெற்றது. இந்திய அணி தனது முதல் இனிங்ஸில் 600 ஓட்டங்களைப் பெற்றது. இதில் ராகுல் டிராவிட் 270 ஓட்டங்களைப் பெற்றது குறிப்பிடத்தக்கது. இவரே இந்த டெஸ்ட் போட்டியின் சிறப்பாட்டக்காரராகவும் தெரிவானார்.

# இரட்டைச் சதம்மூலம் ராவிட் புதிய சாதனை!



பாகிஸ்தானுக்கு எதிராக நடைபெற்ற கடைசி டெஸ்டில் ராவிட் சிறப்பாக விளையாடி இரட்டைச்சதம் அடித்தார். இதன்மூலம் அவர் 5 இரட்டைச்சதம் அடித்து சாதனை படைத்தார். இதற்குமுன்பு கவாஸ்கர் நான்குமுறை இரட்டைச்சதம் அடித்ததே இந்தியாவின் சாதனையாக இருநதது. அவுஸ்ரேலியப் பயணத்தில் இதைச் சமன்செய்த ராவிட் தற்போது முறியடித்துள்ளார்.

சர்வதேச அளவில் அதிக இரட்டைச்சதம் அடித்த வீரர்களில் ராவிட் ஆறாம் இடத்தில் உள்ளார். பிரட்மன் (அவுஸ்ரேலியா) 12 முறையும், ஹேமன்ட் (இங்கிலாந்து), பிறைன் லாரா (மேற்கிந்தியத் தீவுகள்) ஆகியோர் தலா ஏழு முறையும், மியான்டட் (பாகிஸ்தான்) 6 முறையும், அத்தபத்து (இலங்கை) 5 முறையும் இரட்டைச்சதம் அடித்துள்ளனர்.

ராவிட் 270 ஓட்டங்களை எடுத்ததன்மூலம் டெஸ்டில் அதிக ஓட்டமெடுத்த இந்திய வீரர்களில் 3 ஆவது இடத்தைப் பிடித்தார். ஷேவாக 309 ஓட்டமெடுத்து முதலிடத்திலும், லக்ஷ்மன் 281 ஓட்டமெடுத்து 2 ஆவது இடத்திலும் உள்ளனர்.

# இந்திய அணி வீரர்களில் ராகுல் ராவிட் சிறந்தவர்!

## மொகீந்தர் அமர்நாத் கூறுகிறார்



(ராஞ்சி)

பாகிஸ்தானுக்கு எதிரான கடைசி டெஸ்டில் ராகுல் ராவிட் அபாரமாக விளையாடி 270 ஓட்டங்களை எடுத்தார். அவரது சிறப்பான ஆட்டத்தால் இந்தியா 600 ஓட்டங்களைக் குவித்தது.

இதற்கிடையே இந்திய துடுப்பாட்ட வீரர்களில் சிறந்தவர் ராகுல் ராவிட் என்று முன்னாள் வீரர் மொகீந்தர் அமர்நாத் கூறியுள்ளார். இது தொடர்பாக அவர் கூறியதாவது -

சூழ்நிலைக்கு ஏற்ப விளையாடுவதில் ராவிட் கெட்டிக்காரர். அனுபவம் வாய்ந்த இவர் பதற்ற மடையமாட்டார். தற்போது உள்ள இந்திய வீரர்களில் ராவிட் சிறந்த துடுப்பாட்ட வீரர் என்பதில் சந்தேகம் இல்லை. சிரேஷ்ட வீரர்களுக்கும், கனிஷ்ட வீரர்களுக்கும் பாலமாக அவர் திகழ்கிறார்.

பதானின் பந்து வீச்சு மிகவும் அபாரமாக உள்ளது. எதிர்காலத்தில் இவர் இந்தியாவின் தலைசிறந்த பந்துவீச்சாளராக திகழ்வார். பார்த்தீவ் பட்டேல் தொடக்க வீரராகக் களம் இறங்கி சிறப்பாக ஆடினாலும் அது தற்காலிகமானதே. ஆகாஷ் சோப்ரா தொடக்க ஆட்டக்காரருக்குப் பொருத்தமானவர். அவரை நீக்கி இருக்ககூடாது.

இவ்வாறு மொகீந்தர் அமர்நாத் கூறினார்.

1983 ஆம் ஆண்டு இந்திய அணி உலகக் கோப்பையை கைப்பற்றக் காரணமாக இருந்தவர்களில் மொகீந்தர் அமர்நாத்தும் ஒருவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# விளையாட்டு

# 3 ஒருநாள் போட்டிகளில் லாரா விளையாடவில்லை



(அன்ரிகுவா)

இங்கிலாந்து அணி மேற்கிந்தியத் தீவுகளில் சுற்றுப்பயணம் செய்து விளையாடிவருகிறது. டெஸட் தொடரை இங்கிலாந்து 3 - 0 என்ற கணக்கில் கைப்பற்றியது. இரு அணிகள் இடையே 7 ஒருநாள் போட்டி நடைபெறுகிறது. ஒருநாள் தொடர் நாளை தொடங்குகிறது. காயம் காரணமாக மேற்கிந்தியத் தீவுகள் அணித்தலைவர் லாரா முதல் 3 ஒருநாள் போட்டிகளில் ஆடவில்லை. கடைசி டெஸ்டில் 400 ரனகள் குவித்து சாதனை படைத்தபோது அவருக்கு கைவிரலில் காயம் ஏற்பட்டது. இதனால் அவர் 10 நாள்கள் ஓய்வில் இருக்குமாறு வலியுறுத்தப்பட்டுள்ளார்.

# உதைபந்தாட்டப் போட்டி இன்று ஆரம்பமாகின்றது

யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கிடையே நடைபெறும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி இன்றுகாலை 8.30 மணிமுதல் யாழ்.துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

**இன்று காலை 8.30 மணிமுதல் நடைபெறும் போட்டிகளின் விபரம்:-**

*16 வயதுப் பிரிவு:-* யாழ்.புனித ஜேம்ஸ் ம.வித்தியாலயம் எதிர் கொற்றாவத்தை அ.த.க.பாடசாலை

*16 வயதுப் பிரிவு:-* அளவெட்டி அருணோதயாக் கல்லூரி எதிர் வைத்திலிங்கம் துரைச்சாமி வித்தியாலயம்

*16 வயதுப் பிரிவு:-* நாவாந்துறை றோ.க.வித்தியாலயம் எதிர் மானிப்பாய் இந்துக் கல்லூரி

**இன்று பிப. 2 மணிமுதல் நடை பெறும் போட்டிகளின் விபரம்**

18 வயதுப்பிரிவு:- வசாவிளான் ம.ம.வி எதிர் கலாநிதி தியாகராசா ம.ம.வி

18 வயதுப் பிரிவு:- தேவரையாளி இந்துக் கல்லூரி எதிர் யூனியன் கல்லூரி

18 வயதுப் பிரிவு:- டிறிபேக் கல்லூரி எதிர் யாழ்.மத்திய கல்லூரி

(58)

# தேர்வுக் குழுவுடன் மோதல் ஸ்ரீக் உட்பட 13 பேர் நீக்கம்

## சிம்பாப்வே கிரிக்கெட் சபை நடவடிக்கை

(ஹராரே)

சிம்பாவ்வே கிரிக்கெட் அணியின் கப்டன் ஹீத்ஸ்ரீக் சமீபத்தில் தனது பதவியை ராஜினாமா செய்தார். தேர்வுக் குழுவுடன் ஏற்பட்ட கருத்துவேறுபாட்டால் அவர் விலகினார். புதிய கப்டனாக விக்கெட் கீப்பர் தைபு நியமிக்கப்பட்டார்.

கறுப்பு இனத்தைச் சேர்ந்த தைபு கப்டனாக நியமிக்கப்பட்டதால் அவரது தலைமையின்கீழ் விளையாட ஸ்ரீக் மறுத்தார். அவருக்கு ஆதரவாக அந்த அணியைச் சேர்ந்த வெள்ளை இனத்தைச் சேர்ந்தவர்கள் போர்க்கொடி உயர்த்தினர்.

தேர்வு குழுவினருடன் ஏற்பட்ட கருத்து வேறுபாட்டால் இலங்கைக்கு எதிரான தொடரில் விளையாடமாட்டோம் என்று ஸ்ரீக் உட்பட 13 வீரர்கள் புறக்கணிப்புச் செய்தனர்.

போர்க்கொடி உயர்த்திய 13 வீரர்களையும் இலங்கைக்கு எதிரான தொடரிலிருந்து சிம்பாப்வே கிரிக்கெட்சபை நீக்கியுள்ளது. ஸ்ரீக், கிரான்ட் பிளவர், கேர்சிலி, விஷார்ட், பிளிங்னட், ரேமண்ட் பிரைஸ், பிரெண்ட், இர்வின், ராவஸ், ரோஜர், கிரிப்பர் ரிச்சர்ட், நெயல் பெரைரா ஆகியோர் நீக்கப்பட்டு உள்ளனர்.

இலங்கைக்கு எதிரான தொடரில் இடம்பெற்றுள்ள சிம்பாவ்வே வீரர்கள் அனைவரும் கறுப்பர் இனத்தைச் சேர்ந்தவர்கள். இதில் 6 வீரர்களே அனுபவம் வாய்ந்தவர்கள். மற்றவர்கள் புதுமுகங்கள்.



இலங்கை - சிம்பாப்வே அணிகளிடையே 2 டெஸ்ட் மற்றும் 5 ஒருநாள் போட்டி நடக்கிறது. ஒருநாள் தொடர் வருகிற 20 ஆம் திகதி தொடங்குகிறது.

# வாஜ்பாயை எதிர்த்து போட்டியிட வேட்பாளரை காங்கிரஸ் நிறுத்தியது

லக்னோ தொகுதியில் பிரதமர் வாஜ்பாயை எதிர்த்து காங்கிரஸ் வேட்பாளர் அகிலேஷ்தாஸ் போட்டியிடுகிறார். ராம்ஜெத்மலானி வாபஸ் பெறுவதால் இந்த திடீர் அறிவிப்பை காங்கிரஸ் வெளியிட்டது.

பிரதமர் வாஜ்பாய் போட்டியிடும் லக்னோ தொகுதியில் சுயேட்சை வேட்பாளராக போட்டியிட பிரபல சட்டத்தரணி ராம்ஜெத்மலானி கடந்த 12 ஆம் திகதி மனுத்தாக்கல் செய்தார். இவரை காங்கிரஸ் ஆதரிப்பதாக அறிவித்தது.

இதற்கிடையே ராம்ஜெத்மலானிக்கு வாஜ்பாய் வேண்டுகோள் விடுத்தார். "நாம் இருவரும் 40 ஆண்டுகால நண்பர்கள். இதுவே நமக்கு கடைசித் தேர்தல். என்னை எதிர்த்துப் போட்டியிடும் முடிவை மறுபரிசீலனை செய்யுங்கள்" என்று வாஜ்பாய் கேட்டுக்கொண்டார். இதற்கு "வாஜ்பாய் கோரிக்கையை பரிசீலிப்பேன். ஆனால் அவசரப்பட்டு எந்த முடிவையும் எடுக்க மாட்டேன்" என்று ராம்ஜெத்மலானி பதில் அளித்திருந்தார்.

இந்த நிலையில் லண்டனில் உள்ள ராம்ஜெத்மலானியின் மகனுக்கு திடீர் உடல்நலக்குறைவு ஏற்பட்டதால் கடந்த புதன்கிழமை இரவு ராம்ஜெத்மலானி விமானம் மூலம் லண்டன் புறப்பட்டுச் சென்றார். இதனைத் தொடர்ந்து நேற்று டெல்கியில் காங்கிரஸ் வட்டாரத்தில் பரபரப்பு ஏற்பட்டது. நேற்றுமுன்தினம் மனுத் தாக்கல் செய்யக் கடைசி நாள்.

ராம்ஜெத்மலானி தேர்தலில் இருந்து விலகிவிட்டால் வாஜ்பாயை எதிர்க்க வேட்பாளர் இல்லாமல் ஆகிவிடும். எனவே வேறு ஒருவரை காங்கிரஸ் வேட்பாளராக அறிவிப்பது என்று முடிவு எடுக்கப்பட்டது.

இதைத் தொடர்ந்து காங்கிரஸ் வேடபாளராக அகிலேஷ்தாஸ் தேர்ந்தெடுக்கப்பட்டு அறிவிக்கப்பட்டார்.

மனுத்தாக்கல் செய்து இருக்கிறார். இதுபற்றி டெல்கியில் மூத்த காங்கிரஸ் தலைவர் ஒருவர் கூறியதாவது -

"லண்டன் புறப்பட்டுச் செல்லுமுன் காங்கிரஸ் மேலிடத்தை ராம்ஜெத்மலானி தொடர்புகொண்டு பேசினார். போட்டியில் இருந்து விலகுவது இல்லை என்று உறுதி கூறி இருக்கிறார்.

ராம்ஜெத்மலானி இந்தியா திரும்பியதும் அவர் போட்டியிடுவது உறுதியாகிவிட்டால் காங்கிரஸ் வேட் பாளர் வாபஸ் பெறுவார். பாதுகாப்பு நடவடிகையாக இந்த முடிவு எடுக்கப்பட்டு இருக்கிறது இவ்வாறு அவர் கூறினார்.

# பொடா விசாரணையை நிறுத்தக்கோரும் வை.கோ வின் மனு நீதிமன்றால் தள்ளுபடி

தன்மீது வரும் பொடா வழக்கு விசாரணையை நிறுத்திவைக்க வேண்டும் என்றுகோரி ம.தி.மு.க பொதுச் செயலாளர் வை.கோ தாக்கல் செய்த மனுவை பூந்தமல்லி பொடா நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது.

மதுரை திருமங்கலத்தில் நடந்த பொதுக்கூட்டத்தில் விடுதலைப் புலிகளுக்கு ஆதரவாகப் பேசிய வை.கோ, அக்கூட்டத்தில் பங்கேற்ற கணேசன், அழகுசுந்தரம், கணேசமூர்த்தி, வீர இளவரசன், பூமிநாதன், மணியம், செவந்தியப்பன், நாகராஜன், ஆகிய ம.தி.மு.கவினர் 9 பேர் பொடா சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டனர்.

இவர்கள் மீதான வழக்குகள் பூந்தமல்லி பொடா நீதிமன்றத்தில் நடந்து வருகின்றன. சமீபத்தில் பொடா மறு ஆய்வுக்குழு, வை.கோ உட்பட 9 பேர் மீதும் பொடா சட்டத்தின் கீழ் வழக்குத் தொடர்ந்தது தவறு என்று தீர்ப்பு வழங்கியது.

இதையடுத்து வை.கோவின் சார்பில் அவரது வழக்கறிஞர் தேவதாஸ், பூந்தமல்லி நீதிமன்றத்தில் ஒரு மனுத் தாக்கல் செய்தார். அதில்-

எங்கள் மீது தொடரப்பட்ட பொடா வழக்கிற்கு எந்த முகாந்தரமும் இல்லை என்று பொடா மறு ஆய்வுக்குழு தீர்ப்பு வழங்கியுள்ளது. தமிழக அரசு இது குறித்து எந்தக் கருததையும் இதுவரை தெரிவிக்கவில்லை. எனவே பொடா வழக்கு விசாரணையை 2 வாரங்களுக்கு இடை நிறுத்தி வைக்கவேண்டும்.

இதற்கு அரசு வழக்கறிஞர் கடும் எதிர்ப்புத் தெரிவித்தார். அரசின் சார்பில் ஆஜரான வழக்கறிஞர் ஜெயக்குமார் கூறுகையில் - இப்போது இந்த வழக்கில் நிபந்தனை பிணையில்தான வை.கோ வெளியில் இருக்கிறார். வழக்கு விசாரணைக்கு முழு ஒத்துழைப்புத் தருவதாக எழுதித்தந்துவிட்டுத்தான் பிணையில் சென்றார்.

மேலும் அவர் மீது வழக்குப் போடப்பட்டதற்கு முகாந்தரம் இருப்பதாக சென்னை உயர் நீதிமன்றம் கருத்துத் தெரிவித்துள்ளது. இதனால் வை.கோவின் மனுவை நிராகரிக்க வேணடும் என்றார்.

இதையடுத்து வை.கோவின் மனு தள்ளுபடி செய்யப்படுவதாக நீதிபதி ராஜேந்திரன் அறிவித்தார். இதையடுத்து வை.கோ உள்ளிட்ட 9 பேர் மீதான வழக்கு விசாரணையும் எதிர் வரும் 19 ஆம் திகதி வழக்கம்போல தொடர்ந்து நடக்கும் என நீதிபதி அறிவித்தார்.

# கடல் ஆமைகள்

பல இலட்சம் ஆண்டுகளுக்கு முன்பிருந்தே கடல் ஆமைகள் வாழ்ந்து வருகின்றன. டைனோஸர்களுக்கு முன்பே பூமியில் தோன்றியவை இவை.



எட்டு வகையான கடல் ஆமைகள் உலகத்தில் காணப்படுகின்றன. இவற்றில் ஐந்து வகையான ஆமைகள் இந்தியக் கடற்பகுதிகளில் வாழ்கின்றன.

கடல் ஆமைகள் ஊர்வன வகையைச் சாரந்தவை. சூழ்நிலைக்கு ஏற்ப அவை தன் உடல் வெப்பத்தை மாற்றியமைத்துக்கொள்ளும். உடல் வெப்பத்தைச் சீரமைக்கவும், சுவாசிப்பதற்கும் கடலின் மேல் மட்டத்துக்கு வந்து செல்லும்.

நிலத்தில் வாழும் ஆமை தன்னுடைய தலை, கால்களை ஆபத்து வரும்போது ஓட்டுக்குள் இழுத்துக்கொண்டு தன்னைக் காப்பாற்றிக்கொள்ளும். ஆனால், கடல் ஆமைகளால் இப்படிச் செய்யமுடியாது.

கடல் ஆமைகளில் மிகச் சிறியது சிற்றாமை. வளர்ந்த சிற்றாமையின் எடை சுமார் ஐம்பது கிலோ கிராம் இருக்கும். சுமார் 80 செ.மீ நீளம்வரை வளரும். பெரிய ஆமைகளின் எடை ஏறக்கறைய 250 - 400 கிலோ கிராம் இருக்கும்.

கடல் ஆமைகள் நிலத்தில் வாழும் பெரிய ஆமைகளிலிருந்து தோன்றியவைதான். இவை டொல்பின்கள் போல சில நிமிடங்களுக்கு ஒருமுறை மூச்சுவிட மேலே வரும்.

ஒரு ஆமை 50 இலிருந்து 200 முட்டைகள் வரை இட்டாலும், சில முட்டைகள் மட்டுமே பொரிக்கும். முட்டை பொரித்த பின் (60 - 85 நாட்களில்) ஆமைக்குட்டிகள் இரவில் கடலுக்குள் சென்றுவிடும்.

கடல் ஆமைகளுக்குப் பற்கள் கிடையாது. தாடைகளை வைத்தே மென்றுதின்னமுடியும். மிகக்குறைந்த தூரம் மட்டுமே பார்க்கமுடியும். முகரும் திறன் இவற்றுக்கு மிகவும் அதிகம்.

பெருந்தலை ஆமைகளின் முக்கியமான உணவு நத்தைகள், ஜெல்லி மீன், சிப்பி போன்றவை. இவை நத்தை போன்ற உறுதியான ஓடுகளையுடைய உயிரினங்களை உட்கொள்ளத் தகுந்தாற்போன்ற வாயமைப்புடன் இருக்கும்.

அலங்கு ஆமை சில காலங்களில் நச்சுத்தன்மை உள்ள கடற்பஞ்சுபோன்ற மிருதுவான தாவர வகையை உண்ணும். இதனால் உடலெங்கும் நஞ்சு பரவியிருக்கும். இவற்றை மனிதர்கள் உண்டால் உயிருக்கு ஆபத்து ஏற்படும்.

பெண் ஆமைகள் முட்டை இட நிலத்துக்கு வரும். இதற்காகச் சிலவேளைகளில் ஆயிரக்கணக்கான மைல்கள் கூட நீந்திவரும். ஆண் ஆமைகள் ஒருமுறை கடலுக்குச் சென்றுவிட்டால், வாழ்க்கை முழுவதும் அங்கேதான்.

## அன்புள்ள சிறுவர்களே!

உங்களின் ஆக்கங்களான கதைகள், சுயவிதைகள் கைவண்ணத்தில் வரையும் ஓவியங்கள் என்பன குறைவாகவேயுள்ளன. கூடுதலாகப் பொது அறிவும், விடுகதைகளும்தான் எழுதி அனுப்புகிறீர்கள். பொது அறிவுகளும், விடுகதைகளும் எழுதி அனுப்பத்தான் வேண்டும். ஆனால், வேறு ஆக்கங்களையும், நீங்களாகவே எழுதி அனுப்புவதற்கு முயற்சி செய்யுங்கள். கிறுக்கல்கள்தான் இன்றைய காலகட்டத்தில் வடிவமைக்கப்படுகின்றது. அதனை நீங்களும் ஏதாவது ஒன்றினை எழுதி, அதனை உங்களின் பாடசாலை ஆசிரியரிடம் காட்டி பிழையானதை சரிப்படுத்தி அனுப்பி வையுங்கள்.

நீங்கள் எழுதும் ஆக்கங்களைப் பிற மாணவர்களும் படிப்பதால் ஆர்வத்துடன் நல்லதைத் தெரிவுசெய்து அனுப்புவதற்கு முயற்சி செய்யுங்கள்.

## ஓவியப்போட்டி

சிறுவர்களே உங்கள் ஓவியங்களுக்குப் பரிசுதர எண்ணியுள்ளோம். உங்கள் கைவண்ணங்களை இன்னும் மெருகுடன் வரைந்து அனுப்புங்கள். இந்த ஓவியப்போட்டியில் பல விதிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன. அதாவது, ஆண்டு 1-11 வரையான மாணவர்கள் இதில் பங்குபற்றலாம்.

நீங்கள் வரையும் ஓவியத்தில் நீர்வர்ணம், எண்ணெய் வர்ணம், கலர்ப் பென்சில் போன்றன பயன்படுத்தலாம்.

வெள்ளைத்தாளில் ஓவியத்தினை வரைந்து அனுப்பவும். அனுப்பும் ஓவியத்தின் தாளினை மடிக்காமல் அனுப்பவும். கட்டச்சுத்தாளின் (A4) இல் அமையவேண்டும். நீங்கள் வரைந்த ஓவியங்களை கீழ் வரும் கூப்பனைப் பூர்த்தி செய்து, அதனுடன் இணைத்து அனுப்பிவையுங்கள்.

தேர்ந்தெடுக்கப்படும் ஓவியங்கள் 3 இற்குப் பரிசுகள் வழங்கப்படும். அத்தோடு, 10 ஆறுதல் பரிசுகளும் உண்டு. நீங்கள் அனுப்பும் ஓவியங்களில் பரிசுக்குரிய ஓவியங்கள் - இளந்தேனீக்கள் கழகத்தினரால் நடாத்தப்படும் கண்காட்சியில் பார்வைக்காக வைக்கப்படும்.

முழுப் பெயர் :..............................................

கற்கும் பாடசாலை :..............................................

கற்கும் தரம் :..............................................

வீட்டு முகவரி :..............................................

.............................. .............. ..............................

அதிபர்/ஆசிரியர் ஒப்பம் திகதி மாணவர் ஒப்பம்

ஓவியப்போட்டி
சிறுவர் அரங்கம்
நமது ஈழநாடு
267,நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

இங்கே மடிக்கவும்





# சிறுவர் அரங்கம்

சிந்தனைக்கு!
நீ! நீயாக
இருப்பது
நன்று.

# எண்ணிக் கணக்கிடும் முயல் குட்டி

தாய் முயலுக்குக் குழி நிறையக் குட்டிகள் இருந்தன. மூத்தது தலைச்சன், பிறகு தலைச்சனுக்கு அடுத்தது, அதற்கும் நடுவன் ஒன்று, அடுத்து இரண்டு, பிறகு கடைமுதற்குட்டி, முடிவில் கடைக்குட்டி.



எல்லா முயற்குட்டிகளையும்போல இவை தத்தித்தாவின, துள்ளிக் குதித்தன, பாய்ந்து ஓடின, ஒளிந்து விளையாடின. சில நேரங்களில் ஒன்றோடொன்று சண்டையும் போட்டுக்கொண்டன.

ஆனால், கடைக்குட்டி மட்டும் இந்த மாதிரி எல்லாம் விளையாடுவதில்லை. எண்ணிக் கணக்கிடவே விரும்பிற்று அது. குழியை விட்டுத் தொலைவில் செல்ல அதற்குப் பயமாயிருக்கும். ஆகவே அது குழியின் வாயில் அருகே அமர்ந்து ஒன்று, இரண்டு, மூன்று என்று எண்ணிக்கொண்டிருக்கும்.

சின்னச் சின்ன கால்களாய் எத்தனையோ கால்களைக் கொண்ட ஒரு பூரான் அந்தப் பக்கமாய் வேகமாய் ஊர்ந்து சென்றது. நிறைய எண்ணலாம் என்று மகிழ்ந்து கொண்ட கடைக்குட்டி ஒரு கால், இரண்டு கால், மூன்று கால்... என்று எண்ணிற்று. ஆனால், அது நான்கு என்னி முடிப்பதற்குள் பூரான் போய்ச் சேர்ந்துவிட்டது.

போகட்டும் போ! வேகமாய்ச் செல்லும் பூரான் வேண்டாம் எனக்கு. நான் எளிதில் எண்ணக்கூடிய வேறு ஏதாவது கிடைக்கும் என்று கூறிக்கொண்டது கடைக்குட்டி.



எட்டி நின்று சுற்றிலும் பார்வையிட்டது. அருகே ஒரு பள்ளத்தில் கூடு நிறைய முட்டைகள் இருக்கக்கண்டது. மெல்லிய இறகுகள், புற்கள் அவற்றின்மீது இருந்தன.

கடைக்குட்டி மகிழ்ச்சியடைந்தது. இவை ஓடுவன அல்ல, நிம்மதியாய் நான் எண்ணிக் கணக்கிடுவேன் என்று கூறிக்கொண்டது.

பள்ளத்தில் வசதியாய் உட்கார்ந்து கொண்டு எண்ணிற்று: ஒரு முட்டை, இரண்டு முட்டை, மூன்று முட்டை, நான்கு... அப்போது கடைக்குட்டியின் தலைக்கு மேலே காற்றில் 'விர்' ரெனச் சப்தம் கேட்டது. வானம்பாடி ஒன்று அந்தக் கூட்டின் மீது வந்து உட்கார்ந்தது. முட்டைகளை அது தனது உடலால் மூடி மறைத்துக் கொண்டது.

உனக்கு இங்கே என்ன வேலை? என்று கடைக்குட்டியைப் பார்த்துக் கூறிற்று வானம்பாடி. எனது முட்டைகளை எதற்காக முறைத்துப் பார்க்கிறாய்?

இல்லை நான் வந்து... எண்ணி.... எண்ணிக் கணக்கிடலாமென... என்று கடைக்குட்டி திக்கித் திணறிற்று. பயத்தால் அதற்கு வாய் தடுமாறிற்று.

உனக்கு இங்கே வேலை இல்லை, வெளியே போய் விளையாடு என்று சொல்லி வானம்பாடி தனது அலகால் முட்டைகளைத் தனக்கு அடியில் நகர்த்தி வைத்தது.

தலையைத் தொங்க விட்டுக்கொண்டு, கடைக்குட்டி அங்கிருந்து வெளியேறிற்று. எண்ணிக் கணக்கிடத் தனக்கு ஒன்றும் கிடைக்கவில்லையே என்று நினைத்தவாறு சென்றது. அப்போது தரையில் தனக்கு எதிரே தானிய மணிகள் கொட்டிக் கிடந்ததைக் கண்ணுற்றது.

கடைக்குட்டி உடனே உற்சாகமடைந்து தானிய மணிகளை எண்ணிக் கணக்கிட ஆரம்பித்தது. ஆனால், அது நான்கு என்னி முடிப்பதற்குள் எங்கிருந்தோ கூட்டமாய்ச் சிட்டுக்குருவிகள் சிறகடித்துக் கூச்சலிட்டுப் பறந்து வந்தன.



கொட்டிக் கிடந்த தானிய மணிகளை தமது அலகால் கொத்தின. நொடிப் பொழுதில் அவ்வளவு தானியமும் மறைந்து போயிற்று. சிட்டுக்குருவிகள் அங்கிருந்து பறந்தோடின.

கடைக்குட்டிக்கு அழுகையே வந்துவிடும் போலிருந்தது. வீட்டுக்குத் திரும்பி வந்தது. மூலையில் தனது படுக்கையில் படுத்துக் கொண்டு, துயரம் தாங்காமல் விம்மிற்று.

அந்திப் பொழுதில் முயற்குட்டிகள் யாவும் வீட்டுக்குத் திரும்பி வந்தன. தலைச்சன், தலைச்சனுக்கு அடுத்தது, நடுவன் ஒன்று, நடுவன் இரண்டு, கடைமுதற்குட்டி ஆகிய இவை யாவும் சுற்றுநேரம் களைப்பாறின. பிறகு இவை மீண்டும் கும்மாளமடிக்க விரும்பி, கடைக்குட்டியை விளையாட வரும்படி அழைத்தன. கடைக்குட்டியின் காதைப் பிடித்து உலுக்கிற்று ஒரு குட்டி, அதன் காலை இழுத்தது இன்னொன்று, மூன்றாவது ஒன்று அதற்குக் கிச்சுக்கிச்சு மூட்டிற்று. ஆனால், கடைக்குட்டி எதற்கும் அசையவில்லை, விளையாட விரும்பவில்லை அது.

குழந்தைக்குக் இளைப்பாய் இருக்கிறது என்று நினைத்தது தாய் முயல். உடனே அது தனது வேலைகளை ஒதுக்கி வைத்து விட்டு, கடைக்குட்டியைத் தூக்கி மடியில் வைத்துக்கொண்டு, தாலாட்டுப் பாடிற்று.

அம்மா மடியில் கதகதப்பாய்ச் சுகமாய் இருந்தது. கடைக்குட்டிக்குத் தூக்கம் கண்ணைச் செருகிற்று. ஆனால் அப்போது குழியின் வாயில் வழியே தெரிந்த நீல வானத்தில் விண்மீன்கள் கண் சிமிட்டுவதைப் பார்த்தது அது.

நான் எண்ணிக் கணக்கிடுவதை இப்போது யாராலும் தடுக்க முடியாது. வானத்திலுள்ள இந்த விண்மீன்களை நான் எண்ணிச் சொல்வேன் என்று, அது தன்னுள் கூறிக்கொண்டது.

எண்ண ஆரம்பித்தது அது. ஒரு விண்மீன், இரண்டு விண்மீன், மூன்று விண்மீன், நான்கு...

உஸ்! என்று தாய் முயல் தனது ஏனைய குட்டிகளை எச்சரித்தது. உஸ்! கடைக்குட்டி தூங்குகிறது, சத்தம் போடாதீர்கள்!

# இளந்தேனீக்கள் கழகம் அங்கத்தவர்கள்

முழுப்பெயர் :- சு. நிலக்ஷி
கற்கும் பாடசாலை :-
சாவகச்சேரி இந்துக் கல்லூரி
தரம் :- 10
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டுத்துறை, பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- வ. சுஜீத்தா
கற்கும் பாடசாலை :-
வதிரி திரு இருதயக் கல்லூரி
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
வானொலி கேட்டல்,
பத்திரிகை வாசித்தல்.

முழுப்பெயர் :- த. தமயந்தன்
பெரியபுலம் மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
கிரிக்கெட்,
ஓவியம் வரைதல்.

முழுப்பெயர் :- ஸ்ரீ. சாந்தீபன்
கற்கும் பாடசாலை :-
பளை மத்திய கல்லூரி
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப்புத்தகம் வாசித்தல்,
கிரிக்கெட்.

முழுப்பெயர் :- க. விஜி
கற்கும் பாடசாலை :-
கலாநிதி ஆ. தியாகராஜா மத்திய மகா வித்தியாலயம்
தரம் :- 8
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- தெ. ஸ்ரீகிருஸ்ணா
கற்கும் பாடசாலை :-
நவக்கிரி அமெரிக்கன் மிஷன் தமிழ்க் கலவன் பாடசாலை.
தரம் :- 4
ஆர்வமுள்ள துறைகள் :-
கதை படித்தல், தொலைக்காட்சி,
விளையாட்டு.

முழுப்பெயர் :- சி. தயாபரன்
கற்கும் பாடசாலை :-
பொலிகண்டி இந்து தமிழ்க் கலவன் பாடசாலை
தரம் :- 7
ஆர்வமுள்ள துறைகள் :-
கதைப் புத்தகம் வாசித்தல், தொலைக்காட்சி பார்த்தல்.

முழுப்பெயர் :- சி. ஸ்கந்தசிவரூபசர்மா
கற்கும் பாடசாலை :-
முத்துத்தம்பி மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
பத்திரிகை வாசித்தல்,
சித்திரம் வரைதல், விளையாட்டு.

முழுப்பெயர் :- உ. கோசளா
கற்கும் பாடசாலை :-
வல்லை மகளிர் மகா வித்தியாலயம்
தரம் :- 9
ஆர்வமுள்ள துறைகள் :-
விளையாட்டு, கல்வி,
தொலைக்காட்சி பார்த்தல்.

## இளந்தேனீக்கள் கழகம்

நீங்கள் பதினைந்து வயதுக்குட்பட்டவரா?
அப்படியானால் நீங்களும் நமது ஈழநாடு சிறுவர் அரங்க 'இளந் தேனீக்கள்' கழகத்தில் அங்கத்தவராகலாம்.
இளந்தேனீக்கள் கழகம் உங்கள் ஆற்றலையும் திறன்களையும் வெளிப்படுத்தத் தயாராக இருக்கின்றது.
நீங்கள் செய்யவேண்டியது இதுதான்.
கீழ் உள்ள படிவத்தைப் பூரணப்படுத்தி உங்களின் தெளிவான புகைப்படம் ஒன்றுடன் எமக்கு அனுப்பிவையுங்கள்.
உங்கள் விபரங்கள் புகைப்படத்துடன் சிறுவர் அரங்கத்தில் பிரசுரமாவதுடன் இளந் தேனீக்கள் கழக உறுப்பினர் அட்டை விரைவில் உங்கள் வீடு தேடிவரும். விண்ணப்பங்கள் அனுப்பவேண்டிய முகவரி:-

**இளந்தேனீக்கள் கழகம்**
**சிறுவர் அரங்கம்**
**நமது ஈழநாடு**
267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.

## இளந்தேனீக்கள் கழகம்

### விண்ணப்பம்

முழுப் பெயர் : ......................................
கற்கும் பாடசாலை : ......................................
கற்கும் தரம் : ......................................
வீட்டு முகவரி : ......................................
பிறந்த திகதி : ......................................
ஆர்வமுள்ள துறைகள் : ......................................
......................................

............ ............
திகதி ஒப்பம்

............ ............
அதிபர்/ஆசிரியர் ஒப்பம் பெற்றோர் ஒப்பம்

இங்கே மடிக்கவும்



# தமிழ்மொழியில் முதன் முதலில்...

**தமிழ் கலைக்களஞ்சியம்**
உலகின் முதல் தமிழ் கலைக்களஞ்சியம் 'அபிதான கோசம்' யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த முத்துத் தம்பிப்பிள்ளையால் வெளியிடப்பட்டது. இதன் பின்னர்தான் அபிதான சிந்தாமணி வெளியானது.

**முதல் அகராதி**
தமிழ் மொழியில் தோன்றிய முதல் அகராதி 'சதுரகராதி' ஆகும். வீரமாமுனிவர் 1819 இல் இதனை அச்சிட்டு வெளியிட்டார்.

**விடுகதைத் தொகுப்பு**
அருணாசல முதலியார் 1877 இல் இரு சொல் அலங்காரம் என்னும் நூலைப்படைத்தார். இதுவே தமிழில் தோன்றிய முதல் விடுகதைத் தொகுப்பாகும்.

**முதல் அறிவியல் திங்கள் இதழ்**
தமிழ் மொழியில் முதன் முதலில் வெளிவந்த அறிவியல் திங்கள் இதழ் என்ற பெருமையை 1931 இல் வெளிவந்த தமிழ் மகசீன் என்ற இதழ் பெறுகிறது.

**முதல் குழந்தைகள் பத்திரிகை**
1840 ஆம் ஆண்டில் வெளிவந்த 'பாலதீபிகை' என்ற குழந்தைகள் பத்திரிகைதான் தமிழில் முதல் முதலில் வெளிவந்தது. இது நாகர் கோயிலிலிருந்து வெளியானது.

**முதல் செய்தித்தாள்**
'சுதேச மித்திரன்' என்ற செய்தித்தாள் தான் தமிழில் வெளிவந்த முதல் செய்தித்தாள் ஆகும். இது 1882 இல் ஜி.சுப்பிரமணிய ஐயர் என்பவரால் வெளியிடப்பட்டது.

**முதல் வார இதழ்**
1856 இல் வெளியான 'தினவர்த்தினி' என்ற இதழே தமிழில் வெளிவந்த முதல் வார இதழாகும்.

**முதல் பெண்கள் பத்திரிகை**
பெண்களுக்கான தமிழ் மொழியில் வெளிவந்த முதல் இதழ் 'சுகுண போதினி' என்பதாகும். இது 1883 இல் வெளியானது.

**பூரணமான சிறுகதை**
'லோகோ பாரி' என்ற இதழில் 1913 ஆம் ஆண்டு பாரதியார் எழுதிய 'ஆறில் ஒரு பங்கு' என்ற சிறுகதை தான் தமிழில் வெளிவந்த முதல் பூரணமான சிறுகதையாகும்.

**தொடர் கதை**
'விவேக சிந்தாமணி' இதழில் 1892 ஆம் ஆண்டு சாவித்திரி என்பவர் 'சரித்திரம்' என்ற பெயரில் எழுதி வெளியிட்ட தொடர்கதைதான் தமிழில் முதல் தோன்றிய தொடர்கதையாகும்.

**முதல் நாவல்**
தமிழ் மொழியில் முதன் முதலில் எழுதப்பட்ட நாவல் 'பிரதாப முதலியார் சரித்திரம்'. இதனை எழுதியவர் மாயூரம் வேதநாயகம்பிள்ளை. வெளிவந்த ஆண்டு 1879.

**முதல் தமிழாராய்ச்சி மாநாடு**
1964 இலேயே முதன் முதலில் உலகத் தமிழாராய்ச்சி மன்றம் உருவாகியது. முதலாவது உலகத் தமிழாராய்ச்சி மாநாடு 1966 இல் கோலாலம்பூரில் நடைபெற்றது.
யாழ்ப்பாணத்தில் 1974 இல் இம் மாநாடு நடைபெற்றது.

# வாத்து - Duck



இந்த நீச்சல் பறவையில் மாத்திரமே 125 இற்கு மேற்பட்ட வகைகள் உலகம் பூராகவும் பரந்து இருக்கின்றன. ஒவ்வொன்றும் ஒவ்வொருவிதம். இந்தப் பறவைகளில் ஆண் பறவையை DRAKE என்றும் பெண் பறவையை DUCK அல்லது HEN என்றும், குஞ்சுகளை DUCK LINGS என்றும் ஆங்கிலத்தில் குறிப்பிடுகின்றார்கள். ஆனால் தமிழில் எல்லாமே வாத்துக்கள் தான்.

வால் பகுதிக்கு மேலாக இருக்கும் சுரப்பியில் சுரக்கும் எண்ணெய் போன்ற திரவத்தை தம் அலகினால் எடுத்து இறகுகளின் மேல் அவ்வப்போது தடவிக்கொள்கின்றன. இறகுகள் நீரில் நனைந்து போகாமல் இருக்கவே அவ்வாறு செய்துகொள்கின்றன.

பூண்டுகளும், சிறு உயிரினங்களுமே இதன் உணவு. கரண்டி (SPOON) போன்ற அலகுகளால் இரையைப் பிடித்துண்ணுகின்றன. அலகின் விளிம்பு இதற்கேற்ப ரம்பம் போன்று இருக்கும். அலகின் விளிம்புகளும் நுனியும்தான் உறுதியானது. மேற்பகுதி மிருதுவாயிருக்கும். இங்கு உணர்வுள்ள நரம்புகளின் நுனிகள் நிறையவுள்ளன. இந்தப் பகுதியே வாத்துக்குத் தொட்டுணரும் உறுப்பாக இருக்கின்றது.

இவை தரையில் கூடுகட்டி முட்டைகளை இடுகின்றன. வெள்ளை நிறம் தொடங்கி பச்சைவரை முட்டைகளின் நிறம் இனத்துக்கு இனம் வேறுபட்டதாகக் காணப்படுகின்றன.

கூட்டைவிட்டு வெளியே புறப்படும் நேரங்களில் முட்டைகள் வெளித்தெரியாத வகையில் உதிர்ந்த தம் இறகுகளினால் மூடிவிட்டே செல்கின்றன. அவ்வளவு முன்னெச்சரிக்கை. முட்டையிலிருந்து வெளிப்பட்டதுமே குஞ்சுகள் தாயுடன் சேர்ந்து நீரில் நீந்தத் தொடங்கிவிடும். சில வாத்து இனங்கள் வீடுகளில் இறைச்சிக்காகவும் முட்டைக்காகவும் வளர்க்கப்படுகின்றன. சிலர் செல்லப்பிராணிகளாகவும் இவற்றை வளர்ப்பது உண்டு.

# தகவல் பெட்டி

- ஆங்கில மொழியிலுள்ள Diploma என்கின்ற கிரேக்கமொழிச் சொல்லுக்கு 'மடிக்கப்பட்ட காகிதம்' என்று பொருள்.
- எகிப்திய பிரமிட்டுக்களிலிருந்து எடுக்கப்பட்ட பல்வேறு பொருட்களில் 3000 ஆண்டுகளுக்கு மேலாகியும் கெடாமல் இருந்த உணவுப்பண்டம் தேன்.
- நீருக்கடியில் மூச்சை அடக்கி நீந்துபவர்கள், சுமார் 30 அடியிலிருந்து நூறு அடி வரை செல்லமுடியும். இரண்டு நிமிடங்கள் வரை அங்கேயே மூச்சை அடக்கி இருக்கவும் முடியும்.
- பூமியின் சராசரி வெப்பம் 14 பாகை செல்சியஸ்.
- 1839 இல்தான் சைக்கிளில் பெடல்கள் சேர்க்கப்பட்டன. அதுவரை சைக்கிளுடன் சிறிதுதூரம் ஓடி ஏறி அமர்ந்து, பிறகு இறங்கிச் சமாளித்தார்கள்.
- உலகின் மிகப்பெரிய உள்விளையாட்டு அரங்கம் லூசியானா சூப்பர் டோம். இதில் 95,427 இருக்கைகள் உள்ளன.
- உலகின் மிகப்பிரபல ஓவிய மங்கை மோனாலிசாவின் உண்மைப் பெயர் லிசா கியாகோண்டா (Lisa Giaconda)
- நட்சத்திரங்களின் பல்வேறு நிறத்துக்கு அவற்றின் வெப்பநிலையே காரணம். சிவப்பு நட்சத்திரங்கள் 2800 பாகை செல்சியஸும், நீல நிற நட்சத்திரங்கள் 28 ஆயிரம் பாகை செல்சியஸும், மற்றவை இவற்றுக்கு இடைப்பட்ட வெப்பத்திலும் இருக்கும். மஞ்சள் நிற சூரியன் 5500 பாகை செல்சியஸ் ஆகும்.
- இருபுறமும் எந்தச் சின்னமுமின்றி தேசியக் கொடியில் வெறும் பச்சை நிறம் மட்டும் கொண்டுள்ள நாடு லிபியா.
- மிகப்பழைய சட்டசபையைக் கொண்ட நாடு ஐஸ்லாந்து. உருவாக்கப்பட்ட வருடம் கி.பி 930.
- மிகப் பழமையான ஓவியங்களில் மிருகங்களும் வேட்டையாடுபவர்களும் மட்டுமே கருப்பொருளாக இருந்தனர்.
- ஒரே நேரத்தில் பல மனிதர்களை ஒரு வியாதி தாக்குவதை மருத்துவ விஞ்ஞானத்தில் 'எபிடெமிக்' (Epidemic) என்பர்.
- பூஜ்ஜியம் (O) என்ற இலக்கத்தை ரோமன் மொழியில் குறிப்பதற்கு குறியீடு கிடையாது.
- சூரியனை அடுத்து பூமிக்கு அருகிலுள்ள நட்சத்திரம் புறொக்ஸ்ஸிமா சென்டரி (Proxima centari).
- இஸ்ரேல் நாட்டில் நாடாளுமன்றம் 'நெஸஸெட' (Knesset) என்று அழைக்கப்படுகிறது.
- ஒரு உணவின் சுவை என்ன என்றறிய நாக்கிலுள்ள சுவை நரம்புகளுடன் மூக்கும் தேவை. கண்களை மூடிக்கொண்டு, மூக்கைப பிடித்துக்கொண்டு சாப்பிட்டால் அப்பிளுக்கும் வேகவைத்த உருளைக்கிழங்குக்கும் வித்தியாசம் தெரியாது.
- கிரேக்க இலககியங்களில் சூரியக் கடவுளாக வணங்கப்படுபவர் அப்பல்லோ (Apollo)
- உலகிலேயே அதிக தபால் நிலையங்கள் கொண்ட நாடு என்கின்ற பெருமையைக் கொண்ட இந்தியாவில், சுதந்திரம் பெற்ற வருடத்தில் மொத்தம் 22653 தபால் நிலையங்கள் இருந்தன. 2000 ஆம் ஆண்டு கணக்கெடுப்பின்படி 153454 தபால்நிலையங்கள் உள்ளன.

# விசர்நாய்க் கடிக்கு இலக்காகி ஒரேநாளில் 30 பேர் சிகிச்சை

(வவுனியா)

வவுனியா அரசினர் வைத்தியசாலையில் விசர்நாய் கடிக்கு இலக்காகி ஒரேநாளில் 30 பேர் சிகிச்சை பெற்றுள்ளதாக வைத்தியசாலை புள்ளி விபரங்கள் தெரிவித்தன.

ஒரேநாளில் விசர்நாய் கடிக்கு உள்ளாகி 30 பேர் கடந்த ஞாயிறன்று வவுனியா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றனர். இவர்களில் அநேகமானோருக்கு ஒரே நாயே கடித்துள்ளது.

இவர்களில் மல்லாவியைச் சேர்ந்த 46 வயதுடைய ச.காந்தரூபன், மடுவைச் சேர்ந்த 21 வயதுடைய சமன்மலின், 72 வயதுடைய புஸ்பம்மா ஆகியோர் அடங்குகின்றனர்.

இதேவேளை, விசர் நாய் கடிக்கு இலக்காகிய ஒருவர், சில தினங்களுக்கு முன்பு மரணமடைந்தார். இதைவிட இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்த விசர்நாய் கடி அதிகரித்தமைக்குக் காரணம்- கடந்தவாரம் பெய்த கோடை மழையே என வவுனியா வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

# இலக்கத்தகடு இல்லாத வாகனம் செலுத்துவோர் மீது சட்ட நடவடிக்கை

## தமிழீழ காவல்துறை அறிவிப்பு

(கிளிநொச்சி)

இலக்கத் தகடு அற்ற வாகனங்களை ஓட்டுபவர்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தமிழீழ காவல்துறையினர் அறிவித்துள்ளனர்.

போக்குவரத்துக்காகப் பயன்படுத்தப்படும் சகல வாகனங்களும் சட்ட விதிமுறைகளுக்கு அமைவாக இலக்கத் தகடுகள் பொருத்தப்பட்டிருத்தல் வேண்டும் அல்லது புதிதாக வாங்கிய வாகனங்கள் இலக்கத் தகடுகள் கிடைக்கும் வரையும் வாகன இயந்திர இலக்கம், செசி இலக்கம் என்பவற்றைக் கட்டாயமாக வாகன இலக்கத் தகடுக்குப் பதிலாக தொங்கவிடவேண்டும் எனத் தமிழீழ காவல்துறை வாகனப்போக்குவரத்துப் பிரிவு தெரிவித்திருக்கிறது.

இதற்கான நடவடிக்கைகள் அனைத்தும் கடந்த 10 ஆம் திகதி முதல் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதற்கமைய வாகன உரிமையாளர்கள் அனைவரும் வாகனங்களில் இலக்கத் தகடுகளைப் பொருத்தி, வீதிப் போக்குவரத்துக்கு உதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (தீ)

# பொதுத்தேர்தலில் அளித்த தீர்ப்புக்கு தென்துருவத் தமிழர் சம்மேளனம் வாழ்த்து

கடந்த 2ஆம் திகதி நடந்த நாடாளுமன்றப் பொதுத் தேர்தலில் நீங்கள் அளித்த தீர்வை, வழங்கிய ஆணையை எமது போராட்டவரலாறு பொன் எழுத்துக்களால் பதிவுசெய்யும் என்பது உறுதியென அவுஸ்ரேலியா, நியூசிலாநது, பப்புவா நியுகினி ஆகிய நாடுகளில் உள்ள ஈழத்தமிழர் ஒன்றியமான தென்துருவத் தமிழர் சம்மேளனம் தேர்தல் வெற்றியை முண்ணிட்டு விடுத்த வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது -

புலம்பெயர்ந்து வாழும் ஈழத் தமிழர்கள் உங்கள் தீர்ப்பால் தலை நிமிர்ந்து நிற்கின்றார்கள், சர்வதேச சமூகம் உங்கள் உறுதியைக் கண்டு வியப்படைந்துள்ளது, சிங்கள தேசம் உங்கள் தீர்ப்பை எப்படி எதிர்நோக்குவது என்று குழம்பியுள்ளார்கள், எமது போராட்டம் உள்ளும் புறமும் சோதனைகளை எதிர்நோக்கி நிற்கும் நிலையில்- நீங்கள் அளித்த தீர்ப்பும், உங்கள் உறுதியும் இன்னும் பல வெற்றிகளைக் குவிக்கும் என நம்புகின்றோம்.

தமிழர் தன்மானம் காத்த உங்களுக்கு நாம் தலை வணங்குகிறோம் என பத்து அமைப்புக்கள் சேர்ந்து வெளியிட்டுள்ள வாழ்த்துச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யானை காட்டுவதாகக் கூட்டிச்சென்று சிறுமியின் நகைகள் அபகரிப்பு

(சாவகச்சேரி)

யானை காட்டுவதாகக் கூட்டிச்சென்று, சிறுமியொருவர் அணிந்திருந்த நகைகளைத் திருடர்கள் கொள்ளையிட்டனர். இந்தச் சம்பவம் மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோயிலில் கடந்த திங்கட்கிழமை இடம்பெற்றது. பங்குனித் திங்கள் திருவிழாவுக்காக ஏராளமான பக்தர்கள் ஆலயத்தில் கூடியிருந்த சமயமே இத்திருட்டுச் சம்பவம் இடம்பெற்றது.

பெற்றோரின் கவனிப்பின்றி நின்ற சிறுமியை, யானைக் குட்டி காட்டுவதாகக் கூறி, தந்திரமாக அழைத்துச் சென்ற திருடர்கள் - சன நடமாட்டம் அற்ற பகுதியில் வைத்து நகைகளை திருடிக்கொண்டு தப்பிச் சென்றுறனர்.

அநாதரவாக நின்ற சிறுமியை ஆலயத்திற்கு வந்தவர்கள் பெற்றோரிடம் ஒப்படைத்தனர் (94)

# போரினால் பாதிக்கப்பட்ட பெண்களுக்கு சட்ட உதவி பெறுவதற்கு உதவிப்பணம்

(மன்னார்)

போரினால் பாதிக்கப்பட்ட இருபது கிராமங்களைச் சேர்ந்த பெண்களுக்கு சட்ட உதவியை பெறுவதற்கான உதவிப்பணம் வழங்கும் நிகழ்வு மன்னாரில் இடம்பெற்றது.

இந்த வைபவம் நேற்று முன்தினம் காலை 10 மணிக்கு மன்னார் மாதர் அபிவிருத்திச் சங்கத்தில் நடைபெற்றது.

ஒக்ஸ்பாம் நிறுவனத்தின் நிதியுதவியுடன் கடந்த காலத்தில் நாட்டில் ஏற்பட்ட போரினால் பாதிக்கப்பட்டு, உதவிகள் எதுவும் அற்று வாழும் மன்னார் மாவட்ட மக்களில் இருபது கிராமத்தைச் சேர்ந்த பாதிக்கப்பட்ட பெண்களைத் தெரிவுசெய்து அவர்களில் 20 பெண்களுக்கு உதவிப் பணமாக 5 ஆயிரம் ரூபாவும் சட்ட உதவி ஆலோசனைக்கு 3 ஆயிரம் ரூபாவும் வழங்கப்பட்டது.

பாதிக்கப்பட்ட இருபது பெண்களும் இதன்மூலம் சட்ட உதவி ஆலோசனையைப்பெற வழிசெய்து கொடுக்கப்பட்டது. (201)

## பெறுமதியான பொருட்கள் திருட்டு

(யாழ்ப்பாணம்)

அருட்கவி விநாசித்தம்பி புலவர் வீட்டிலிருந்து பெறுமதியான பொருட்கள் திருட்டுப்போயுள்ளன. நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற இந்தச் சம்பவத்திலே இலத்திரனியல் உபகரணங்கள், நீர் இறைக்கும் பம்பிகள் உட்பட பெருந்தொகைப் பணமும் திருட்டுப்போயுள்ளது.

ஜன்னல் கம்பிகளை வளைத்து உள்நுழைந்த திருடர்களே இச் செயலில் ஈடுபட்டுள்ளனர். அன்றைய தினம் இரவு நாகவரத நாராயணர் ஆலயத்திலும திருட்டுப்போயுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இந்தச் சம்பவம் தொடர்பாக தெல்லிப்பளை பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. நாகவர நாராயண ஆலய புனருத்தாரண வேலைகள் நடைபெற்று வரும் நிலையிலேயே இத்திருட்டு இடம்பெற்றிருப்பது குறிப்பிடத்தக்கது.(94)

## முருகண்டியில் புதிய வீதி

முருகண்டிப் பகுதியில் புதிதாக வீதி ஒன்று அமைக்கப்பட்டு வருகிறது. இதனால், கண்டி வீதியில் முறிகண்டி விநாயகர் ஆலயப் பகுதியில் ஏற்படும் இடநெருக்கடி ஓரளவு குறைக்கப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முருகண்டி விநாயகர் ஆலயத்தின் எதிர்ப்புறமாக அமைக்கப்படுகின்ற அப்பாதை, மீண்டும் ஆலயத்தைக்கடந்து கண்டி வீதியுடன் இணைவது குறிப்பிடத்தக்கது. (206)

## இரவில் நடமாடும் மர்மக்கும்பல்

தென்மராட்சியின் சரசாலைப் பகுதியில் இரவுவேளைகளில் நடமாடிவரும் மர்மக்கும்பல் ஒன்றினால், அப்பகுதி மக்களிடையே பெரும் அச்சஉணர்வு தோன்றியுள்ளது. குறிப்பாகப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர், படையினரால் விடுவிக்கப்பட்ட மக்கள் குடியிருப்புப் பகுதிகளை மையமாக வைத்தே இந்தக் கும்பல் நடமாடுவதாக அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இக்கும்பல் கொள்ளையிடும் நோக்கில் மட்டுமே செயற்படுகின்றதா என உறுதியாகத் தெரியவில்லையெனவும் அப்பகுதி மக்கள் மேலும் தெரிவிக்கின்றனர். (202)

## சீனமொழி திரைப்படம்

யாழ்.பல்கலைத் திரைப்பட வட்டத்தின் ஏற்பாட்டில் நாளை காலை 10 மணிக்கு யாழ்.பல்கலைக்கழக புவியியற்துறை மண்டபத்தில் 'சூசௌ நதி' (Sozhou River) எனும் சீனமொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் காண்பிக்கப்படவுள்ளது. அத்துடன் இந்தியாவின் பிரபல கேலிச் சித்திர கலைஞர் வின்ஸ் பற்றிய விபரணமும் காண்பிக்கப்படும்.

# துவிச்சக்கர வண்டிகளுக்கான உரிமத்தகடுகளைப் பெறவும்

யாழ்ப்பாண மாநகர சபை எல்லைக்கு உட்பட்ட துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்கள் 2004 ஆம் ஆண்டுக்கான உரிமத்தகடுகளை உடனடியாக மாநகரசபை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளுமாறு மாநகரசபை ஆணையாளர் அறிவித்துள்ளார்.

உரிமத்தகடு பெறுவதற்காக யாழ். மாநகர சபையினால் வழங்கப்பட்ட காலக்கெடு கடந்த 31 ஆம் திகதியுடன் முடிவடைந்துவிட்டதால், வீதிகளில திடீர்ப் பரிசோதனைகள் செய்யப்படும் என்றும், உரிமத்தகடு பெறாதோர் மீது குற்றப்பணம் அறவிடப்படுமெனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, அனைத்துத் துவிச்சக்கர வண்டிப் பாவனையாளர்களும் தேவையற்ற அசௌகரியங்களைத் தவிர்த்துக்கொள்ளும் முகமாக உரிய ஒத்துழைப்பைத் தந்துதவுமாறு கேட்கப்பட்டுள்ளது. (லெ)

# அளவெட்டி அம்பிகை வீதியில் கூட்டுறவுச்சங்கம் நிறுவுமாறு அப்பகுதி மக்கள் கோரிக்கை

அளவெட்டி அம்பிகை வீதிப் பகுதியிலே கூட்டுறவுச் சங்கமொன்று அமைக்கப்படவேண்டுமென அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். அளவெட்டி- மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்கத்தின் கிளையொன்றையே இவ்விடத்தில் அமைக்குமாறு இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இது தொடர்பாக பல தடவைகள் அளவெட்டி- மல்லாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க இயக்குநர் சபைக்கு தெரியப்படுத்திய போதும், இதுவரையும் எதுவித நட வடிக்கைகளும் எடுக்கப்படவில்லை யென இப்பகுதி மக்கள் குறைகூறியுள்ளனர்.

மக்கள் முழுமையாக மீளக் குடியமராத நிலையிலே, கூட்டுறவுச் சங்க கிளையை அமைக்க முடியாதுள்ளதாகத் தெரிவித்த சங்கத் தலைமைப்பீடம், பெரும்பாலான மக்கள் தமது வீடுகளில் குடியேறிய பின்னரும் கூட்டுறவுச் சங்க கிளையை அமைப்பதற்கான நடவடிக்கைகளை எடுக்கவில்லை.

இப்பகுதியில் முன்னர் கூட்டுறவுச் சங்கக் கிளையொன்று அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (94)

## சைவப்புலவர் சங்க பரீட்சைகள் 24 இல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தால் நடத்தப்படும் இளஞ் சைவப்புலவர், சைவப்புலவர் தேர்வு எதிர்வரும் 24 ஆம் திகதிமுதல் 26 ஆம் திகதிவரை யாழ்பாணம், வவுனியா, கொழும்பு ஆகிய மாவட்டங்களில் நடைபெறவுள்ளது.

இளஞ்சைவப்புலவர் தேர்வுக்கு 75 பேரும், சைவப்புலவருக்கு 28 பேரும் தோற்றவுள்ளனர். இவர்களுக்கான அனுமதியட்டைகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

# வீட்டுத்திட்டப் பகுதிகளில் இடம்பெறும் கலாசார சீரழிவுகளை கட்டுப்படுத்துங்கள்

## அரசியற்துறையினரிடம் மகஜர் கையளிப்பு

தென்மராட்சியின் நாவற்குழி வீடமைப்புத்திட்டப் பகுதியில் தொடர்ச்சியாக இடம்பெற்றுவரும் கொள்ளைச் சம்பவங்கள் மற்றும் கலாசார சீரழிவு நடவடிக்கைகளை தடுத்துநிறுத்த நடவடிக்கை எடுக்குமாறு, அப்பகுதி மக்களால் விடுதலைப் புலிகளின் தென்மராட்சி கோட்ட அரசியற்துறை அலுவலகத்தில் மகஜர் ஒன்று கையளிக்கப்பட்டுள்ளது.

2000 ஆம் ஆண்டில் இப் பகுதியில் இடம்பெற்ற மோதல்களை அடுத்து, இந்தக் குடியிருப்புத் திடடப் பகுதியில் குடியமர்ந்திருந்த மக்கள் முற்றாக இடம்பெயர்ந்துள்ள நிலையில், அவர்களது குடியிருப்புகளிலேயே கொள்ளைகள் தொடர்ந்து இடம்பெறுவதாக முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

வீடுகளிலுள்ள ஓடுகள், கதவு, யன்னல்கள் எனப் பலவும் - வாகனங்களில் வரும் கொள்ளைக் கும்பலால் கழற்றி எடுத்துச் செல்லப்படுவதாகவும் அந்த முறைப்பாட்டில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. அத்துடன், இதைத் தடுக்க முற்பட்டவர்கள் மீது கொலைப் பயமுறுத்தல் விடுக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (202)

# பாடசாலைகளின் கல்விநிலை தொடர்பாக நேற்று ஆராயப்பட்டது!

மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளர் தலைமையில் ஐந்து கல்வி வலயத்தைச் சேர்ந்த வலயக் கல்விப் பணிப்பாளர்களுக்கான கூட்டம் ஒன்று நேற்று மேலதிக மாகாண கல்விப் பணிப்பாளர் அலுவலகத்தில் நடைபெற்றது.

இதில் யாழ்.மாவட்டத்தில் இதுவரை இயங்காத நிலையில் உள்ள பாடசாலைகள் தொடர்பாகவும், எதிர்காலக் கல்வித் திட்டங்கள் தொடர்பாகவும், இந்த வருடம் மாணவர்களுக்கு விநியோகிக்கப்படவுள்ள பாடநூல்கள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

இதைவிட யாழ்.மாவட்டப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணவர்களின் தொகை ஆசிரியர்களின் சேவைகள் தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது என வலயக் கல்விப் பணிமனை வட்டாரங்கள் தெரிவித்தன.

# உலக சுகாதார தினத்தையொட்டி மாணவர்களிடையே கீதப் போட்டி

## மத்திய சுற்றாடல் நிலையம் ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் யூன் மாதம் 5 ஆம் திகதி இடம்பெறவுள்ள உலக சுற்றாடல் தினத்தை முன்னிட்டு இலங்கை மத்திய சுற்றாடல் நிலையத்தால் பாடசாலை மாணவர்களுக்கிடையே சுற்றாடல் கீதம் இசைக்கும் போட்டி ஒன்று நடத்தப்படவுள்ளது.

இதனடிப்படையில் யாழ். மாவட்டப்பாடசாலை மாணவர்களுக்கான போட்டிகள் யாவும் எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 30 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

ஏழாம் வகுப்பிற்கு மேற்பட்ட எவரும் இதில் கலந்துகொள்ளலாம். இந்தப் போட்டியில் பங்குபற்றி மாவட்ட மட்டத்தில் தெரிவு செய்யப்படுவோர் மாகாண மற்றும் அகில இலங்கை ரீதியிலான போட்டிகளுக்கும் அழைத்துச் செல்லப்படவுள்ளனர்.

யாழ்.மாவட்ட உப பிராந்திய சுற்றாடல் அதிகாரசபையினால் யாழ்.மாவட்டப் பாடசாலைகளுக்கிடையிலான போட்டிகள் நடத்தப்படவுள்ளன.

போட்டிக்கான விண்ணப்பங்கள், வரையறைகள் யாவும் பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர்களினூடாக அந்தந்தப் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பாடசாலை அதிபர்கள் மூலமாக விண்ணப்பங்கள் யாழ்.பிராந்திய சுற்றுச்சூழல் அதிகாரசபைக்கு அனுப்பிவைக்கப்படல் வேண்டும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ப)

வாரநோக்கு

யாழவன்






# துரோகி கருணாவின் வீழ்ச்சியும் தமிழ்த் தேசியத்தின் எழுச்சியும்

கடந்த வாரம் தமிழ்த் தேசியத்திற்கே முக்கியமானதொரு வாரமாக நகர்ந்து சென்றுள்ளது. தமிழ்த்தேசிய இனம் தமிழீழ விடுதலைப் புலிகளிகளின் தலைமையின்கீழ் திரண்டுள்ள உண்மையை - உலகம் உணர்ந்து வரும்வேளையில், இடையில் எழுந்த கருணாவின் சலசலப்பு தற்போது அடங்கிவிட்டது.

கருணாவின் அடாவடித்தனம் நடவடிக்கைகளை யாரும் எதிர்பாராத விதத்திலே, குறுகிய காலத்திற்குள் அடக்கிய தன்மையானது - தமிழினத் தலைமையின் ஆளுமையின் இன்னொரு வடிவத்தைக் காட்டியுள்ளது.

'இத்தகைய துரோகத்தனமான செயல்களில்மூலமாக, கருணா போன்ற தீயசக்திகள் எதிர்பாராத வகையிலே, ஏற்றுக்கொள்ள மறுக்கும் வகையிலே விடுதலைப் புலிகள் மீதான நம்பிக்கை தமிழ்மக்கள் மத்தியிலும், புலிகள் மீதான கவனம் சர்வதேசரீதியிலும் அதிகரித்துள்ளது.

**கருணா தப்பிச்சென்றவேளையிலே வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்துள்ளதாக அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அதிலே - தான் எதிர்பார்த்த அளவு ஒதத்துழைப்பை இராணுவத்தினர் தனக்கு வழங்கவில்லை எனத் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை வைத்துப்பார்க்கும்போது, இராணுவத்தினர் ஓரளவு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் என்பது புலனாகின்றது. இல்லாவிடில் காயமடைந்த கருணா அணியினரை அரச கட்டுப்பாட்டு பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு எடுத்துசெல்ல முடியாதிருந்திருக்கும்.**

நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலின்மூலமாக ஜனநாயகரீதியிலே தமிழ்த் தேசியம் எனும் ஒப்பற்ற தனித்துவ சக்தியை, தமிழ் மக்கள் உலகத்தின் கவனத்திற்கு கொண்டுவந்து நிறுத்தியுள்ளனர். இந்தநிலையிலே துரோகி கருணாவால் கிழப்பப்பட்ட, வலுவற்று - என்றோ புதைந்துபோன பிரதேசவாதக் கொள்கையானது - தமிழத் தேசியம் மீதான சர்வதேச நோக்கிலே சிறுகறையை ஏற்படுத்தியிருந்தது. அந்தக் கறை தற்போது இலகுவாக அகற்றப்பட்டுவிட்டது.

கருணாவின் அடாவடித்தனத்திற்குச் சில ஊடகங்களும், இனவாதிகளும் சர்வதேசரீதியான பின்னணிச் சக்திகளும் உறுதுணையாக நின்றன. ஓரளவிற்கு உறுதிப்படுத்தத் தக்க வகையில் இலங்கை இராணுவத்தினரின் உதவியும் கருணாவிற்கு இருந்திருக்கிறது. இல்லாவிடின், மட்டக்களப்பிலிருந்து தொப்பிகல காட்டிலிருந்து தப்பிச்செல்ல கருணாவால் முடிந்திருக்காது.

தற்போது கருணா எங்குள்ளார் என ஊர்ஜிதப்படுத்தப்படாத நிலையிலே, தமக்கும் கருணாவிற்கும் எதுவித தொடர்பும் இல்லை, தாம் கிழக்கிலுள்ள நிலைமைகளை ஆராய்ந்து வருவதாகவே இராணுவத்தளபதி பலகல்ல தெரிவித்தார். இந்த கருத்தானது தற்போதைய சூழ்நிலையில், இராணுவத் தளபதியினால் தெரிவிக்கப்படவேண்டிய அவசியதேவை அவர்களைப் பொறுத்தவரையில் எழுந்துள்ளது.

ஏனெனில், கருணாவின் திடீர் எழுச்சியில் பங்குகொண்ட அனைத்து சக்திகளுக்கும் அவரது திடீர் படுவீழ்ச்சி மூக்குடைபடவைத்துள்ளது.

கருணாவையும் அவரது உழுத்துப் போன பிரதேசவாதக் கொள்கையையும் வளர்த்தெடுத்து அதன்மூலமாகத் தமிழ்த்தேசியத்தை சிதைத்து, அதன பின்னர் விடுதலைப் புலிகளின் பலத்தைக் குறைத்து, இறுதியாக தமிழினத்தின் விடுதலைப் போராட்டத்தையே மழுங்கடிக்கச் செய்துவிடலாம் என அந்தச் சக்திகள் மனக்கோட்டை கட்டின. இன்று அவையெல்லாம் மண் கோட்டையாகி இடிந்துவிட்டன.

இந்தநிலையிலே கருணாவிற்கும் தமக்கும் தொடர்புள்ளதாகவோ அல்லது தொடர்பு இருந்ததாகவோ கூறிக்கொண்டால், கருணாவின் தோல்வி தமது தோல்வியாகவும் கருதப்படுமென அந்தச் சக்திகள் அச்சமடைகின்றன. இதனாலேயே உண்மையை மூடிமறைத்து, காலத்திறகு ஏற்றாற்போல் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றன.

கருணா தப்பிச்சென்றவேளையிலே வெளிநாட்டு ஊடகம் ஒன்றிற்கு பேட்டியளித்துள்ளதாக அந்த ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது. அதிலே - தான் எதிர்பார்த்த அளவு ஒதத்துழைப்பை இராணுவத்தினர் தனக்கு வழங்கவில்லை எனத் தெரிவித்ததாகக் கூறப்பட்டுள்ளது. இந்தக் கருத்தை வைத்துப்பார்க்கும்போது, இராணுவத்தினர் ஓரளவு ஒத்துழைப்பு வழங்கியுள்ளனர் என்பது புலனாகின்றது. இல்லாவிடில் காயமடைந்த கருணா அணியினரை அரச கட்டுப்பாட்டுப் பகுதிகளிலுள்ள வைத்தியசாலைகளுக்கு எடுத்துச்செல்ல முடியாதிருந்திருக்கும்.

தனக்கு ஆயுத, படைரீதியாக இராணுவத்தினரின் ஒத்துழைப்பு கிடைக்குமென நம்பியிருந்த கருணா - இறுதியிலே ஏமாற்றப்பட்டுள்ளார். அதற்குமேலாக அவரால் சூழ்நிலைக் கைதிகளாக்கப்பட்ட போராளிகளும் - புலிகளின் தலைமை மீதான தமது விசுவாசத்தை சந்தர்ப்பம் கிடைத்தபோது வெளிப்படுத்தியுள்ளனர். இதனாலே, புலிகளின் அணிகள் கருணாவை நோக்கி முன்னேறியபோது எதிர்ப்புக்கள் எதனையும் காட்டாது, அந்தப் போராளிகள் ஆயுதங்களுடன் சரணடைந்தனர்.

இறுதிவேளையிலே யாருடைய பலமான துணையுமின்றி தனித்துப்போன நிலையில், தன்னை நம்பி ஐயாயிரம் போராளிகள் இருப்பதாகக் கூறிய கருணா -இறுதியிலே அந்தப் போராளிகளை கைவிட்டு தப்பியோடியுள்ளார். இதன்மூலமாகவும் கருணா தன்னையறியாமல் தமிழ்த் தேசியத்திற்குப் பெரியதொரு வலுவை சேர்த்துள்ளார்.

சாதாரண எந்த ஒரு மனிதனையும் தடுமாறச்செய்யும் பிரதேசவாதக் கொள்கையைக் கருணா கையில் எடுத்தபோது, தலைமைக்கு விசுவாசமான சில போராளிகளும் கருணாவின் பக்கம் சார்ந்ததாகக் கருதப்படுகிறது. அந்த போராளிகள் தற்போது ஒரு தீர்க்கமான முடிவை எடுத்திருப்பார்கள், நிச்சயமாக எடுததிருக்கவேண்டும். அதாவது, கருணாவை நம்பினோர் கைவிடப்படுவர் என்ற உண்மையை அவர்கள் உணர்ந்திருப்பர். இதன்மூலமாக கருணா மீதான அவர்களது நம்பிக்கை முற்றுமுழுதாக தகர்ந்து, புலிகளின் தலைமைமீதான விசுவாசம் அதிகமாக வலுப்பெற்று இருக்கும். இது யதார்த்தபூர்வமான உண்மை.

சிறியகால இடைவெளிக்குள் தடுமாறிப்போன அந்தப் போராளிகள் - தற்போது ஒரு தெளிவைப் பெற்றிருப்பார்கள். அதன்மூலமாக அவர்கள் தமது உயிர் இருக்கும்வரை தமிழத் தேசிய இனத்தின் விடிவுக்காகப் போராடவேண்டும் என்ற உறுதியையும் எடுத்திருப்பார்கள். இதுவொரு நல்ல மாற்றத்தை உருவாக்கியே தீரும்.

அத்துடன், மட்டக்களப்பு மக்களும் சரியானதொரு தெளிவை இதன்மூலமாகப் பெற்றுக்கொள்ளக்கூடியதாக இருந்திருக்கும். கருணா அணிக்கெதிராக விடுதலைப் புலிகளின் தாக்குதல் நடவடிக்கை காரணமாக இடம்பெயர்ந்த மக்களும், விடுதலைப் புலிகள் மீதான தமது முழு ஆதரவை வெளிப்படுத்தி நின்றனர். அவர்கள் இடம்பெயர்ந்திருந்த வேளையிலே, ஊடகங்களுக்கு அளித்த பேட்டியிலே அதனைத் தெளிவாகக் கூறியிருந்தனர்.

இதன்மூலமாகப் பிரதேசவாதம் என்பது தமிழ் மக்கள் மத்தியிலே எடுபடாத ஒரு கருத்தென்பதை கருணா மட்டுமன்றி, ஏனைய சில சக்திகளும் உணர்ந்துகொண்டிருக்கும்.

ஆட்சிக்கு வந்த புதிய அரசின் தலைவியான ஜனாதிபதி சந்திரிகாவும் இதனை நன்கு உணரவேண்டும். வடக்கையும் - கிழக்கையும் தனித்தனி நிர்வாக அலகுகளாக பிரிப்பதற்கு அவர் முயற்சிகளை எடுத்து வந்தமை தெரிந்த விடயமே.

அவர் தனது முயற்சியின் வெற்றியை கருணாமூலமாகச் சாதிக்கத் திட்டம் தீட்டினார். அதனாலே வடக்கு- கிழக்குக்கான புனர்வாழ்வுக்குப் பொறுப்பான அமைச்சுப் பதவியைத் தன்வசம் வைத்திருந்தார். அந்த அமைச்சுப் பொறுப்பு ஈ.பி.டி.பி செயலாளர் நாயகம் டக்ளஸ் தேவானந்தாவிற்கு வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட சூழ்நிலையிலே, ஜனாதிபதி அந்த அமைச்சை தன்வசப்படுத்தி, கருணா மூலமாக அபிவிருத்தி என்ற பெயரிலே கிழககு மக்களை திசைதிருப்ப முயன்றார். ஆனால் அவரது எண்ணம் நிறைவேறவில்லை. வடக்கு-கிழக்குக்கான பிரிப்பின் இரண்டாவது முயற்சியும் தோல்வியுற்றுள்ளது.

இதன்மூலம், கருணாவின் வீழ்ச்சிக்குப் பின்னால் தமிழ்த் தேசியத்திற்கு எதிரான போக்குடைய பல சக்திகள் தோற்கடிக்கப்பட்டுள்ளன. இது தமிழ்த் தேசிய விரோத சக்திகளுக்கு நல்லதொரு பாடமாக அமைந்துள்ளது. தமிழ் மக்கள் மீண்டும் ஒரே தலைமையின் கீழே வலுப்பெற்று பலம் பெற்றுள்ளார்கள்.

இந்தச் சந்தர்ப்பத்திலே கருணாவிற்கு அரச தஞ்சம் அளிக்கவிருந்தால், அது சமாதான முயற்சிகளைப் பெரிதும் பாதிக்கும் எனச் சர்வதேச இராஜதந்திரிகளால் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது. ஜே.வி.பி, சுதந்திரக்கட்சி கூட்டான-ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆட்சிப் பீடம் ஏறியமையே, சமாதான முயற்சிகளைத் தொடரமுடியாமல் செய்துவிடுமோ என்ற ஐயப்பாடு எழுந்துள்ள சூழலிலே, கருணாவிற்கும் அவரது துரோகத் தனத்திற்கும் அரசு ஆதரவு கொடுத்து தஞ்சமளிப்பதன் மூலமாகச் சமாதான முயற்சிகள் மேலும் பாதிப்படைய வாய்ப்புண்டு.

தனிமனிதன் கருணாவிற்கு தஞ்சம் அளிக்கப் போய், யானை தன்முதுகில் சேற்றை அள்ளி வாரியது போல ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசும் நாட்டுக்கு பெரும் தீங்கைப் பெற்றுக்கொடுக்க முனைகின்றது. பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஹேரத் வெளியிட்டுள்ள கருத்தில் - கருணாவிற்கு அரசில் தஞ்சம் கொடுப்பது தொடர்பான கருத்து கவனத்தில் கொள்ளவேண்டிய தொன்றாகும்.

தனது சடுதியான தோல்வியை கருணாவும் அவ்வளவாக எதிர்பார்க்கவில்லை. இரத்தம் சிந்தாமலே கருணாவின் பிரச்சினை முடிவுக்கு கொண்டுவரப்படுமென விடுதலைப் புலிகளின் தலைமை அவ்வப்போது வெளியிட்ட கருத்துக்களின் காரணமாக, கருணா தனது சுயபாதுகாப்பிலே அதிக அக்கறையைச் செலுததி வந்தார். அதனால், தனது பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக இருந்த போராளிகள் பலரையும் கருணா சுட்டுக்கொலை செய்துள்ளார். இதில் விடுதலைப்புலிகளின் மட்டக்களப்பு புலனாய்வுத்துறை துணைப் பொறுப்பாளர் நீலன் முக்கியமானவர்.

கருணா கூறியது போன்று- மட்டக்களப்பு, அம்பாறை மக்களின் உரிமைகளுக்காகவே அவர் குரல் கொடுத்திருந்தால் அல்லது அவர் முன்னர் குறிப்பிட்டதுபோல தென் தமிழீழ நலனுக்காகவே பாடுபடுவதாகவும், தென் தமிழீழத்தில் உயிரை விடுவதையே மேலானதாகக் கருதுவதாகவும் இருந்திருந்தால, தனது உயிரை மட்டும் காக்கும் நலனுடன் தப்பியோடியிருக்க வேண்டிய அவசியம் இல்லை. விடுதலைப் புலிகள் திருப்பித் திருப்பிக் கூறியது போன்று கருணாவின் பிரச்சினை தனிமனித பிரச்சினையாகிவிட்டது. கருணாவின் துரோகத்தனம் அப்பட்டமாக வெளியுலகிற்குத் தெரியப்படுத்தப்பட்டுவிட்டது. காக்கை வன்னியன், எட்டப்பன் வரிசையிலே வரலாறு கருணாவையும் இணைதது்க் கொண்டுவிட்டது. காலநீரோட்டம் இன்னும் பலரையும் இந்தப்பட்டியலில் இணைக்காத வண்ணம் காக்கவேண்டியது தமிழ் அபிமான சக்திகள் அனைவருக்கும் உரிய கடமையாகும். இதற்காக விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தால் அதன் இராணுவ நிர்வாக கட்டமைப்புக்களில் காலத்திற்குக் காலம் மாற்றத்தை ஏற்படுத்தவும் வாய்ப்புக்களுள்ளன.

தென்னிலங்கை அரசியல் நிலைமைகளும் மேலும் சூடேறத்தொடங்கியுள்ளன. பொருத்தமில்லாத கலியாணம்போன்று அமைந்திருந்த ஜே.வி.பி - சுதந்திரக்கட்சி கூட்டுக்கிடையே ஆரம்பமுதலே தொடர்ந்த பிரச்சினைகள் இன்று அமைச்சரவை நியமனம் வரை சென்றுள்ளது. ஜே.வி.பியினர் மகாவலி அபிவிருத்திசபை, திரைப்படத் கூட்டுத்தாபனம் ஆகியன உள்ளடங்கலாக அமைச்சுக்களை கோரி வருகின்றனர். ஆனால், இவையிரண்டையும் தனது கைக்குள் வைத்துள்ள ஜனாதிபதி - ஜே.வி.பியினருக்காக விட்டுக்கொடுப்பதாகத் தெரியவில்லை.

குறிப்பாக ஜே.வி.பி. இவ்விரு தாபனங்களின் பொறுப்புக்கள் உள்ளடங்கிய அமைச்சுக்களைக் கோருவதற்கான அடிப்படைக் காரணம் - அவர்கள் தமது அரசியல் எதிர்காலத்தை வலுப்படுத்துவது பற்றி சிந்திப்பதே ஆகும்.

சிங்கள மக்களின் பெரும்பான்மை ஆதரவைப்பெற்ற தனிக்கட்சியாக மாறுவதை இலக்காக கொண்டுள்ள ஜே.வி.பி, அடிமட்ட சிங்கள மக்களுடன் பழகுவதற்கான வாய்ப்பாகவே இந்த அமைச்சுக்களைக் கோரிவருகின்றது.

தனித்து ஆட்சி அமைக்கும் நோக்குள்ள ஜே.வி.பி, பொருளாதார நிலையில் பாதிப்படைந்துள்ள மக்களுக்கான திட்டமாகிய மகாவலி அபிவிருத்தித்திட்டத்தைக் கைப்பற்றுவதன் மூலமாக, அரசியல் இலாபம் தேட முனைகிறது. மேலும் சிங்கள மக்களின் பிரதான பார்வை ஊடகங்கள், திரைப்படக் கூட்டுத்தாபனத்தோடு தொடர்புடையவை. எனவே, அதன் மூலமாக தனது அரசியல் கொள்கைகளைக் கலை வடிவங்களினூடாக பரப்பவும் ஜே.வி.பி. முயற்சிக்கிறது என்றே எண்ணத்தோன்றுகின்றது.

தற்போது காணப்படும் இழுபறி நிலைமைகள் தொடர்ந்து நீடித்தால், மக்கள் ஐக்கிய சுதந்திர முன்னணி விரைவாக சிதறிப்போவதற்கு வாய்ப்புக்கள் உள்ளன. ஸ்திரமான அரசொன்றை அமைக்கமுடியாத நிலையிலே, அண்மைக்காலமாகச் சிங்கள மக்கள் தெளிவான ஒரு அரசியல் சிந்தனையைக் கொண்டிராமையே இந்த நிலைமைகள் தோன்றுவதற்கான பிரதான காரணமாகும்.

இல்லாவிடின், இது பௌத்த - சிங்கள நாடு. அதனைக் காப்பதே நமது கடமையென தேர்தலில் இறங்கிய ஹெல உறுமய பிக்குகளால் ஒன்பது ஆசனங்களை கைப்பற்ற முடிந்திருக்காது. முழுமையாகத் தன்னை இனவாதத்திற்கு ஊறப்போட்டுள்ள கட்சியே ஹெல உறுமய ஆகும்.

இந்தக் கட்சி தனது தேசியப் பட்டியல் மூலமாக ஆனந்தசங்கரிக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வழங்க முன்வந்தமையைத் தனக்கு அளிக்கப்பட்ட கௌரவம் எனக் கூறுகிறார் சங்கரி. இந்தமுறை தேர்தல் மூலமாக தமிழ் மக்கள் அவருக்கு அளித்த கௌரவமே போதுமானது. அதைக் கருத்திற்கொள்ளாது, ஹெல உறுமய கௌரவம் அளிப்பதாகக்கூறி, இன்னும் தனது அரசியலை அழுக்காக்கிக் கொண்டுள்ளார் சங்கரி.

**தனித்து ஆட்சி அமைக்கும் நோக்குள்ள ஜே.வி.பி, பொருளாதார நிலையில் பாதிப்படைந்துள்ள மக்களுக்கான திட்டமாகிய மகாவலி அபிவிருத்தித்திட்டத்தைக் கைப்பற்றுவதன் மூலமாக, அரசியல் இலாபம் தேட முனைகிறது. மேலும் சிங்கள மக்களின் பிரதான பார்வை ஊடகங்கள், திரைப்படக் கூட்டுத்தாபனத்தோடு தொடர்புடையவை. எனவே, அதன்மூலமாக தனது அரசியல் கொள்கைகளைக் கலை வடிவங்களினூடாக பரப்பவும் ஜே.வி.பி. முயற்சிக்கிறது என்றே எண்ணத்தோன்றுகின்றது.**

நடைபெற்று முடிந்த சில சம்பவங்களை வைத்துப்பார்க்கும்போது - இந்த ஆண்டு தமிழ் மக்களைப் பொறுத்தவரையிலே அதிர்ஷ்டமான ஆண்டென்றே சொல்லவேண்டும். தமது அபிலாசையை, உரிமைக்கான குரலை உலகதிற்கு எடுத்துச் சொல்ல பொதுத்தேர்தலை- ஒரு மாறுபட்ட, ஆனால் உறுதியான களமாகவும் தளமாகவும் பயன்படுத்தி ஜனநாயக ரீதியிலே பெருவெற்றியை நிலைநாட்டியுள்ளார்கள்.

அத்துடன், தேர்தல்மூலமாகத் தமிழின விரோத சக்திகளான ஆனந்தசங்கரியை முற்றாகவும், ஈ.பி.டி.பியினரை ஒரேயொரு ஆசனத்தை மட்டும் பெறும்வகையிலும் ஓரம் கட்டினார்கள்.

எல்லாவற்றிலும் முதன்மையாக, கூடவிருந்து குழிபறித்த கோடரிக்காம்பான கருணா எனும் தனிநபரை - தமிழர் தாயகத்தை விட்டே துரத்தியடித்தார்கள். இவ்வாறு பல திருப்புமுனைகளைக் கொண்டதாக இந்த வருடம் தமிழர்களுக்கு அமைந்துள்ளது.

அதைவிட, ஆயுதரீதியாக விடுதலைப் புலிகள் பலம்பெற்றுள்ள நிலையிலே, ஜனநாயக வழியிலே தமிழரசுக்கட்சியை மீண்டும் பலம் பெறச் செய்துள்ளார்கள். இதற்கும் சங்கரி துணையாக இருந்தமைக்காக அவரைப் பாராட்டவேண்டும். துரோகிகளும் தம்மையறியாமலேயே பல சந்தர்ப்பங்களை தமிழினத்திற்குச் சாதகமாக ஏற்படுத்திக் கொடுத்தமை தமிழின விடுதலையின் தர்மத்தை நிலைநாட்டுவதற்கு உதவியாகவே அமைந்து வருகிறது.

எது எப்படி அமைந்தாலும், துரோகி கருணா தமிழர் தாயக்திலிருந்து விரட்டப்பட்டமை காரணமாக - கடந்த வாரம் தமிழ் மக்களுக்கு முக்கியமான வாரமாகவே அமைந்துள்ளது.

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*கலங்காது கண்ட வினைக்கண் துளங்காது*
*தூக்கம் கடிந்து செயல்.*

திருக்குறள்

# நமது நோக்கு

## வலுவற்ற நிலையில் அரசும், சமாதானமும்...

தேர்தல் காலத்தில் தென்னிலங்கையின் இருபிரதான கட்சிகளுமே அதாவது ஐக்கிய தேசிய முன்னணி , மற்றும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி ஆகிய இரு முன்னணி கூட்டமைப்புகளுமே தாம் ஆட்சிக்கு வந்தால் சமாதானப் பேச்சுவார்த்தையை உடனடியாக முன்னெடுப்போம் என்பதையே பிரதான தேர்தல் பிரசார கோஷமாக முன்வைத்தனர் என்பது தெரிந்த விடயமே.

இதற்கு தென்பகுதி மக்கள் மீண்டும் ஒரு போரை விரும்பவில்லை என்பது ஒரு காரணமாக இருந்தாலும், இதனைவிடவும் வேறு சில காரணங்களும் இருக்கவே செய்கின்றது.

இலங்கையின் பொருளாதாரம் கடந்த ஆட்சிக் காலத்திற்கு முன்னர் இரு தசாப்தகாலமாக இடம்பெற்ற போர் காரணமாக அதலபாதாளத்துக்குள் வீழ்ந்து கடந்தமையால், அதனை ஏதாவது வகையில் சீர்செய்யவும் மக்களின் வாழ்க்கைத்தரத்தை மேம்படுத்தவும் ரணில் ஆட்சிப்பீடம் ஏறியபோது, விடுதலைப் புலிகளுடன் அமைதிப் பேச்சுக்களை ஆரம்பிக்கவேண்டிய அவசியம் ஒன்று அவருக்குத் தவிர்க்கமுடியாத ஒன்றாகவே இருந்தது.

இலங்கைக்கு நிதியுதவிகளை வழங்கும் நாடுகலிலிருந்து மேலும் கடனுதவிகளைப் பெறுவதற்கும், சர்வதேச நாடுகளின் வர்த்தக முதலீடுகளை இலங்கையில் அதிகரிக்க வைக்குமுகமாக அந்த நாடுகளுக்கு நம்பிக்கையையும் உறுதியையும் வழங்குவதற்கும் - நாட்டில் அமைதியும் சமாதானமும் நிரந்தரமாக்கப்படவேண்டிய அவசியமும் அப்போதைய அரசுக்கு இருந்தது.

அதுமட்டுமல்லாது, போர் காரணமாக மந்தநிலையில் இருந்த ஏற்றுமதி இறக்குமதி வர்த்தகத்தையும் தேசிய உற்பத்தியையும் மேம்படுத்தி, சுற்றுலாத்துறை போன்ற தேசிய வருமானத்தை அதிகரிக்கவைக்கவும் துறைகளை வளர்த்தெடுக்கவும் அந்த அரசுக்கு யுத்தநிறுத்த நிலை மட்டுமல்ல சமாதானப் பேச்சுக்களை உறுதியாக - அதில் முழுமையாக விருப்பமில்லாவிட்டாலும்கூட - தொடரவேண்டிய நிலையும் இருந்தது.

இதன்காரணமாகவே சமாதான முயற்சிகள் தொடர்பாக அந்த அரசு சர்வதேச நாடுகளின் உதவியை அனுசரணையை நாடி, அவர்களூடாக விடுதலைப் புலிகளுடன் ஒரு இணக்கப்பாட்டை ஏற்படுத்தி - புரிந்துணர்வு உடன்பாடொன்றை மேற்கொள்ளவேண்டிய நிலைக்கு தள்ளப்பட்டதுடன், சமாதானப் பேச்சுக்களை ஆரம்பிக்கவும் செய்தது.

கடந்த ஈராண்டுக்கும் மேலாக போர் நிறுத்த சமாதான சூழலின்போது ஏற்பட்ட மாற்றங்கள் தென்பகுதியில் ஓர் அமைதி நிலை ஏற்படவழி வகுத்ததுடன், போர் காரணமாக ஏற்பட்டிருந்த சமூக வாழ்வியல் அவலங்களையும் பொருளாதார நெருக்கடி சூழலையும் தென்பகுதி மக்கள் தவிர்த்துக் கொள்ளவும் வசதி ஏற்பட்டது.

உண்மையில் இந்த சமாதான சூழல் தென்பகுதி சிங்கள மக்களுக்கே பெருமளவு வாய்ப்பான நிலையை ஏற்படுத்தியதுடன், அவர்கள் மத்தியில் போர் குறித்த அச்சத்தையும் நீக்கியிருந்தது. அத்துடன், ஏ-9 பாதை திறப்பானது தென்பகுதி மக்களின் உற்பத்திப் பொருட்களுக்கு வடபகுதியில் ஒரு பாரிய சந்தை வாய்ப்பினை ஏற்படுத்திக் கொடுத்தால், அவர்களின் பொருளாதாரத்தையும் மேலோங்க வைத்தது.

ஆனால், போரினால் பாதிப்புற்று தமது வாழ்வியல் இருப்புகளை முற்றாகவே இழந்திருந்த வடக்கு - கிழக்கு தமிழ் மக்களுக்கு, இந்த சமாதானம் துப்பாக்கி வேட்டுச் சத்தத்தை குறைத்ததே அன்றி வேறெதையும் கொண்டுவரவில்லை. அவர்கள் மீதான இராணுவ தாக்குதல்கள் குறைந்ததேயன்றி, அழுத்தங்களும் அச்சுறுத்தல்களும் குறையவே இல்லை.

இந்த நிலையில் தென்பகுதி மக்கள் மத்தியில் சமாதானம் குறித்த பிரதான கட்சிகளின் உத்தரவாதம் தவிர்க்கமுடியாத ஒன்றாகவே இருந்தது.

ஆயினும், இனவாதத்தின் இறுக்கம் குறையாத சமாதான கோஷங்களுக்கே இம்முறை தேர்தலில் தென்பகுதி மக்கள் அதிகளவில் செவிமடுத்திருக்கிறார்கள் என்பதையே ரணிலின் தோல்வியும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி மற்றும் ஜாதிக ஹெல உறுமயவினரின் வெற்றியும் உறுதிசெய்வதாக உள்ளது.

பேரினவாத சக்திகள் ஒன்றிணையாமல், ஒரு உறுதியான ஆட்சியை சமாதானத்தின் பேரால் மட்டும் ஏற்படுத்த முடியாத நிலையில், மேற்படி சக்திகளை திருப்திப்படுத்திக் கொண்டே சமாதான முன்னெடுப்பை மேற்கொள்ளல் சாத்தியமற்ற விடயமாகிவிட்டது.

இதன் காரணமாகவே உடனடியாக - தேர்தலின்போது அளித்த வாக்குறுதிக்கேற்ப சமாதான பேச்சுக்களை ஆரம்பிக்க இயலாதநிலையில் இன்னமும் முழுமையாகப் பதவியை ஏற்காத அரசு திணறுவதாகத் தெரிகிறது.

பேரினவாதிகளை சந்தோஷப்படுத்தவும் வேண்டும், சமாதானப் பேச்சுக்களை (தமிழ் மக்களைப் பேய்க்காட்டியேனும்) தென்பகுதியை வளப்படுத்திக்கொள்ளல் தொடரவும் வேண்டும் என்ற நிலையில் அரசு தடுமாறுவதாகவே உள்ளது.

கூழுக்கும் ஆசை மீசைக்கும் ஆசையென்றால்...

சமாதானம் தொடர்தல் சாத்தியமா என்ற கேள்வி எழுவது நியாயமானதேயாகும்.

## நாடும் நடப்பும்

*செய்தி:-* நாடாளுமன்றத்தில் ஹெல உறுமய உறுப்பினர்களுக்கு விசேட ஆசனம் ஒதுக்குவது குறித்து சபாநாயகர் தெரிவானதும் அவருடன் கலந்துரையாடப்படும்.




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்

# சபாநாயகர் தெரிவில் நடப்பது குறித்து இதுவரை முடிவெதுவும் எடுக்கவில்லை

## ஜாதிக ஹெல உறுமய கூறுகிறது

(கொழும்பு)

நாடாளுமன்றத்தில் புதிய சபாநாயகர் தெரிவின்போது எவ்வாறு நடந்துகொள்வது என்பது தொடர்பாக ஜாதிக ஹெல உறுமய இன்னமும் முடிவெடுக்கவில்லை என அதன் பேச்சாளர் ரத்ன எலிய கூறியுள்ளார்.

சபாநாயகராக இருக்கும் ஒருவருக்கு நாடாளுமன்ற உறுப்பினர்கள் மரியாதை செலுத்தவேண்டியது அவசியம்.

இந்த நிலையில், ஜாதிக ஹெல உறுமய உறுப்பினர்கள் சபாநாயகருக்கு மரியாதை செலுத்துவ்து எவ்வாறு என்பது தொடர்பாக நாடாளுமன்ற செயலாளருடன் பேச்சுவார்த்தை நடத்தியிருப்பதாகவும் தெரிவித்த அவர், இது தொடர்பாக இன்னமும் முடிவெடுக்கப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

பிக்கு ஒருவரை சபாநாயகராக நியமிப்பதன்மூலம் இந்தப் பிரச்சினையைத் தீர்த்துக்கொள்ளமுடியும் என்றநிலையில், தமக்கு சபாநாயகர் பதவி வழங்குமாறு ஜாதிக ஹெல உறுமய கோரியிருந்தது.

ஆனால், சபாநாயகர் பதவியை வகிக்கக்கூடிய அனுபவத்தைப் பிக்குமார் பெற்றிராதநிலையில், அவர்களின் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில், லொக்குபண்டார ஐக்கிய தேசியக் கட்சியிலும், குணசேகர ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் சார்பிலும் சபாநாயகர் பதவிக்காக நிறுத்தப்பட்டுள்ளனர். எனினும் எதிர்வரும் 22 ஆம் திகதியே இது தொடர்பான முடிவுகள் எடுக்கப்படுமெனத் தெரிவிக்கப்படுகிறது. (01)

# கலைப்பீடத்திற்கு மாணவர் தெரிவு சில தினங்களில் முடிவு கிடைக்கும்

## யாழ். மனித உரிமை அலுவலகம் தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு இந்த வருடம் மேலதிகமாக மாணவர்களைத் தெரிவுசெய்வது தொடர்பாக இன்னும் சில நாட்களில் அறிவிக்கப்படலாம் என யாழ். மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலக வட்டாரம் தெரிவித்துள்ளது.

கடந்த மாதம் மனித உரிமை ஆணைக்குழுவில் சில மாணவர்கள் தம்மை விசேட, மேலதிக ஆட்சேர்ப்பின்கீழ் நியமிக்காது விட்டமை, யாழ். பல்கலைக்கழகத்தின் அசமந்தப் போக்கை வெளிப்படுத்துகிறது எனக் குறிப்பிட்டு முறைப்பாடொன்றைச் சமர்ப்பித்திருந்தனர்.

இதன் மீதான விசாரணையைக் கடந்த மாதம் முதல் யாழ். மனிதஉரிமைகள் ஆணைக்குழு மேற்கொண்டு வந்தது. இவ்விடயம் தொடர்பான முடிவைத் தமக்கும் பெற்றுத்தருமாறு பாதிக்கப்பட்ட மாணவர்கள் பல தடவை யாழ்.மனித உரிமைகள் ஆணைக்குழு அலுவலகத்திற்குச் சென்று திரும்பியும், சரியான தகவல் கிடைக்காதநிலையில், நேற்றும் தமக்கு சரியான முடிவு அவசியம் என வலியுறுத்தியிருந்தனர்.

அந்தவேளை அவர்களுக்குப் பதிலளித்த விசாரணை அதிகாரியான எஸ்.சுரேந்திரராஜா - பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவின் அதிகாரி ஒருவர் வெளிநாடு சென்றிருந்ததால், இப்பிரச்சினைக்கு உடன் தீர்வுகாணப்படமுடியாது போயுள்ளது.

எனினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவினரின் துணையுடன் விரைவில் இப்பிரச்சினைக்குத் தீர்வு காணப்படவுள்ளது.

தற்போது அந்த அதிகாரி நாடு திரும்பியிருப்பதால், உடன் தொடர்பு கொண்டு இப்பிரச்சினைக்கு ஓரிரு தினங்களில் தீர்வுகாணமுடியும். எனினும், பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் அறிவுறுத்தலின்படி மேலும் சிலர் யாழ். பல்கலைக்கழக கலைப்பீடத்திற்கு நியமிக்கப்பட சாத்தியம் இருக்கின்றது எனவும் தெரிவித்தார். (ப)

# கல்விக்கான உலக பிரசாரவாரம் 19 ஆம் திகதி முதல் அனுஷ்டிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 19 ஆம் திகதி முதல் 25 ஆம் திகதி வரையான கல்விக்கான உலக பிரசார வாரத்தை முன்னிட்டு பிரிடோ நிறுவனத்தின்கீழ் இயங்கும் சிறுவர் கழகங்கள், பாடசாலை அதிபர், ஆசிரியர், பெற்றோர்களின் பங்களிப்புடன் மூவாயிரம் தபாலட்டைகள் ஜனாதிபதிக்கும், கல்வியமைச்சருக்கும் அனுப்பிவைக்க ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

அத்துடன், தரமானதும், இலவசமானதுமான கல்வியை தங்களுக்குப் பெற்றுத்தரக்கூடிய 'அக்கறைகொள்ளுங்கள்' என்ற வலியுறுத்தலின் அடிப்படையில் விழிப்புணர்வுத் திட்டங்களும் மேற்கொள்ளப்படவுள்ளன.

உலகமயமாக்கல் காரணமாகவும், அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளில் கல்விக்காக ஒதுக்கீடுகள் குறைக்கப்படுவதாலும் சிறுவர்களின் கல்விக்கான இடைவிலகல் அதிகரித்துள்ளது. இது பெரும்பாலும் தோட்டப் புறங்களிலும் தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையில் கல்விக்கான வளங்கள் சமமாகப் பகிரப்படாமையால், பாடசாலை நிர்வாகம் சீரற்றுப்போவதுடன் மாணவர்களின் கல்வியும் பாதிப்படைகிறது.

எனவே, இவ்வாறான தடைகள் நீக்கப்படவேண்டும் என்பதை வலியுறுத்தியே பிரிடோ எனப்படும் தோட்ட கிராமிய கல்வி அபிவிருத்தி நிறுவனம் கல்விக்கான உலக பிரசார வாரத்தை அனுஷ்டிக்கவுள்ளது.

**மனிதஉரிமை மீறல் வழக்கு தொடர்பாக**

# இருபது லட்சம் ரூபாவை பொலிஸ் நிலையம் செலுத்தியுள்ளது

(கொழும்பு)

பொலிஸ் திணைக்களத்துக்கு எதிராகத் தொடுக்கப்பட்டுள்ள அடிப்படை மனித உரிமை மீறல் வழக்குத் தொடர்பாக 20 இலட்சம் ரூபாவை பொலிஸ் திணைக்களம் கடந்த ஆண்டு செலுத்தியுள்ளதாக நீதிமன்றத்தகவல்கள் தெரிவிக்கின்றன.

சிரேஷ்ட பொலிஸ் அதிகாரிகள் உட்பட சாதாரண பொலிஸ்காரர்கள்வரை இவ்வாறான குற்றச்சாட்டுக்களுக்கு உள்ளாகியுள்ளனர்.

சட்டவிரோதமாகக் கைதுசெய்தல், சிறையில் அடைத்தல், சித்திரவதை செய்தல் தொடர்பாகப் பொலிஸார்மீது வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன.

களுத்துறை பொலிஸ் நிலையத்தின் மூலமாக அதிகளவு பணம் நட்டஈடாகச் செலுத்தப்பட்டுள்ளது.

சுமார் ஏழு லட்சம் ரூபாவை இந்தப் பொலிஸ் நிலையம் நட்டஈடாக செலுத்தியுள்ளது.

இதேவேளை, நாடளாவியரீதியில் 30 பொலிஸாருக்கு எதிராகக் குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டு, அவர்களுக்கு எதிராக மனிதஉரிமை மீறல் வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டுள்ளன. (01)

# 'தாரண' புத்தாண்டு உங்களுக்கு எப்படி?

தமிழ் வருடங்கள் மொத்தம் 60. சித்திரை முதல் பங்குனிவரை ஒரு ஆண்டாகக் கணக்கிடப்படுகிறது. சித்திரை மாதம் சூரியன் மேடராசியில் நுழையும் நாளே சித்திரை விஷு என்னும் தமிழ்ப் புத்தாண்டு தினம். 12 ராசிகளிலும் வலம் வரும் சூரியன் ஒவ்வொரு ராசியிலும் இருக்கும் காலம் தான் ஒரு மாதம். தற்போது சுபானு ஆண்டு முடிந்து, தாரண ஆண்டு 13.04.2004 பிறந்துள்ளது. தமிழ்ப் புத்தாண்டு தினத்தன்று சூரியன் பூமியின் அருகில் இருக்கும். இது ஒரு புனிதமான நாள். இந்தத் தாரண ஆண்டின் குரு பெயர்ச்சியும், ராகு, கேது பெயர்ச்சியும் நிகழ்ந்துள்ளது. ஆண்டின் தொடக்கத் தில் கிரகங்களின் ஒன்றான குரு பகவான் சிம்மராசியில் இருக்கின்றான். அவர் 15.08.2004 அன்று கன்னிராசிக்குச் செல் கின்றான்.

அடுத்து ராகு - கேது இடப்பெயர்ச்சி 5.02.2005 அன்று நிகழ்கின்றது. தற்போது மேடராசியில் இருக்கும் ராகு, அன்றைய தினம் மீனராசிக்கு மாறுகின்றார். அந்தச் சமயம் கேது துலாம் ராசியிலிருந்து கன்னி ராசிக்கு இடம்பெயர்கின்றார். இன்னொரு அதிமுக்கிய கிரகமான சனி ஆண்டு முழுவதும் மிதுனராசியில் தான் பிரவேசிக் கின்றார். இந்த முக்கிய கிரகங்களின் இருப்பிடத்தை அடிப்படையாகக் கொண்டு, இந்தப் புத்தாண்டுப் பலன் கணிக்கப்பட்டுள்ளது. குருவின் பார்வைக்கு அதிக சக்தி உண்டு. சில ராசியினருக்கு இந்த நான்கு முக்கிய கிரகங்களும் சிறப்பான இடத்தில் இல்லாமற்போகலாம். அவர் [illegible] லைப்படவேண்டாம். விரைவாகச் சுழலும் சூரியன், செவ்வாய், புதன், சுக்கிரன், சந்திரன் ஆகிய கிரகங்கள் அவ்வப்போது நற்பலனைக் கொடுக்கும்.

தமிழ்நாட்டிலிருந்து பிரபல ஜோதிடர்
பண்டித காழியூர் நாராயணன்

## துலாம் (சுவாதி, விசாகம் 1,2,3 ஆம் பாதங்கள் சித்திரை 3 ஆம், 4 ஆம் பாதங்கள்)

மனதிலிட்டபட்ட நியாயத்தை பளிச்சென்று சொல்லிவிடும் குணம் கொண்ட துலாம் ராசி அன்பர்களே, உங்கள் ஆட்சி நாயகன் சுக்கிரன். இந்த ஆண்டின் தொடக்கம் சிறப்பான இருக்கும். அதற்குக் காரணம் குருபகவான். அவர் தற்போது உங்கள் ராசிக்கு 11 ஆம் இடத்திலிருந்து பொருளாதார வளத்தையும், செல்வாக்கையும் கொடுப்பார்.

பெண்களால் பல்வேறு அனுகூலத்தை பெறுவீர்கள். ஆனால், குரு ஒகஸ்ட் மாதம் 15 ஆம் திகதி உங்கள் ராசிக்கு 12 ஆம் இடத்திற்கு வருகிறார். இது சிறப்பான இடமல்ல. அவரால் நன்மை தரமுடியாது. மற்ற முக்கிய கிரகங்களில் ஒன்றான சனி - ஆண்டுமுழுவதும் 9 ஆம் இடத்திலிருக்கிறார். இது சிறப்பான இடமல்ல. அதன்பின் அவரால் நன்மைதர முடியாது. இவர் உங்கள் முயற்சிகளில் சிற்சில தடைகளை உண்டுபண்ணுவார். எதிரிகளின் இடையூறுகளும் அவ்வப்போது தலைதூக்கும்.

நிழல் கிரகமான கேது - இப்போது உங்கள் ராசியிலிருக்கிறார். அவர் உடல் நலத்தைப் பாதிப்படையச் செய்வார். அவர் 5.2.2005 அன்று 12 ஆம் இடம் வருகிறார். அவர் இருப்பதும் இருக்கப்போவதும் சிறப்பானது அல்ல. இன்னொரு நிழல் கிரகமான ராகு இப்போ 7 ஆம் இடத்தில் இருக்கிறார். அவர் தற்போது சாதகமற்ற இடத்திலிருக்கிறார். உங்களை தீயோர் சேர்கைக்கு ஆளாக்கி அவஸ்தைக்கு உள்ளாக்கி இருக்கும் ராகு - பெப்ரவரி 5 ஆம் திகதிக்குப்பின் 6 ஆம் வீட்டிற்கு மாறி நன்மை தருவார். அதன்பின் பொருளாதாரவளம் அதிகரிக்கும். அதன்படி பார்த்தால், இடைப்பட்ட காலமான ஒகஸ்ட் முதல் ஜனவரி வரை தான் சுமாரான காலம். மற்ற மாதங்கள் எல்லாம் அனுகூலமாகவே இருக்கும். முக்கிய கிரகங்களின் அடிப்படையில் கால வாரியான பலனைக் காணலாம்.

**ஏப்ரல் 13 முதல் ஒகஸ்ட் 15 வரை**

செல்வாக்கும், சொல்வாக்கும் சிறப்பாக இருக்கும். பொருளாதாரவளம் திருப்திகரமாக இருக்கும். மனதில் அமைதி நிலவும். சனியும், ராகுவும் சாதகமற்ற இடத்தில் இருப்பதால் உங்கள் முயற்சியில் சிறுசிறு தடைகள் வரலாம். ஆனாலும் அதை முறியடித்து வெற்றி காண்பீர்கள்.

குடும்பத்தில் மகிழ்ச்சி குறை இருக்காது. திருமணம் போன்ற சுபகாரியங்கள் இனிதே நிறைவேறும். வீடுமனை வாங்கலாம். பெண்கள் மிகவும் உதவிகரமாக இருப்பர். உத்தியோகம் பார்ப்பவர்கள் சிறப்பான நிலையில் இருப்பர். சம்பளவுயர்வு, பதவியுயர்வு போன்றவை கிடைக்கும். மேலதிகாரிகளின் ஆதரவும் கிடைக்கும். கோரிக்கைகளை நிறைவேற்றலாம்.

வியாபாரிகள் நல்ல முன்னேற்றம் காணலாம். புதிய வியாபாரம் அனுகூலம் கிடைக்கும். ஆனால், அதிக பளுவைச் சுமக்கவேண்டியிருக்கும். பத்திரிகைத் தொழில், தானிய வியாபாரம், தங்கம் வியாபாரம் சிறப்பாக இருக்கும்.

கலைஞர்கள் புதிய ஒப்பந்தங்கள் பெறப்பெற்று முன்னேற்றம் காணலாம். மதிப்பு, பாராட்டு கிடைக்கும். சிலர் வெளிநாடுகளுக்குச் சென்று வருவீர்கள். மாணவர்கள் இந்த கல்வி ஆண்டில் நல்ல முன்னேற்றம் காண்பர். மதிப்பெண்கள் அதிகம் கிடைக்கும்.

விவசாயிகள் உழைப்புக்கு ஏற்ற பலனைத்தான் பெறமுடியும். நெல், கோதுமை, கேழ்வரகு, சோளம் போன்ற பயிர்கள் நல்ல மகசூலைத்தரும். புதிய சொத்து வாங்கும் எண்ணம் கைகூடும். வழக்கு விவகாரங்கள் சாதகமாக இருக்கும். பெண்கள் மகிழ்ச்சிபொங்கக் காணப்படுவர். கணவரின் அன்பு கிடைக்கும். உடல்நலம் சிறப்பாக இருக்கும்.

**ஒகஸ்ட் 16 முதல் மார்ச் வரை**

குரு சாதகமற்ற இடத்திற்குச் செல்கிறார். அதற்காகக் கவலைவேண்டாம். பெப்ரவரி மாதம் முதல் ராகு நன்மை தருவார். பொருளாதார்வளம் சிறப்பாக இருக்கும். ஆனாலும் உங்கள் முயற்சியில் சிறுசிறு தடைகள் தொடரலாம். குடும்பத்தில் கடந்தகாலம்போல் அனுகூலம் இருக்காது.

திருமணம் போன்ற நிகழ்ச்சிகள் தாமதப்படலாம். ஆனால், ஏதோ காரணத்தால் பிரிந்திருந்த குடும்பம் பெப்ரவரிக்குப் பின் ஒன்றுசேரும். உறவினர்களிடையேயிருந்து வந்த மனக்கசப்பு மறையும். உத்தியோகம் பார்ப்பவர்கள் சுமாரானநிலையில் இருப்பர்.

அதிகமாக உழைக்கவேண்டியிருகக்கும். சிலர் இடமாற்றத்தைக் காணலாம். மேலதிகாரிகளிடம் அனுசரித்துப் போகவும். முக்கிய கோரிக்கைகளை ஆண்டின் தொடக்கத்தில் கேட்டுப் பெற்றுக் கொள்ளவும்.

வியாபாரம் சிறப்படையும். ஒகஸ்ட் முதல் ஜனவரி வரை சுமாரான காலம். இந்தக் காலத்தில் முக்கிய முடிவுகளை எடுக்கவேண்டாம். அதன்பின் புதிய தொழில் தொடங்கலாம். அரசிடம் எதிர்பார்த்த கோரிக்கைகள் நிறைவேறும். கலைஞர்களுக்குப் பணப்புழக்கம் இருந்தாலும் போதிய ஒப்பந்தங்கள் கிடைப்பது அரிது.

உங்களுக்கு வரவேண்டிய பாராடடு, புகழ் தட்டிப்பறிக்கப்படலாம். பெண்கள் சிறப்பாக இருப்பர். உடல்நலம் சுமாராக இருக்கும். கேதுவால் பித்தம், மயக்கம் மற்றும் கண் தொடர்பான உபாதைகள் வரலாம். நெருப்பு தொடர்பான வேலையால் கல்வியில் தொய்வான நிலை ஏற்படாது. விவசாயிகள் முன்னேற்றமான பலனை காணலாம்.

புதிய சொத்துக்களை வாங்கலாம். பெண்கள் முன்னேற்றம் அடைவர். உடல் நலம் சுமாராக இருக்கும். கேதுவால் இருந்து வந்த பித்தம், உஷ்ணம், கண் தொடர்பான உபாதைகள் வரலாம்.

## விருச்சிகம் (விசாகம் 4 ஆம் பாதம், அனுஷம், கேட்டை)

பரபரப்பும், சுறுசுறுப்பும் நிறைந்த விருச்சிக ராசி அன்பர்களே, நீங்கள் ஓய்வின்றி உழைப்பீர்கள். உங்கள் மீது நம்பிக்கை வைத்தவர்களுக்கு எதையும் செய்ய தயங்கமாட்டீர்கள். உங்களுக்கு இந்த ஆண்டு சிறப்பானதாக இருக்கும்.

நன்மைகள் அதிகரித்த வண்ணம் இருக்கும். ஆண்டின் தொடக்கத்தில் ராகு பக்க பலத்தோடு இருக்கிறார். அவர் உங்கள் ராசிக்கு 6 ஆம் இடத்திலிருந்து பல்வேறு நற்பலனை தந்து கொண்டிருக்கிறார். பொருளாதாரவளம், காரிய அனுகூலம் போன்றவை கிடைக்கும்.

உங்கள் ஆற்றல் வெகுவாக உயர்ந்திருக்கும். வருகிற பெப்பிரவரி 5 ஆந் தேதி ராகு 6 ஆம் இடத்திலிருந்து 5 ஆம் இடத்திற்கு வருகிறார். இது சிறப்பான இடமல்ல. அதன்பின் ராகுவும் பற்போக்கான பலனை தருவார். அதற்காக கவலைப்படவேண்டாம்.

ராகு இடம்மாறிய பின் அவருக்கு தேவதையாக குரு இருக்கிறார். இதனால் ராகுவால் கெடுபலனை கொடுகக முடியாது. அதோடு ஆண்டின் தொடக்கத்தில் 12 ஆம் இடத்திலிருந்து கெடுபலன் தந்து கொண்டிருந்த கேது - 5-2-2005 அன்று 11 ஆம் இடத்திற்கு சென்று நன்மை தரத் தொடங்கி விடுவார்.

அவர் எடுத்த காரியத்தில் வெற்றியை கொடுப்பார். பொருளாதார வளத்தை மேம்படுத்துவார். மேலும் இன்னொரு முக்கிய கிரகமான குரு தற்போது பண விரயத்தை கொடுத்துக் கொண்டிருக்கிறார். ஆனால் அந்த குரு வருகிற ஒகஸ்ட் மாதம் 15 ஆந் திகதிக்கு பிறகு சாதகமான இடத்திற்கு வருகிறார்.

அதன்பின் உங்களுக்கு மிகுந்த வளத்தை கொடுப்பார். முக்கிய கிரகங்களில் ஒன்றான சனி ஆண்டு முழுவதும் 8 ஆம் இடத்தில் இருக்கிறார். இது சாதகமற்ற இடம். உறவினர்கள் வகையில் பிணக்குகளை தரலாம். ஆனால் மற்ற கிரகங்களின் துணையோடு நல்ல பலனை காணலாம். முக்கிய கிரகங்களின் நிலையைக்கொண்டு கால வாரியான பலனைப்பார்ப்போம்.

**ஏப்ரல் 13 முதல் ஒகஸ்ட் 15 வரை**

பணப்பழக்கம் சிறப்பாகவே இருக்கும். காரிய அனுகூலமும் ஏற்படும். தேவைகள் பூர்த்தியாகும். மதிப்பு, மரியாதை சிறப்பாக இருக்கும். உங்கள் செல்வாக்கு மேம்படும். குடும்பத்தில் அமைதி நிலவும். தேவைகள் பூர்த்தியாகும். கணவன்-மனைவி இடையே அன்பு நீடிக்கும்.

உறவினர்கள் வகையில் அவ்வளவு அனுகூலமான போக்கு இருக்காது. உத்தியோகம் பார்ப்பவர்கள் அதிக பொறுமையை கடைப்பிடிக்கவேண்டியிருக்கும். வேலைப்பளு நிறைந்ததாக இருக்கும். அதிக அலைச்சல் ஏற்படும். உழைப்பு திறமைக்கு தகுந்த சம்பளமோ பொறுப்போ கிடைக்காமல் இருக்கலாம்.

சிலர் வேலையை விட்டுவிடும் நிலைக்கு தள்ளப்படுவர். வியாபாரம் வளர்முகமாகவே இருக்கும். லாபம் குறையாது. பணப்பழக்கம் அதிகரிக்கும்.

புதிய வியாபாரமும் நல்ல லாபத்தை கொடுக்கும்.வேலையின்றி இருப்பவர்கள் புதிய தொழிலைத் தொடங்கலாம். அதில் நல்ல வருமானம் கிடைக்கும். சிலர் வேலை விஷயமாக வெளிநாடு சென்று வருவீர்கள். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும். வாடிக்கையாளர்கள் உங்களிடம் நன்மதிப்பை வைத்திருப்பர். கலைஞர்கள் புதிய ஒப்பந்தம் கிடைக்க அதிக சிரத்தை எடுக்க வேண்டியிருக்கும்.

மாணவர்கள் இந்த ஆண்டு சுமாரான பலனை காணலாம். கஷ்டப்பட்டு படிக்க வேண்டியதிருக்கும். ஆசிரியர்கள் அறிவுரையை கேட்டு நடக்க வேண்டியதிருக்கும். குருவின் 5 ஆம் இடத்து பார்வையால் கல்வியில் தொய்வான நிலை ஏற்படாது. விவசாயிகள் முன்னேற்றமான பலனை காணலாம்.

புதிய சொத்துக்களை வாங்கலாம். பெண்கள் முன்னேற்றம் அடைவர். உடல் நலம் சுமாராக இருக்கும். கேதுவால் இருந்து வந்த பித்தம், உஷ்ணம், கண் தொடர்பான உபாதைகள் வரலாம்.

**ஒகஸ்ட் 16 முதல் மார்ச் வரை**

உன்னதமான காலமாக இருக்கும். குரு சாதகமான இடத்திற்கு வருகிறார் அதே நேரம் 5-2-2005 வரை ராகுவின் நற்பலன்களும், அதைத்தொடர்ந்து கேதுவும் நன்மை தருவார்கள். முக்கிய கிரகங்களில் இரண்டு நன்மை தருவதால் இந்த காலம் மகிழ்ச்சிகரமாக அமையும்.

குடும்பத்தில் சுபநிகழ்ச்சிகள் நடக்கும். தடைபட்ட திருமணம் கைகூடும். நல்ல வரனாக அமையும். பொருளாதார வளம் சிறப்பாக இருக்கும். தடைகள் விலகி காரிய அனுகூலம் எளிதாகும். மதிப்பு மரியாதை அதிகரிக்கும். பகைவர்களின் சதி எடுபடாமல் போகும். அவர்கள் சரணடையும்நிலை உருவாகும். வியாபாரம் வளர்முகமாக இருக்கும். புதிய தொழில் நல்ல லாபத்தை தரும். வேலையின்றி இருப்பவர்கள் குறைந்த முதலீட்டில் தொழில் தொடங்கலாம். வெளிநாட்டு தொடர்பு கிடைக்கும். கூட்டாளிகளிடையே ஒற்றுமை ஏற்படும்.

வாடிக்கையாளர்களின் ஆதரவுண்டு. அரசிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்கள் மிகச் சிறப்பான பலனைக் காணலாம். தடைப்பட்ட பதவியுயர்வு கிடைக்கும். மேலதிகாரிகள் அனுசரணையுடன் இருப்பர். சக ஊழியர்கள் உதவிகரமாக இருப்பர்.

கோரிக்கைகள் நிறைவேறும். ஏதோ காரணத்தால் வேலையை இழந்தவர்கள் மீண்டும் அந்தப் பதவியில் அமர்த்தப் படுவர். அல்லது வேறு நல்ல வேலை கிடைக்கும். கலைஞர்கள்புகழ் பாராட்டு கிடைக்கப் பெறுவர். சிலருக்கு அரசிடம் இருந்து விருது கிடைக்கும்.

நல்ல பணப்புழக்கம் வரும். அரசியல்வாதிகளுக்கு நீண்ட நாட்களாக எதிர்பார்த்த உயர்ந்த பதவி கிடைக்கும். சமூகநல சேவகர்களுக்கு சமுதாயத்தில் நல்ல அங்கீகாரம் கிடைக்கப் பெறும். பெண்கள் ஆனந்தத்தில் மிதப்பர். குழந்தை பாக்கியம்கிடைக்கும். கணவர் மற்றும் குடும்பத்தாரிடம் நன்மதிப்பை காண்பர். புத்தாடை நகைகள் வாங்கலாம். உறவினர்கள் வகையில் அவ்வ ளவு அனுகூலமான போக்கு இருக்காது. உடல்நலம் சிறப்படையும். பித்தம் மயக்கம் போன்ற உபாதைகளால் அவதிப்பட்டவர்கள் அதிலிருந்து பூரண குணம் அடைவர்.

## புலம்பெயர் வாழ்வின் பதிவுகள் பகுதி XLVI - சிவா சின்னப்பொடி



# ஒரு எழுபது வயதுப் பாட்டியின் சோகக்கதை

மறுபடியும் பாட்டி பாரிஸ் நகரத்துக்குப் பெட்டிகட்டி அனுப்பப்பட்டார். ஊரிலிருந்து சுகதேகியாக வந்த பாட்டி இப்போது நிரந்தர நோயாளியாகிவிட்டார். அவரைப் பாராமரிப்பதற்கென்று ஒரு ஆள் தேவைப்பட்டது. மறுபடியும் பாரிஸ் மருகளிடம் பாட்டி நரகவேதனை அனுபவித்தார். மாமியார் கொடுமை என்றநிலை உருவெடுத்தது. பாட்டி தன்னை ஊருக்கு அனுப்பி வையுங்கோ என்று தன்னுடைய மகனிடம் கெஞ்சிக் கு ழ ற ி அழுதார்.

பாட்டி ஒருநாள் தனது கஷ்டத்தைச் சொல்லி அழுதபோது, அவன் அவரை கனடாவுக்கு அழைப்பதற்கான ஏற்பாடுகளைச் செய்தான். ஆனால், பாட்டிக்கு கனடா குளிர் ஒத்து வரவில்லை. பாரிஸில் அவருக்கு தொற்றிய சளியும் அங்கு 'ஆஸ்துமா' அளவுக்கு வந்துவிட்டது. அவரால் அங்கே இருக்கவே முடியவில்லை.

தன்னை ஊருக்கு தனது கணவாிடம் அனுப்பி வைக்கும்படி பாட்டி கெஞ்சினார். 'வருத்தத்தோட ஊருககு போய் என்ன செய்வாய் சுவிஸிலை கொஞ்சக்காலம் போய் இரு' என்று சொல்லி சுவிஸிலிருந்த இரண்டாவது மகனிடம் அனுப்பி வைக்கப்பட்டார்.

கனடா என்றபோது அங்கே பாட்டிக்கு வதிவிட அனுமதி கிடைத்துவிட்டது. அதனால் அவரால் சுவிஸுக்கு சுலபமாக செல்லமுடிந்தது.

சுவிஸிருந்த மகன் அந்த நாட்டுப் பெண் ஒருத்தியுடன் திருமணம் செய்யாமல் சேர்ந்து வாழ்ந்தான். பாட்டி அங்கு சென்றபோது, அவரைத் தொடர்ந்து தங்களுடன் தங்க வைக்க அந்தப் பெண் சம்மதிக்கவில்லை.

ஆனால், மூத்த மகனுக்கும் அவரை ஊருக்கு அனுப்பி வைக்க விருப்பமில்லை. தாயைப் பராமரிக்க என்று சொல்லித் தம்பிமாரிடம் பணம் வாங்க அவர் திட்டமிட்டார். அதன்படி அம்மாவின் செலவுக்கென்று கனடாத் தம்பியும், சுவிஸ் தம்பியும் கணிசமான பணததைப் பாரிஸ் அண்ணனுக்கு அனுப்பி வைத்தனர்.

ஆனால், அந்தப் பணம் 'அந்த அம்மாவை நன்றாகப் பராமரிக்க உதவவில்லை. மூத்தமகன் வீடு வாங்க வங்கியில்தான் பட்ட கடனை அடைப்பதற்குத்தான் பயன்பட்டது. அந்தப் பாட்டி ஒருநாள் வீட்டைவிட்டு வெளியேறி, வழியில் கண்ட தமிழ் ஆட்களிடம் தன்னை ஊருக்கு அனுப்பி வைக்க உதவுமாறும், தன்னைத் தனது பிள்ளைகள் கொடுமை செய்கின்றார்கள் என்றும் சொல்லி அழுதிருக்கிறார். அவர்கள் பாட்டியைச் சமாதானப்படுத்தி, அவரது வட்டில் கொண்டுபோய் விட்டிருக்கிறார்கள்.

அதன்பிறகு ஊரெல்லாம் சொலலி எங்கடை மானத்தை வாங்கப் போறியா என்று அவருக்கு மகனும், மருமகளும் அடித்ததாக அந்தப் பாடடி கனடாவிலிருந்த கிடைசி மகன் தொலைபேசி எடுத்தபோது சொல்லிச்சொல்லி அழுதிருக்கிறார்.

தனது அண்ணனைக் கூப்பிட்டுச் சண்டைபிடித்த அந்தக் கனடா மகன் - தாயைப் பார்ப்பதற்கு தான் மாதா மாதம் அனுப்பிய பணத்தை நிறுத்தி விட்டான். தாயை ஊருக்கு அனுப்பி வைப்பதற்கான முயற்சியிலும் அவன் இறங்கியிருந்தான். இந்தநேரத்தில் 1996 ஆம் ஆண்டு ஜுன் மாதம் பாட்டி அவர் குடியிருந்த 12 ஆவது மாடியின் பல்கணியூடாகக் கீழே விழுந்து, உடல் சிதறி உயிரிழந்து விட்டார்.

பல்கணியில் துணிவிரிக்கும் போது தவறி விழுந்துவிட்டதாக மகனும், மருமகளும் காவல் துறையினருக்குத் தெரிவித்தனர். துணிவிரிக்கும்போது தவறிவிழும் அறைக்கு அந்த பல்கணியின் அமைப்பில்லை என்பதை அவதானித்த காவல்துறையினர் - இது ஒரு கொலையாக இருக்குமோ என்று சந்தேகப்படடனர்.

பாட்டி தற்கொலை செய்து கொண்டதற்கான சாத்தியக்கூறுகள் பற்றியும் அவர்கள் ஆராய்ந்தனர். கடைசியில் பாட்டி மாடியிலிருந்து குதித்துத் தற்கொலை செய்துகொண்டதாக அவரது மகனும், மருமகளும் வாக்குமூலம் கொடுக்க 'தற்கொலை மரணம்' என்ற மரணச் சான்றுதழுடன் அந்த அபலைப் பாட்டியின் சடலம் எரியூட்டப்பட்டது.

ஆனால், பாட்டிக்கு நெருக்கமான அயலவர்கள், அவருடன் பழகியவர்கள் - பாட்டி மாடியிலிருந்து தள்ளி விழுத்தப்பட்டுக் கொலை செய்யப் பட்டிருக்கலாம் என்றே சொன்னார்கள். ஊரிலே சந்தோசமாக இருந்த அந்த மனுசியைப் பணத்துக்காகக் கூப்பிட்டு, சாம்பலாக்கிய அவலம் புலம்பெயர் வாழ்வின் அவலங்களில் குறிப்பிடத்தக்க ஒன்று. *(தொடரும்..)*

## தென்னாசிய அரசியல் விளையாட்டு - எஸ்.ஜெயா

# கிரிக்கெற் - அரசியல்

# இந்தியா எதிர் பாகிஸ்தான் இடையில் காஷ்மீர்

*(நேற்றைய தொடர்...)*

அன்று மிகுந்த மக்கள் செல்வாக்குப் படைததவராக இருந்த ஷேக் அப்துல்லாவும் அந்த முடிவை முழுமனதுடன் ஏற்றுக்கொண்டார். பிரித்தானிய வெறியாட்டத்தில் நிலைகுலைந்திருந்த காஷ்மீர் முஸ்லிம்களும் அந்த முடிவை மனமார வரவேற்றார்கள்.

இது ஒரு புறமிருக்க, காஷ மீர் அவ்வாறு இணைந்த போது, அதற்கென்று பல்வேறு சிறபபு நிலைமைகளை ஜவஹர்லால்நேரு தலைமையிலான இந்திய அரசு அளித்தது. வெளிநாட்டு உறவு பாதுகாப்பு, தொலைத்தொடர்பு தவிர மற்ற எல்லா விஷயங்களிலும் காஷ்மீர் மாநில அரசு சுதந்திரமாக செயற்பட அனுமதி அளிக்கப்பட்டது.

அந்த உரிமைகளை உறுதிப்படுத்துவதுதான் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தின் 370 ஆவது பிரிவு. ஆனால் பின்னர் மத்திய காஷ மீர் உறவுகளில் பல்வேறு சிக்கல்கள் எழுநதன. அதிகாரங்கள் மத்திய அரசிடம் குவிய அந்த அதிகார மேதையில் தொடர்ந்து காஷ்மீருக்கென அளிக்கப்பட்ட சிறப்புச் சலுகைகளெல்லாம் ஒன்றன்பின் ஒன்றாக விலக்கிக் கொண்டது இந்திய அரசு. இன்று இந்திய இராணுவத்தின் கைப்பிடியில் இருக்கும் ஒரு பரிதாபத்திற்குரிய பிரதேசமாகிவிட்டது காஷ்மீர்.

1953ஆம் ஆண்டு ஷேக் அப்துல்லா நேருவினால் கைது செய்யப்பட்டார். காஷ்மீர் சிங்கமென போற்றப்பட்ட காந்தியுடன் உப்புச்சப்பற்ற ஓர் ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டபின் மிகவும் தளர்ந்துபோனார்.

அவரது நெருங்கிய சகா ஒருவர் புதுடில்லியில் தான் வசிக்க பங்களா ஒன்று வேண்டும் என்று ஒரு மூத்த அமைச்சரிடம்கூற அவர் வேதனையுடன் கூறினாராம். உங்கள் நிலை எப்படி ஆகிவிட்டது பார்த்தீர்களா? தனிநாடு, சுயாட்சி கேட்கப் புறப்பட்டவர்கள், ஒரு பங்களாவிற்காக சாதரண அமைச்சர்களிடம் மனுப்போடும் நிலைக்கு தள்ளப்பட்டு விட்டீர்களே? என்று (இந்த நிலைதான் இன்று கருணாவிற்கும் ஏற்பட்டுள்ளது)

இப்படித்தான் இரு நாட்டின் அரசியலுக்குள் காஷ்மீர் நுழைந்துகொண்டது. இது இன்று இந்தியா - பாகிஸ்தான் ஆகிய இரு நாடுகளும் தமது சொந்த நலனைப் பேணுவதற்கான அரசியல் சதுரங்க விளையாட்டினை நடாத்தும் ஒரு மைதானமான காஷ்மீரை மாற்றியுள்ளது.

இந்தியா காஷ்மீரின் பெரும் பகுதியிலிருந்து பாகிஸ்தான் இராணுவத்தினை அகற் றிய பின்பு இப்பிரச்சினையை ஐக்கிய நாடுகள் எடுத்துச் சென்றது. ஆக்கிரமித்த பகுதியிலிருந்து பாகிஸ்தான் வெளியேறியபிறகு, மக்கள் கருத்தறிய வாக்கெடுப்பு நடத்தலாம் என்று அப்போது இந்தியா ஒத்துக் கொண்டது. மூன்றில் ஒரு பங்கைப் பிடித்துக்கொண்ட பாகிஸ்தானும் வெளியேற வில்லை. மக்களிடமிந்து அந்நியப்பட இந்தியாவும் வாக்கெடுப்பு நடத்தத்துணியவில்லை. இதுதான் இன்றுவரை தொடரும் காஷ்மீர் அரசியல் நிலையாகும். காஷ்மீர் மக்கள் இந்தியாவையோ, பாகிஸ்தானையோ தமது உறவிலிருந்து விலக்கவுமில்லை. 'எங்கள் எதிர்காலத்தை நிர்ணயிக்க எங்களுக்கு உரிமை உண்டு, வாக்கெடுப்பு நடத்துங்கள்' என்றுதான் கோருகின்றார்கள். அண்டை மண்டலத்தில் கிரிக்கெட் அரசியலில் இந்தியா எதிர் பாகிஸ் தான் ஆட்டம் நடைபெறுகிறது. இனி பந்து யார் கையில்? இந்தியாவில் எதிர்வரும் நாடாளுமன்றத் தேர்தல் முடிவுதான் இதற்கு விடைபகரும்.

(முற்றும்)

# போதைப்பொருள் தலைவனின் சொத்துக்களை கொலம்பிய பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்!

போதைப்பொருள் கடத்தல் தலைவனான டியகோ மொன் தேயாவின் சொத்துக்களை சுமார் இரண்டாயிரம் கொலம்பிய பொலிஸார் இணைந்து நடத்திய நடவடிக்கையின் மூலம் கைப்பற்றியுள்ளனர்.

இதில் நூற்றுக்கும் அதிகமான சொத்துக்கள் அடங்குவதாகவும்



இதற்குள் பல ஆடம்பர பங்களாக்கள் இடம்பெறுவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி இந்தச் சொத்துக்கள் போதைவஸ்தின் வருமானத்தால் வாங்கப்பட்டதென்று நிரூபிக்கும் பட்சத்தில், இவை ஏலத்திற்கு விடப்படும் என்றும் அதனால் கிடைக்கும் பணத்தை கொலம்பிய அரசின் துண்டுவிழும் தொகைக்கு ஈடுசெய்யலாமென்றும் செய்திகள் தெரிவிக்கின்றன. இந்தச் சொத்துக்களின் மதிப்பீடு சுமார் 150 மில்லியன் அமெரிக்க டொலராகும். இதன் வருமானத்தில் கிடைக்கும் பணம் போதைப் பொருளுக்கு எதிரான போருக்குப் பயன்படுத்த முடியும் என தெரிவிக்கப்படுகிறது.

டியகோ மொன்தேயா, றோடி டெல் வாலி என்ற போதைப் பொருள் கூட்டத்திற்கு தலைவனாவான். கொலம்பிய அரசிலும் பார்க்க அமெரிக்காவே இந்தக் கூட்டத்தை அழிக்க முழுக்குறியையும் வைத்தது குறிப்பிடத்தக்கது.

50 வருடமாக இந்தப் பிரச்சினையை தீர்க்க முடியாமலிருந்ததிற்கு கொலம்பிய அரசிடம் நிதிப்பற்றாக்குறையே காரணமாக காட்டப்பட்டது.

வருடத்திற்கு 800 தொன்போதைவஸ்துக்களையும், 10 தொன் ஹெரோயினையும் மேற்படி போதைவஸ்துக் கூட்டம் உற்பத்தி செய்வதாகக் கூறப்படுகின்றது.

அரசாங்கம் இந்த போதைவஸ்துக் கும்பலை பிடிக்காவிட்டால் மிகவும் ஆபத்தான மார்க்சிய கெரில்லாக்களும், நாடாளுமன்ற இடது சாரிகளும் இவர்களை தம்கைக்குள் கொண்டுவரலாம் என்றும் இப்படி நடக்கும் பட்சத்தில் நாடு பயங்கர விளைவுகளை எதிர்நோக்கலாம் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

# பங்களாதேஷில் சூறாவளி அனர்த்தம் பாரியளவில் உயிர், உடமைகள் சேதம்!

பங்களாதேஷின் வடபகுதியில், வீசிய சூறாவளி காற்றில் 66 மக்கள்வரை கொல்லப்பட்டும், ஆயிரம்பேர் வரை காயமடைந்தும் உள்ளனர். பதிக்கப்பட்ட மக்களுக்கு புனர் நிர்மானப்பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இறந்தவர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கப்படலாம் என, கருதப்பட்டுள்ளது. இதனால் பாதிக்கப்பட்ட பிரதேசமான 'மைமென்சிங்' இற்கு மருத்துவக்குழு ஒன்று அனுப்பப்பட்டுள்ளது.

இரு மாவட்டங்களில் 12 கிராமங்கள் இச்சூறாவளிக் காற்றினால் பாதிக்கப்பட்டிருந்தன. இப்பிரதேசங்களுக்கு பிரதமர் காலிதா ஷியாவும், எதிர்கட்சித் தலைவர் ஷேக்கசினாவும், விஜயம் செய்துள்ளனர். சூறாவளிக் காற்றினால் ஆயிரக்கணக்கானோர் தமது வீடுகளை இழந்துள்ளார்கள். மழை புயல்காரணமாக வீடுகள் தூக்கிவீசப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இப்புயல் சில நிமிடங்கள் மாத்திரமே, வீசியிருந்தது. ஆனால் பாரிய அனர்த்தங்களை ஏற்படுத்தியுள்ளது. குறிப்பாக கால்நடைகள் பயிர்கள் என்பனவற்றிற்கு அழிவுகள் ஏற்பட்டுள்ளது. வைத்தியசாலைகள் பாதிக்கப்பட்டவர்களினால் நிரம்பியுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. பாதிககப்பட்ட பிரதேங்களுக்கு நிதியுதவிகள், கட்டடப் பொருட்கள், உணவுப்பொருட்கள் ஆகியன அனுப்பப்



பட்டு வருவதாக உதவி நிவாரணப் பணிகளை மேற்கொள்ளும் ஒருஅதிகாரி தெரிவித்தார்.

## ஈராக்கில் பிடிக்கப்பட்ட

# ஜப்பானியர் நால்வரது விடுதலைக்கும் முஸ்லிம் மதத்தலைவர் உதவியுள்ளார்!

# உலக நோக்கு

ஈராக்கில் பணயக்கைதிகளாகப் பிடித்துவைக்கப்பட்டிருந்த ஜப்பானியர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளனர். இவர்களின் விடுதலைக்கு முஸ்லீம் மதத்தலைவர் ஒருவரே நடுவராகப் பணியாற்றியிருந்தார். ஜப்பானியத் தொலைக் காட்சியில் இந்த நிகழ்சி ஒளிபரப்பப்பட்டுள்ளது. மேலும் இரு ஜப்பானியர்களின் நிலை தெரியவில்லை எனவும் இவர்கள் கடத்தப்பட்டிருப்பதற்கான சாத்தியங்கள் காணப்படவில்லை என ஜப்பானிய அதிகாரி தெரிவித்தார்.

ஜப்பானியர்கள் கடத்தப்பட்டிருப்பதை மன்னிக்கமுடியாதெனவும் கடத்தல்காரர்களுக்கு அடிபணியப் போவதில்லை எனவும் ஜப்பானின் வெளிநாட்டமைச்சர் தெரிவித்தார்.

மேலும் விடுவிக்கப்பட்ட பணயக்கைதிகள் பாக்தாத்தில் உள்ள ஜப்பானியத் தூதரகத்தில் தங்கியுள்ளனர். விடுவிக்கப்பட்டவர்களில் பெண் ஒருவரும் அடங்கியுள்ளார். அராபியத் தொலைக்காட்சியில் இப் பெண் கண்ணீருடன் காணப்பட்டது ஒளிபரப்பப்பட்டிருந்தது. விடுவிக்கப்பட்ட பணயக்கைதிகள் முதலில் துபாய்க்கு பயணமாக உள்ளனர். அங்கிருந்து இவர்கள் ஜப்பான் செல்லத் திட்டமிட்டுள்ளனர். ஜப்பானிய உதவி வெளிநாட்டமைச்சர் 'இசிரோ அயிசவா' துபாயில் இவர்களை சந்திப்பதற்குத் திட்டமிட்டுள்ளார்.



இதனிடையே ஈராக்கிற்கு ஜப்பானியப்டைகளை அனுப்பியது தொடர்பாக ஜப்பானியப்பிரதமர் 'யுனிசிரோ கொய்சுமி' மீது குறை கூறபபட்டுள்ளது. பணயக் கைதிகள் விடுவிக்கப்பட்டுள்ளமை ஜப்பானியப் பிரதமருக்கு சந்தோஷம் மிக்க செய்தியாக அமைந்துள்ளது. ஆனால் மீண்டும் நேற்று முன்தினம் இரு ஜப்பானியர்கள் பணயக்கைதிகளாகப் பிடிக்கப்பட்ட பத்திரிகைச் செய்திகள் மீண்டும் ஆத்திர உணர்வினை அதிகரிக்கச் செய்துள்ளது. தற்போது பிடிக்கப்பட்டுள்ள ஜப்பானியர்களில் ஒருவர் சுதந்திரமான ஊடகவியலாளர் எனவும் மற்றவர் போருக்கு எதிரான பிரசாசரங்களில் ஈடுபடடுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## தாக்குதல் அச்சம் காரணமாக

# சவுதியிலுள்ள தனது நாட்டுப் பிரஜைகளை அமெரிக்க அரசு வெளியேறக் கோரிக்கை!

சவூதி அரேபியாவில் பயங்கரவாதிகளின் தாக்குதல் நடைபெறுவதற்கான, சாத்தியங்கள் காணப்படுவதாக அமெரிக்க அரசு தெரிவித்துள்ளது. இதனால் சவூதி



அரேபியாவில் உள்ள அமெரிக்கர்களை வெளியேறுமாறு, அமெரிக்கா கேட்டுள்ளது.

மிக முக்கியமில்லாத அமெரிக்க ராஜதந்திரிகளையும், அவர்களது குடும்பத்தினரையும், உடன் வெளியேறுமாறும் அமெரிக்க அரசு பணித்துள்ளது.

சென்ற நவம்பர் மாதத்திலிருந்து இதுவரை மூன்று தடவைகள் வெவ்வேறான எச்சரிக்கைகளை அமெரிக்கா விடுத்துள்ளது. இதேவேளை எச்சரிக்கைகளை மீறி அங்கு தங்கியிருப்பதற்கு விரும்பும், அமெரிக்கர்கள் றியாத்தில் அமைந்துள்ள தூதுவராலயத்திலோ அல்லது, ஜெடா, டகரான் ஆகிய நகரங்களில் அமைந்துள்ள அமெரிக்க நிலையங்களுடன் தொடர்புகளை வைத்துக் கொள்ளலாம் எனவும், அமெரிக்கா தெரிவித்துள்ளது.

அண்மையில் சவூதி பாதுகாப்புப் படைகளுக்கெதிரான பயங்கரவாதிகளின் தாக்குதல்களில் நான்கு பொலிஸாரும் ஒரு படையினரும் கொல்லப்பட்டடிருந்தனர். அத்துடன் வெடிபொருட்கள் நிரப்பட்ட வண்டிகளும் கண்டுபிடிக்கப்பட்டிருந்தது.

இதனால், தாக்குதல்கள் அமெரிக்கர்கள் மீதும், சவூதியில் அமைந்துள்ள மேற்கு நாட்டு அமைப்புக்கள் மீதும் தொடரலாம் என, அமெரிக்காவிற்கு தகவல்கள் கிடைத்துள்ளதாக அமெரிக்கா தெரிவித்துள்ளது.

## இந்தோனேஷிய பாலித்தீவுக் குண்டு வெடிப்புடன்

# இஸ்லாமிய ஆன்மீகத்தலைவருக்கு தொடர்பு அந்நாட்டு அதிகாரிகள் சந்தேகம் தெரிவிப்பு!



இந்தோனேஷியாவிலுள்ள பாலித்தீவில் இடம்பெற்ற குண்டுத்தாக்குதல்களுக்கு இஸ்லாமியர்களின் ஆன்மீகத்தலைவரான அபூபக்கர் பாஷ்ஷியர் தொடர்புபட்டிருப்பதாக அந்நாட்டு அதிகாரிகள் சந்தேகம் தெரிவித்துள்ளனர்.

ஆனாலும் இந்தோனேஷியப் பொலிஸார் அவர்மீது எந்தக் குற்றச்சாட்டினையும் புதிதாகச் சுமத்தவில்லை. இருந்தபோதிலும் அவர் தற்போது, குடிவரவுக்குற்றங்கள் காரணமாக இந்தோனிஷியாவில்தடுத்து வைக்கப்பட்டுள்ளார். அவர் இந்த மாத இறுதியில், இக் குற்றங்களிலிருந்து விடுதலைசெய்யப்படவுள்ளதும், குறிப்பிடத்தக்கது.

இதேவேளை, ஜெமா இஸ்லாமியா அமைப்பிற்கும், தனக்கும் எதுவிததொடர்பும் இல்லையென, விசாரணையில் ஆன்மீகத் தலைவர் தெரிவித்துள்ளார்.

ஆனால், தென்கிழக்காசியாவில் முக்கிய தீவிரவாதியான, கம்பாலியை அமெரிக்கப் புலனாய்வினர் விசாரணைகள் மேற்கொண்டிருந்தவேளை ஆன்மீகத்தலைவர் அபூபக்கருக்கும் ஜெமா இஸ்லாமிய அமைப்பிற்கும் உள்ள தொடர்பு அறியப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

2002 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் இந்தோனேஷியாவின் பாலித்தீவில் நடத்தப்பட்ட குண்டுவெடிப்பில் 202 உல்லாசப்பிரயாணிகள் கொல்லப்பட்டிருந்தனர். கொலைசெய்யப்பட்டவர்களில் கூடுதலானவர்கள் அவுஸ்ரேலிய நாட்டைச்சேர்ந்தவர்கள்.

ஆன்மீகத்தலைவர் பாஷ்ஷியர் கைதுசெய்யப்பட்டிருந்தார்.

இதனையடுத்து அமெரிக்கா அவர் மீது பொய்யான குற்றங்களைத் தெரிவிப்பதாக பாஷ்ஷியரின் சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

## ஈராக்கிற்கான ஆட்சி அதிகாரங்கள்

# இந்த வருடம் ஜுன் 30 இல் வழங்கப்படும்

## பிரிட்டன் பிரதமர் பிளேயர் தெரிவிப்பு



ஈராக்கின் ஆட்சி அதிகாரங்கள் அந்த நாட்டிடமே இந்தவருடம் ஜுன் மாதம் 30 ஆம் திகதி மீண்டும் வழங்குவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளதாகவும், இதற்கு ஐக்கிய நாடுகள் சபை இது தொடர்பான தீர்மானம் ஒன்றின்மூலம் உறுதிப்படுத்த வேண்டும் என்று பிரிட்டன் பிரதமர் ரொனிபிளேயர் தெரிவித்துள்ளார்.

நியூயோர்க்கில் ஐக்கியநாடுகளின் செயலர் கோபிஅனானுடனான சந்திப்பின் பின்னர் பிளேயர் இந்தக்கருத்தினைத் தெரிவித்தார்.

சர்வதேச சமூகத்துக்கு ஈராக்கின் நலனில், பங்குண்டு எனவும், அவர் தெரிவித்தார். ரொனி பிளேயர் மேலும் தெரிவிக்கும்போது. காஸாபிரதேசத்திலிருந்து இஸ்ரேலியப்படைகளின் வெளியேற்றத்திற்கு அமெரிக்கா அனுசரணை தெரிவித்துள்ளமை தனக்கு ஏமாற்றத்தை ஏற்படுத்தவில்லை எனவும் குறிப்பிட்டார்.

அமெரிக்க அதிபா ஜோர்ஜ் புஷ்ஷை சந்திப்பதற்கு முன்னர் ஐக்கிய நாடுகள் செயலாளருடன் பிளேயர் இந்[illegible]கருத்துக்களைப் பரிமாறிக்கொண்டார். இதேவேளை ஈராக்கின் முன்னைய தலைவர் சதாமின் வீழ்ச்சிக்குப் பின் ஓராண்டு கடந்தநிலையில் கூட்டுப்படையினர் மீண்டும் ஈராக்கில் தீவிரமாகப் போராடவேண்டிய நிலை தோன்றியுள்ளது.

அமெரிக்கா தனது ஆயுத பலத்தை அதிகளவில் பிரயோகித்து வருவதாக விமர்சகர்கள் கண்டனம் தெரிவித்துள்ளார்கள். இவ்வகையான போர் முயற்சிகள் ஈராக்கிய மக்களை ஒன்றிணைத்து. அமெரிக்கப்படைகளுக்கு எதிராகப் போராடுவதற்கு வழிஅமைக்கும் எனவும் விமர்சகர்கள் தெரிவித்துள்ளனர்.

நியூயோர்க் பத்திரிகையாளர் மத்தியில் கோபி அனானுடனான உரையாடலில் ஐக்கிய நாடுகளின் ஈராக்கிற்கான சிறப்புத்தூதுவர், லட்டார் பிரகிமியின் தீர்மானங்களை அறிந்துகொள்வதற்காக அமெரிக்க அதிபர் புஷ்ஷுடன் இணைந்து எதிர்பார்த்திருப்பதாக பிளேயர் தெரிவித்தார்.

ஐக்கியநாடுகள் சபையின் செயலர் கோபி அனான் தனது கருத்தில் ஈராக் போரில் பிளவுபட்டுள்ள சர்வதேச சமூகங்கள் தமது பகைமை உணர்வினை ஈராக்கிற்கு வழங்கப்படும் ஆட்சி மூலம், தீர்த்துக்கொள்ள முடியும் எனத் தெரிவித்தார்.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# சிறுபான்மையினரை அடக்கியாள புதிய அரசாங்கம் முற்படலாம்!

## கூட்டமைப்பு கூட்டத்தில் ஜோசப் பரராஜசிங்கம்

(கொழும்பு)

சிங்களப் பேரினவாதக் கட்சிகளான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பியும், ஹெல உறுமயவும் ஒன்றிணைந்து சிறுபான்மை தமிழினத்தை ஒடுக்கும் வகையில் செயற்படும் சாத்தியக்கூறுகள் இருப்பதாகவும், இவற்றை முறியடிப்பதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தீவிரமாக ஆராய்ந்துவருவதாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினரான ஜோசப் பரராஜசிங்கம் தெரிவித்தார்.

ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

தமிழ்த் தேசியம், தமிழ் மக்களின் தாயகக் கோட்பாடு, தமிழ்மக்களின் சுயநிர்ணய உரிமை, தமிழீழ விடுதலைப் புலிகள் சமர்ப்பித்திருக்கும் தமிழர் தாயகத்திற்கான நிர்வாக அலகு ஆகியவற்றை அரசு அங்கீகரிக்கவேண்டும் என்பதே கூட்டமைப்பின் முக்கிய நோக்கமாகும்.

இந்தக் கோரிக்கைகளை அரசு அங்கீகரித்து நடைமுறைப்படுத்துவதற்கான அழுத்தத்தை அரசுக்குக் கொடுக்கும் வகையில் சர்வதேச இராஜதந்திரிகளையும், வெளிநாடுகளின் தூதுவர்களையும் சந்தித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தெரியப்படுத்தும்.

நாடாளுமன்றத்தில் தேசிய அரசாங்கம் ஒன்று வருமானால் அது தமிழ்மக்களுடைய பிரச்சினையை உள்வாங்கி அதற்கு ஏற்றவகையில் செயற்படவேண்டும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

# வைத்தியசாலை ஊழியர் பஸ் மோதியதில் படுகாயம்!

யாழ்.வைத்தியசாலை ஊழியர் ஒருவர், யாழ்.நகரப் பகுதியில் தனியார் பஸ் மோதியதில் படுகாயமடைந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று நண்பகல் 1.30 மணியளவில் வேம்படிச் சந்திக்கு அண்மையாக இடம்பெற்றது. இந்தச் சம்பவத்தில் 38 வயதான எஸ்.பாலசிங்கம் என்பவரே காயமடைந்தார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக மேலும் தெரியவருவதாவது -

யாழ்.போதனா வைத்தியசாலை ஊழியர் ஒருவர் நேற்று மதியம், மதியஉணவு உண்பதற்காக தனது வீட்டிற்குச் சென்று கொண்டிருந்த சமயம், முகமாலை நோக்கிச் சென்று கொண்டிருந்த தனியார் பஸ் மோதி விபத்துக்குள்ளானார். வலதுகாலிலும், தலையிலும் படுகாயமடைந்த இவர், யாழ்.போதனா வைத்தியசாலை அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார். (206)

# வயது குறைந்த 20 போராளிகள் இன்று சம்பூரில் ஒப்படைப்பு!

தமிழீழ விடுதலைப் புலிகள் இன்று காலை சம்பூரில் வைத்து வயது குறைந்த 20 போராளிகளை யுனிசெப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கவுள்ளனர்.

இரு வாரங்களுக்கு முன்னரும் இவ்வாறு 12 போராளிகள் யுனிசெப் நிறுவனத்தினிடம் ஒப்படைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

அரசாங்கத்திற்கும் விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கும் இடையே ஏற்பட்ட புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பின்னர் சிறுவர்களை படையில் சேர்த்துக் கொள்வதில்லை என விடுதலைப் புலிகள் முடிவு செய்துள்ளனர். இருந்தும் தம்மிடம் இணைய வந்த சிறுவர்களை அவ்வப்போது அவர்களின் பெற்றோரிடம் ஒப்படைத்து வந்துள்ளனர். வயதில் குறைந்த போராளிகள் தற்போது படிப்படியாக யுனிசெப் நிறுவனத்தினிடம் ஒப்படைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (10,04)

# மட்டு - அம்பாறை வர்த்தகர்களுடன் விடுதலைப் புலிகள் நேற்று சந்திப்பு!

## எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து ஆராயப்பட்டது

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களைச் சேர்ந்த வர்த்தகர்களை விடுதலைப் புலிகள் சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து விரிவாக ஆராய்ந்தனர்.

நேற்றுமாலை மட்டக்களப்பு கொக்கட்டிச் சோலையில் அமைந்துள்ள விடுதலைப் புலிகளின் மாவட்டச் செயலகத்தில் மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் இ.கௌசல்யன் தலைமையில் இந்தச் சந்திப்பு நடைபெற்றது.

மட்டக்களப்பு - அம்பாறை மாவட்டங்களில் உள்ள நூற்றுக்கும் மேற்பட்ட வர்த்தகர்கள் கலந்துகொண்ட இந்தச் சந்திப்பில், கருணாவின் பிடியிலிருந்து விடுவிக்கப்பட்ட வர்த்தகர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள குறித்து விரிவாக ஆராயப்பட்டது.

மட்டக்களப்பு விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில், இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தினைச் சேர்ந்த வர்த்தகர்களும் தமது நடவடிக்கையில் கலந்துகொள்ள முடியும் என மட்டு - அம்பாறை அரசியற்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன் தெரிவித்தார்.

## ஹெலிகள் வட்டமிட்டதால் திருமலையில் பதற்றம்!

திருகோணமலையில் நேற்றிரவு 7.45 மணியளவில் இரண்டு ஹெலிகள் நகரைச்சுற்றி வலம்வந்ததைத் தொடர்ந்து பதற்றம் நிலவியது.

இது தொடர்பாக படையினருடன் தொடர்புகொண்டு கேட்டபோது, விமானப்படையின் ஒரு பயிற்சி நடவடிக்கையே இது எனத் தெரிவிக்கப்பட்டது. (04)

## மட்டு- அம்பாறை....

களில் தமிழீழ விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியிலுள்ள விடுதலைப்புலிகளின் அலுவலகங்கள் யாவும் [illegible] ஆரம்பித்துள்ளதாகத் தெரிவித்தார்கள்.

இதேவேளை கடந்த ஒன்றரை மாத காலமாக மட்டக்களப்பு, அம்பாறை மாவட்டங்களில் கருணாவால் மேற்கொள்ளப்பட்டு வந்த நடவடிக்கைகள் காரணமாக விடுதலைப் புலிகளின் அரசியல் நடவடிக்கைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி....

கர் தெரிவு ஜனாதிபதியால் முன்மொழியப்பட்டுள்ள அரசியல் நிர்ணய சபை ஆகிய விடயங்கள் தொடர்பாக நேற்றைய கூட்டத்தில் ஆராயப்பட்டது.

எனினும், இவை தொடர்பாக எதிர்வரும் 20 ஆம் திகதி விடுதலைப் புலிகளுடன் பேசிய பின்னரே இறுதி முடிவுகள் எடுக்கப்படும்.

ஜனாதிபதியின் இத்தகைய செயற்பாடுகள் தமிழ் மக்களை அவமதிப்பதாக அமைவதுடன் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர்பாக ஆக்கபூர்வமான முயற்சிகள் எதுவும் எடுக்கப்படுமா என்ற சந்தேகத்தையும், கேள்வியையும் மக்கள் மத்தியில் ஏற்படுத்தியுள்ளது.

இவ்வாறான செயற்பாடுகளை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்றக்குழு வன்மையாகக் கண்டிப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

# ரத்னசிறி, அனுருத்த ஆகியோர்— எம்.பிக்களாக நியமிக்கப்படுவதை எதிர்த்து உயர்நீதிமன்றில் வழக்கு!

தேசியப் பட்டியலில் இடம்பெறாதவர்கள் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதை தடைசெய்யுமாறு கோரி தாக்கல் செய்யப்பட்ட மனுவை மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று பரிசீலனைக்கு எடுத்துக்கொண்டது.

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆகிய கட்சிகள் தங்கள் தேசியப் பட்டியலில் இடம்பெறாதவர்களை நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கவுள்ளமைக்கு எதிர்ப்புத் தெரிவித்து இந்த மனுவை மாற்றுக் கொள்கைக்கான நிலையம் தாக்கல் செய்திருந்தது.

முன்னாள் பிரதமர் ரத்னசிறி விக்கிரமநாயக்க, முன்னாள் பிரதிப் பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த ஆகியோர் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி சார்பாக தேசியப் பட்டியல் மூலம் நாடாளுமன்ற உறுப்பினர்களாக நியமிக்கப்படுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு இந்த மனுவில் ஆட்சேபனை தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த இருவரும் தேசியப்பட்டியலில் இடம்பெறாத நிலையில், அவர்களுக்கு நாடாளுமன்ற உறுப்பினர் பதவிகள் வழங்கப்படுவதைத் தடைசெய்யுமாறும் கோரியே உயர் நீதிமன்றத்தில் இந்த மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

குறிப்பிட்ட இருவரையும் எதிர்வரும் மே மாதம் 17 ஆம் திகதி நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேல் முறையீட்டு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

## மாவடிவேம்பு....

பொலநறுவை நோக்கிச் சென்றதாகவும் பொது மக்கள் தெரிவித்தனர்.

இவர் கொண்டுசென்ற வாகனங்களில் ஒரு சிலவற்றை தற்போது படையினர் பாவனைக்கு பயன்படுத்துவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# அரசாங்கத்துடனான உறவுகளை வலுப்படுத்த...

சட் ஆர்மிரேஜ் இலங்கையின் சமாதான முயற்சிகளை, எவ்வகையில் சிறந்த முறையில் கொண்டுசெல்ல உதவுவது என்பது தொடர்பாக அனுசரணையாளர் நோர்வேயுடனும் இலங்

களை புதுப்பிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடியதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பின்போது - வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்

விக்கிரமசிங்கவுடனும் கதைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை - இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம்

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி குழந்தைவேலு

உதிர்வு: 20.01.1920 மறைவு: 15.04.2004

வதாகத் தெரிவிக்கப்படுகிறது.

## அரசாங்கத்துடனான உறவுகளை வலுப்படுத்த...

சட் ஆர்மிரேஜ் இலங்கையின் சமாதான முயற்சிகளை, எவ்வகையில் சிறந்த முறையில் கொண்டுசெல்ல உதவுவது என்பது தொடர்பாக அனுசரணையாளர் நோர்வேயுடனும், இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளுடனும் கலந்துரையாட இருப்பதாக பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவிடம் தெரிவித்தார்.

இதேவேளை - கடந்த 9 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்கச் செயலர் கொலின் பவல் தொலைபேசி வாயிலாக இலங்கையின் புதிய வெளி விவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமருக்கு தனது வாழ்த்துக்களைத் தெரிவித்தார்.

அத்துடன், இருவரும் 2001 ஆம் ஆண்டிலிருந்ததான இருதரப்பு உறவுகளை புதுப்பிப்பது தொடர்பாகவும் கலந்துரையாடியதாகவும் கொழும்புத் தகவல்கள் தெரிவித்தன.

இந்தச் சந்திப்பின்போது - வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமரை வொஷிங்ரனுக்கு விரைவில் வருமாறும் கொலின் பவல் அழைப்பு விடுத்தார்.

கொழும்பிலுள்ள இராஜதந்திர வட்டாரங்களின் தகவலின்படி அடுத்த மாதம் முற்பகுதியில் கதிர்காமர் வொஷிங்ரனுக்குச் செல்லவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அமெரிக்கா தொடர்ந்தும் இந்த தொலைபேசித் தொடர்பு மூலம் தனது இராஜதந்திர முயற்சிகளை மேற்கொள்ளவுள்ளது. இதன் அடுத்த கட்டமாக முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவுடனும் கதைப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதேவேளை - இலங்கைக்கு உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் அடுத்த மாதம் முற்பகுதியில் ஐரோப்பிய யூனியன் ஆணையாளர் கிறிஸ் பற்றன் தலைமையில் நடைபெறவுள்ளது. இதில் அமெரிக்க பிரதி இராஜாங்கச் செயலர் றிச்சட் ஆர்மிரேஜ், நோர்வே, ஜப்பான் நாட்டுப் பிரதிநிதிகளும் மற்றும் ஐரோப்பிய ஒன்றியம், அயர்லாந்து பிரதிநிதிகளும் கலந்துகொள்ளவுள்ளனர்.

இந்தக் கூட்டம் இந்த வருடம் பெப்ரவரி மாதம் 17 ஆம் திகதி வாஷிங்ரனில் நடந்த கூட்டத்தின் தொடர்ச்சியெனவும் தெரிவிக்கப்படுகிறது.

## கிணற்றிலிருந்து 2 சடலங்கள்....

தொடர்பாகப் பொலிஸாருக்கு தகவல் அனுப்பப்பட்டது.

சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸார் கிணற்றில் சடலம் இருப்பதை அவதானித்த பின்னர் அப்பகுதிக்குள் பொதுமக்கள் செல்வதைத் தடுத்தனர்.

மாலையில் பொலிஸார் இந்தச் சடலங்களை மீட்கும் பணியில் இறங்கினர். இதன்போதே கிணற்றுக்குள் இரண்டு சடலங்கள் இருப்பது கண்டறியப்பட்டு அவை மீட்கப்பட்டு வெளியே கொண்டுவரப்பட்டன.

மிகவும் பழுதடைந்த நிலையில் துர்நாற்றம் வீசிக்கொண்டிருந்த இந்தச் சடலங்கள் இரண்டும் ஆண்களுடையவை எனத் தெரியவருகிறது.

இந்த இரண்டு சடலங்களையும் யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்கினராஜா நேரில் சென்று பார்வையிட்டார்.

மீட்கப்பட்ட சடலங்களில் ஒன்று நடராசா சத்தியலிங்கம் (வயது 44) என்பவருடையதென அடையாளம் காணப்பட்டது. இவர் அன்ன சத்திர லேன் - கந்தர்மடம் என்ற முகவரியை உடையவராவார்.

மற்றைய சடலம் இதுவரை அடையாளம் காணப்படவில்லை. சத்தியலிங்கத்தின் சடலம் பச்சை நிற நீளக்காற்சட்டை மற்றும் ரீசேட் அணிந்த நிலையில் காணப்பட்டது.

மற்றைய சடலத்தில் நீல நிற சேட்டும் பச்சை நிற சாரமும் காணப்பட்டது.

இரண்டு சடலங்களையும் மீட்ட பொலிஸார், மேலதிக வைத்திய பரிசோதனைக்காக யாழ். போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பாக மேலதிக விசாரணைகளையும் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

இதேவேளை, சடலமாக மீட்கப்பட்ட நடராசா சத்தியலிங்கம் கடந்த 12 ஆம் திகதி முதல் காணாமற் போயிருந்தார் எனவும் இது குறித்து உறவினர்களால் யாழ்.பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

(ப,தீ,91,205)

## மரண அறிவித்தல்

### திருமதி கண்மணி குழந்தைவேலு

**உதிர்வு: 20.01.1920** **மறைவு: 15.04.2004**

யாழ் கொழும்புத்துறை மேற்கு செட்டிய தெருவை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் 21, ஜானகி ஒழுங்கை கொழும்பு -04ஐ தற்காலிக வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி கண்மணி குழந்தைவேலு 15.04.2004 அன்று காலமானார்.

அமரர் காலஞ்சென்ற சண்முகப்பிள்ளை குழந்தைவேலுவின் (வன பரிபாலன இலாகா) அன்பு மனைவியும், சரஸ்வதி (France), நடராஜா (Canada), தியாகராஜா (ஓய்வுபெற்ற இலங்கைவங்கி உதவிமுகாமையாளர் France), ராஜேஸ்வரி (இந்திரா) Colombo), லட்சுமிதேவி (France), மகேஸ்வரி (Colombo) ஆகியோரின் அன்புத் தாயாரும் இராஜேந்திரம் (France), பத்மாம்பிகை (Canada), அன்னராஜா (Colombo), விஜயரட்ணம் (France), தெய்வேந்திரன் (ஓட்டோகூல் எஞ்சினியர்ஸ் Colombo) ஆகியோரின் மாமியாரும்

ஜாழினி, அஷோக்கா, குமணா, நிஷான், துஷான், ஷமீனா, அமித்தா, அனுசியா, சுகந்தினி, சுகந்தன், சுதர்ஷன், சுஜேந்திரன், உமேஸ்கரன், நிதர்ஷா, கார்த்திகன், ஆகியோரின் அன்பு பேத்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் சனிக்கிழமை (17.04.2004) அன்று மாலை 2.00 மணிக்கு பொரளை ஜெயரட்ண மலர்சாலையில் கிரியைகள் நடைபெற்று தகனக் கிரியைக்காக பொரளை கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

**தகவல்:** K.தியாகராஜா (மகன்)

(714)

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 17.04.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.